INFLUENCE OF PLANETS ON BANIAN EXPORTERS

பனியன் ஏற்றுமதி வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் கோள்கள்

A THESIS

Submitted by

T.S.R. RAMAKRISHNAN
(Reg. No.D15AS503)

in partial fulfillment for the award of the Degree

of

DOCTOR OF PHILOSOPHY



DEPARTMENT OF ASTRO SCIENCE

FACULTY OF ARTS AND SCIENCE

BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

CHENNAI 600 073.

DECEMBER 2019

BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled "**INFLUENCE OF PLANETS ON BANIAN EXPORTERS**" is the bonafide work of **Mr. T.S.R. RAMAKRISHNAN, (REGISTER No. D15AS503)** who carried out the research under my Supervision.

Certified further, that to the best of my knowledge the work reported herein and in the Publications by the Scholar does not form any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occation of thesis of any other candidate.

SUPERVISOR.

Signature of the Supervisor with official Seal.

JOINT SUPERVISOR.

(if any)
Signature of the Joint-Supervisor with official Seal.

DECLARATION

I declare that this synopsis entitled "**INFLUENCE OF PLANETS 0N BANIAN EXPORTERS**" is an original and bonafide work done by my own in the partial fulfillment of the requirement for the award of the degree of Doctor of Philosophy and submitted to the **Department of Astrology, Faculty of Arts and Science**, Bharath Institute of Higher Education and Research, was carried out under the supervision of **Dr. T. Mahalakshmi,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, is entirely original and has not been submitted for any degree or diploma earlier.

I further declare that this thesis does not form of any other thesis or dissertations on the basis of which a degree was awarded or conferred on earlier occasion on me or any other candidate.

PLACE: Chennai (T.S.R. RAMAKRISHNAN)

DATE: **(REGISTER No.D15AS503)**

BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled "**INFLUENCE OF PLANETS ON BANIAN EXPORTERS**" is the bonafide work of **Mr. T.S.R. RAMAKRISHNAN, (REGISTER No. D15AS503)** who carried out the research under my Supervision.

Certified further, that to the best of my knowledge the work reported herein and in the Publications by the Scholar does not form any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occation of thesis of any other candidate.

SUPERVISOR.

Signature of the Supervisor with official Seal.

JOINT SUPERVISOR.

(if any)
Signature of the Joint-Supervisor with official Seal.

ACKNOWLEGEMENT

I would like to thank the Honorable **Founder and Chairman Dr. S. Jagatratchagan** and **Chancellor Dr. J. Sundeep Aanand** and Honorable Managing Director **Dr. E. Swetha Sundeep Anand,** respected **Vice-Chancellor Dr. V. Kanagasabai** for giving me an opportunity to pursue research program in Bharath University. I express my gratitude to **Pro – Vice chancellor Dr. K.P. Thooyamani** and **Dean Engineering Dr. J. Hameed Hussain** for providing constant support to submit this thesis in time.

I would like to thank **Dr. M. Sundararajan,** Dean – R & D to fecilitate to submit the synopsis of my research work successfully. I wish to place on record my deep sense of gratitude and heart-felt thanks to **Dr. M. Prem Jeyakumar**, Controller of examinations for giving valuable suggestions.

It is great pleasure to express my deep sense of gratitude to my Supervisor **Dr. T. Mahalakshmi,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, for her valuable suggestion and guidance and encouragement at every stage of work.

A special thanks to my family. Words cannot express how grateful I am to my parents for the sacrifice that you've made on behalf. I would like to express appreciation to my beloved wife R Bharathi, and my friends for their untiring efforts and constant support in presenting this study successfully.

Name of the Scholar

T.S.R. RAMAKRISHNAN

நன்றியுரை

'பனியன் ஏற்றுமதி வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் கோள்கள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்ய எனக்கு அனுமதி வழங்கிய சென்னை பாரத் பல்கலைக்கழக மேதகு நிறுவனர் (Chairman) முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும், வேந்தர் (Chancellor) முனைவர் ஜெ. சந்தீப் ஆனந்த் அவர்களுக்கும், நிர்வாக இயக்குநர் (Managing Director) திருமதி முனைவர் ஈ. ஸ்வேதா சந்தீப் ஆனந்த் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன்.

துணை வேந்தர் முனைவர் வி. கனகசபை அவர்களுக்கும், இணைதுணை வேந்தர் முனைவர் கே. பி. தூயமணி அவர்களுக்கும், பதிவாளர் முனைவர் திரு. எஸ். பூமிநாதன் அவர்களுக்கும், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் திரு. எம். பிரேம் ஜெயகுமார் அவர்களுக்கும், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை புலமுதல்வர் முனைவர் எம். சுந்தர்ராஜன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது சோதிட ஆய்வுக்கு வழிகாட்டியாக விளங்கிய சோதிடவியல்துறைப் பொறுப்பு முனைவர் பேரா. தி மகாலட்சுமி, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி., அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வுக்கான சாதக விவரங்களைக் கொடுத்துதவிய பின்னலாடை முதலாளிகள் அனைவருக்கும், சாதகங்களைச் சேகரிப்பதற்குப் பல்வேறு வகையில் உதவி செய்த நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகும்.

தமிழகத்தின் முதன்மையான கோவை மத்திய நூலகத்தினருக்கும், கோவை கற்பகம் பல்கலைக்கழக நூலகத்தினருக்கும், திருப்பூர் மாவட்ட மைய நூலகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இவ்வாய்வுக்கு உதவி செய்த என்னுடன் பயின்று வரும் ஆய்வாளர்களுக்கும், சோதிட ஆலோசனைகள் வழங்கிய அன்பு

பெரியோர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இவ்வாய்வைச் சிறந்த முறையில் தொகுத்து வழங்க உதவிய முனைவர்பட்ட ஆய்வாளர் எஸ். கோபிநாத் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

இவ்வாய்வை நல்லமுறையில் வடிவமைத்துக் குறித்த காலத்தில் தந்து உதவிய சென்னை பிரிண்ட் அச்சகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஆ. இ.	: ஆண்டு இல்லை
கு	: குரு
கே	: கேது
சந்	: சந்திரன்
சுக்	: சுக்கிரன்
சூரி	: சூரியன்
செ	: செவ்வாய்
தொ.ஆ.	: தொகுப்பு ஆசிரியர்
ப	: பக்கம்
பக்	: பக்கங்கள்
பு	: புதன்
மொ.பெ.	: மொழி பெயர்ப்பு
ரா	: இராகு
ரா	: இராசி
லக்	: இலக்கினம்

பொருளடக்கம்

INFLUENCE OF PLANETS ON BANIAN EXPORTERS

பனியன் ஏற்றுமதி வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் கோள்கள்

A THESIS

Submitted by

T.S.R. RAMAKRISHNAN
(Reg. No.D15AS503)

in partial fulfillment for the award of the Degree

of

DOCTOR OF PHILOSOPHY



DEPARTMENT OF ASTRO SCIENCE

FACULTY OF ARTS AND SCIENCE

BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

CHENNAI 600 073.

DECEMBER 2019

ஏற்றுமதித் தொழில் மேம்பட்டு இருக்கும். 2ஆமிடம் தனஸ்தானம், 5ஆமிடம் பூர்வ, புண்ணியஸ்தானம், 9ஆமிடம் பாக்கியஸ்தானம் மற்றும் 12ஆமிடம் அயல்தேச வர்த்தகம் அல்லது அயல் தேசப் பயணம் செய்தல் ஆகியவற்றைக் குறிக்கும் பாவகமாகும். இப்பாவகங்களில் சுக்கிரன் மற்றும் சந்திரன் மொத்தம் 23 சாதகங்களில் பங்கு பெறுவது சுக்கிரன் மற்றும் சந்திரனின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

விதிஎண்.5.இன்படி பத்தாமதிபதி நின்ற நவாம்சாதிபதிக் கோளாகச் சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு மொத்தம் 07 சாதகங்களில் இருப்பது இக்கோள்களின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் கண்டறிந்தவை :

1. சுக்கிரன், சந்திரன், கேது, இராகு பத்தாம் பாவகத்துடன் தொடர்பு பெற்ற பனியன் ஏற்றுமதியாளர்கள் 74 சாதகங்களில் இருக்கிறது.

2. சுக்கிரன், சந்திரன், கேது இலக்கின பாவகத்துடன் தொடர்பு பெற்ற பனியன் ஏற்றுமதியாளர்கள் 86 சாதகங்களில் இருக்கிறது.

3. சுக்கிரன், சந்திரன், கேது பதினோராம் பாவகத்துடன் தொடர்பு பெற்ற பனியன் ஏற்றுமதியாளர்கள் 40 சாதகங்களில் இருக்கிறது.

ஆய்வுப் பயன்

பயன் 1 : ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களில் 3 விதிகளிலும் 100க்கு 85.0 விழுக்காடு சாதகர்கள் பனியன் ஏற்றுமதியாளர்களாகத் தொழில் செய்வதால் பனியன் ஏற்றுமதித் தொழிலுக்குச் சுக்கிரன், சந்திரன், கேது, இராகு ஆகியவை இலக்கினத்தில் இருப்பவர்களும், பத்தாம் பாவத்தில்

அமையப் பெற்றவர்களும், பதினோராம் பாவத்தில் அமையப் பெற்றவர்களும் மிகவும் ஏற்றவர்கள் என்னும் முடிவுக்கு வரலாம்.

பயன் 2 : துணைமை விதிகளான 4, 5 ஆகியவற்றில் 100க்கு 15.0 விழுக்காடு சாதகர்கள் பனியன் ஏற்றுமதியாளர்களாகத் தொழில் செய்வதால் கால, தேச, வர்த்தமானத்தின்படி பனியன் ஏற்றுமதித் தொழில் செய்பவர்கள் என்னும் முடிவுக்கு வர முடிகிறது. சுக்கிரன், சந்திரன், கேது, இராகு இலக்கினம், பத்தாம் பாவகம், பதினோராம் பாவகத் தொடர்பு 200 சாதகங்களில் (100%) இருப்பதை அறியமுடிகிறது. இது ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தலைப்பை உறுதி செய்கிறது.

மேற்கண்ட ஆய்வு முடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களிலிருந்தும் பெறப்பட்டது ஆகும். இதுவே ஒரு தீர்மானமான முடிவல்ல. இந்த ஆய்வு முடிவுகளை மேலும் பலர் ஆய்வு செய்து இதனை உறுதிப்படுத்தவும், சிறிய அளவிலான மாற்றங்களை கொணரவும் இந்த ஆய்வு ஓர் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இவ்வாய்வு முடிவுகளை மேலும் பலர் ஆய்வு செய்யும்போது இவ்வாய்வு முடிவுகளில் சிறிய அளவிலான மாற்றம் மட்டுமே ஏற்படக்கூடும்.

முன்னுரை

இந்தியாவில் பழங்காலம் தொட்டே மக்கள் சோதிடத்தின் மூலமாகத் தங்களுடைய எதிர்காலப் பலன்களை அறிந்து வந்துள்ளதைத் தகவல்கள் கூறுகின்றன. ‘ஜ்யோதிஷம்’ என்ற சொல் ஜோதி என்ற வேர்ச் சொல்லிலிருந்து விரிவது. வான்வெளியின் ஒளி என்பது இதன் பொருள். வானநூலுக்கும், சோதிடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இன்று மனிதன் நடத்தும் விண்வெளி விந்தைகளுக்கு அடிப்படையாய், அஸ்திவாரமாய், முன்னோடியாய் சோதிடசாத்திரம் திகழ்கிறது.

அகத்திருளை நீக்கி மனிதனின் ஆணவத்தையும் அகங்காரத்தையும் அகற்றி ‘வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது’ என்று வள்ளுவனின் திருக்குறளை அன்றாடம் நினைவூட்டி ஊழ்வினை எவ்வாறெல்லாம் அலைக்கழிக்கிறது என்பதை உணர்த்தி, விதியை மதியால் மெல்ல, மெல்ல வென்று அடுத்த பிறவியிலாவது நன்மையை நோக்கி நடக்க வழிகாட்டும் ஒளிவிளக்கு சோதிடம். எனவே மனிதவாழ்வில் அன்று முதல் இன்று வரை சோதிடம் ஒரு பெரும் முக்கியப் பங்கை ஆற்றி வருகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சோதிடம் என்பது ஒருவரின் வாழ்க்கையைப் பற்றி விளக்கமாக முன்னதாகவே கூறும் ஒரு சாத்திரம் ஆகும். கணிதசாத்திரம் இதன் அடிப்படையாகும். இராசி மண்டலத்தில் உட்பட்டு இருக்கும் ஒன்பது கோள்கள் யாவும் அவற்றின் அசைவுகளின் காரணமாய் இருக்கக் கூடிய இடத்திற்கும், அவற்றின் சக்திக்கும் தகுந்தவாறு உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்கு அந்தந்த கோள்களுக்குக் குறிப்பிட்டுள்ள காரகத்துவத்துக்கும், பாகத்திற்கும் சில சக்திகளைப் பிறக்கும் சமயம் கொடுக்கின்றது. இவை யாவற்றையும் மற்றும் ஒவ்வொரு அம்சங்களையும் கணிதம் மூலமாக நன்கு ஆராய்வதுதான் சாதக கணிதம் ஆகும்.

மனிதன் தன் பரம்பரை மற்றும் வளரும் சூழ்நிலைகளால் கட்டுப்படுத்துவதாகச் சொல்வதுண்டு. ஆனால் சோதிட சாத்திரம் அவன் பிறக்கும் போதுள்ள கோள் நிலைகளால் கட்டுப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இந்தக் கோள்களே நமது வாழ்வின் அடிப்படைச் சக்திகள். இவற்றோடு நட்சத்திரம், இராசி, பாவங்கள் போன்ற அனைத்தும் தொடர்பு பெறுகின்றன.

ஒருவருடைய சாதகத்தில் பத்தாம் வீட்டை வைத்துத்தான் அவருடைய தொழில் நிர்ணயம் செய்யப்படுகிறது. தனஸ்தானம் எனப்படும் இரண்டாம் வீட்டதிபதி, இலாபஸ்தானம் எனப்படும் பதினோராம் வீட்டதிபதி இவர்கள் பலம் பெற்று இருந்தாலும் செய்யும் தொழிலில் முன்னேற்றமடைந்து செல்வந்தராக இருக்கும் யோகம் ஏற்படுகிறது.

சகுனத்தின் அடிப்படையில் தொடங்கிய எதிர்காலப் பலன் கூறும் முறை, கால முன்னேற்றத்தின் அடிப்படையில் வானசாத்திரம் முதலில் வளர்ச்சி பெற்றுப் பின்னர் அது சோதிடவியலாக உருமாறியது. இந்த உருமாற்றம் மேல்நாட்டுச் சோதிடத்தில் மெசபடோமியா, பாபிலோனியா, சால்தியா, கிரேக்கம், எகிப்து, சீனா, அரேபியா போன்ற நாடுகளின் வானசாத்திர வளர்ச்சியும் அத்துடனான சோதிடசாத்திர வளர்ச்சியும் காணப்படுகிறது.

சோதிடவியலின் அடிப்படை உண்மைகள் முற்காலம், தற்கால வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ள கோட்பாடுகளேயாகும். இக் கோட்பாடுகளின்படி முற்றுப் பெற்ற சோதிடப்பலன்கள் கூறப்படுகிறது.

ஆய்வுப்பொருள் - விளக்கம்

ஆடை என்பது மானுட வாழ்விற்கு இன்றியமையாத ஒரு நாகரீகப் பொருளாக விளங்குகிறது. ‘ஆடை இல்லா மனிதன், அரை மனிதன்’ என்ற மூதுரையும் ஆடையின் அவசியத்தையும், தேவையையும் தெரிவிக்கிறது. அறிவு தோன்றியது முதல் மானுடம் தனது ஆடையாக இயற்கையாகக் கிடைத்த செடி, கொடி,

இலைகள் போன்றவற்றை அப்படியே பயன்படுத்தி வந்துள்ளனர். காலங்கள் மாற, மாற புதிய கண்டுபிடிப்புகள் தோன்றத், தோன்ற அவனுக்கு ஆடை நெய்யும் அறிவு கிடைக்கப் பெற்றது. அதன் வழியாக மின் தொடர்பு இல்லாத கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு ஆடைகள் நெய்யப்பட்டன. பின்னர் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் மின்தொடர்புக் கருவிகள் மூலம் ஆடைகளின் உற்பத்தி மானுடத் தேவையை விடக் கூடுதலாகச் செயல்படுத்தப்பட்டன. அதனால் ஆடை என்பதில் தன்னிறைவுடன் மானுடம் தற்பொழுது வாழ்ந்து கொண்டுள்ளது.

உடலை மறைப்பதற்கு ஆடை என்றால் உடலில் உள்ள சில முக்கிய உறுப்புகளை மறைப்பதற்குத் தனித்த ஆடைகள் தயார் செய்யப்பட்டன. பொதுவாக இவ்வகை ஆடைகள் குளிர்ப் பகுதி நாடுகளிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தன. தற்பொழுது உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் அவர்களின் தேவைக்கேற்ப ஆடைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை பின்னலாடை உள்ளாடைகள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பின்னலாடை உள்ளாடைகளைத் தமிழகத்தில் திருப்பூர் மாநகரில் பெரும்பகுதி முதலாளிகள் உற்பத்தி செய்து வருகின்றனர்.

இவ்வாய்வில் பனியன் ஏற்றுமதித் தொழிலில் உள்ள பிரச்சினைகள், வங்கிக்கடன் பிரச்சினை ஆகியவை ஏற்படுவதற்குப் பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களில் கோள்களின் தொடர்புகள் எவ்வாறு உள்ளது என ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

சோதிடநூல்களில் தொழில் முறையை வரையறுப்பதற்கு என்று விதிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை எடுத்துக்கொண்டு, பனியன் ஏற்றுமதி செய்பவர்களின் சாதகங்களில் கோள்களின் தொடர்புகள் எவ்வாறு உள்ளன என்பதைக் கண்டறிவதே ஆய்வு நோக்கமாகும்.

பனியன் ஏற்றுமதித் தொழில் - விளக்கம்

பனியன் ஏற்றுமதித் தொழிலைச் செய்பவர்கள் சாதகங்களில் சுக்கிரனின் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதையும், பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான காரகக்கோள்கள் சந்திரன், கேது மற்றும் இராகு எந்த அளவுக்குத் தாக்கம் ஏற்படுத்துகிறது என்பதையும், எந்த இலக்கினங்களில் பனியன் ஏற்றுமதியாளர்கள் அதிகம் உள்ளனர், அவர்களுக்கு இலக்கின பாவகம், தொழில் பாவமான பத்தாம் பாவகம், இலாப பாவமான பதினோராம் பாவகம் ஆகியவை எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்வதே இதன் நோக்கமாகும். சோதிடநூல்களில் பனியன் தயாரிப்புத் தொழிலுக்குச் சுக்கிரனும், ஏற்றுமதித் தொழிலுக்கு சந்திரன், கேது, இராகு ஆகிய கோள்களும் காரகக் கோள்களாகக் குறிப்பிடப்படுகிறது. இவற்றில் சுக்கிரனே பின்னலாடைத் தொழில் நுட்பத்தைக் குறிக்கின்றது. சந்திரன் மற்றும் கேது ஆகியவை பனியன் ஏற்றுமதித் தொழிலில் ஏற்படும் முன்னேற்றம், இராகு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் வளர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கின்றது.

பனியன் ஏற்றுமதித் தொழில் புரிவதற்குச் சுக்கிரன், சந்திரன், கேது, இராகு ஆகிய நான்கு கோள்களின் வலிமை தேவை. பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களில் சுக்கிரன், சந்திரன், கேது, இராகு ஆகிய கோள்களின் தாக்கங்களை ஆராய்ந்து எந்த அளவிற்கு அந்தத் தாக்கங்கள் பனியன் ஏற்றுமதித் தொழில் புரிவதற்குத் துணை புரிந்துள்ளன என்று ஆய்வு செய்யப்பட உள்ளது. இந்த ஆய்வின் உண்மைகள் மூலம் பழங்காலச் சோதிட நூல்களில் உள்ள கருத்துக்களை மேலும் உறுதி செய்ய இயலும்.

ஆய்வுக் கருதுகோள்

சோதிடத்தில் பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதில் பல்வேறு

முறைகளினால், பல்வேறு வகையான பின்னலாடை முதலாளிகளின் சாதகங்களை ஒப்பீடு செய்து ஆராய்ந்து இம்முறையைத் துல்லியத் தன்மையுடன் எடுத்துக்காட்டுவது. சோதிட மூலநூல்களில் பனியன் ஏற்றுமதியாளர்களின் தொழில் வளர்ச்சி பற்றி விதிகள் ஏதும் இல்லை. இன்றைய சூழ்நிலையில் பனியன் ஏற்றுமதியாளர்களின் தொழில் வெற்றிக்கான தகுதியை நிருபிக்க இந்தச் சோதிட ஆய்வு பெரிதும் துணை புரியும். எக்கோள்களின் தொடர்பினால் பனியன் ஏற்றுமதியாளர்கள் எவ்வாறு உருவாகிறார்கள் என்பது சாதக ரீதியாக ஆராயப்பட்டுள்ளது. சோதிட மூலநூல்களைக் கொண்டு பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களில் உரிய கோள்களையும், பாவங்களையும் இணைப்பதே கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

சோதிடத்தில் பின்னாடைத் தொழில் பற்றியும், பனியன் ஏற்றுமதித் தொழில் பற்றியும், சோதிடத்துடன் தொடர்புபடுத்திப் பனியன் ஏற்றுமதியாளர்கள் எவ்வாறு உருவாகிறார்கள் என்று அறியவும் இந்த ஆய்வு வேறு எங்கும் மேற்கொள்ளப்படாத நிலையில், இங்குப் பழம்பெரும் சோதிட நூல்களையும், தற்காலத்தில் புதிய, புதிய சிந்தனைகளோடு வெளிவந்துள்ள சோதிட நூல்களையும் ஆதாரமாக வைத்தும், நவீனகாலச் சோதிட வளர்ச்சியையும் கருத்தில் கொண்டும் மேற்கூறிய தலைப்பில் இந்த ஆய்வு செய்யப்பட்டு உள்ளது.

ஆய்வு முன்னோடிகள்

பல்வேறு பொருண்மைகளில் யூகவிதிகளை உருவாக்கிக் கொண்டு அவற்றை மெய்ப்பிக்கும் வகையில் பல ஆய்வுகள் வந்துள்ளன. அந்த வகையில் இந்த ஆய்வும் அமைந்துள்ளது. இதே தலைப்பில் மேலாய்வு செய்ய வசதியாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட சாதக அமைப்பைப் பெற்ற சாதகர்கள் மட்டும் பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கு வருவதற்குக் காரணம்

என்ன, இதற்கான அவர்களது சாதக அமைப்பு என்ன என்பதை சோதிடத்தின் மூலம் அறிந்து கொண்டால் பின்வரும் இளைய தலைமுறையினர் இந்தத் துறையில் சிறந்து விளங்குவார்களா எனத் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். அவர்களது மனநிலைக்கும், வாழ்வுநிலைக்கும், தொழில் சார்ந்த உணர்வு நிலைக்கும், உரிய வாய்ப்பையும், சூழ்நிலைகளையும் அறிந்து அதன்படி செயல்படச் சோதிடம் ஒரு பெருந்துணையாக அமையும் என்னும் மேலான நோக்கத்தில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு அணுகு முறைகள்

இந்த ஆய்விற்காகப் 200 பனியன் ஏற்றுமதியாளர்களை நேரில் சந்தித்து அவர்களிடமிருந்து சாதகத் தகவல்கள் சேகரம் செய்யப்பட்டன. அந்த சாதகங்களில் சுக்கிரன், சந்திரன், இராகு மற்றும் கேது கோள்கள் மற்றும் இலக்கினம், பத்து மற்றும் பதினோராம் பாவகங்களின் பங்களிப்பு போன்ற அடிப்படையான தகவல்கள் பகுக்கப்பட்டன. அதன் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்கான கீழ்காணும் ஆய்வு அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. விளக்க அணுகுமுறை திறனாய்வு
2. அடிப்படை முறை திறனாய்வு
3. விதிமுறை திறனாய்வு
4. பகுப்பாய்வு அணுகுமுறை
5. ஒப்பாய்வு முறை
6. விளக்கமுறை ஆய்வு

1. விளக்க அணுகுமுறை திறனாய்வு

சோதிட நூல்களில் சொல்லப்பட்ட கருத்துக்களையும், அதன் உண்மைத்தன்மை மற்றும் வெவ்வேறு பண்புகளையும் எடுத்துக்கொண்டு இவ்வாய்வு சாதகங்களோடு புதிய வடிவமைப்பில் வெளிப்படுத்துகின்றன.

2. அடிப்படைமுறை திறனாய்வு

சோதிடநூல்களில் சொல்லப்பட்ட விதிமுறைகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு புதிய விதிமுறைகளையும், முடிவுகளையும் உருவாக்குவது கோட்பாட்டு ஆய்வு முறையாகும். இந்த ஆய்வு முறையும் இதற்கு பயன்படுத்தப்படுகிறது.

3. விதிமுறை திறனாய்வு

சோதிடவியலின் அடிப்படைத் தன்மைகள் மாறாமல் புதிய விளக்கங்களுடன் விதிமுறைகளை உருவாக்கி இந்த விதிகள் தற்காலத்தில் உள்ள சோதிட முறைகளோடு எந்த அளவிற்கு ஒத்துப் போகிறது எனக் கண்டறிய முற்படுவது. மேலும் தரவுகளின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்டுள்ள முறையிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

4. பகுப்பாய்வு அணுகு முறை

200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்கள் இலக்கினவாரியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வுப் பொருளைத் பகுத்து ஆராயும்போது பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. ஒப்பாய்வு முறை

சேகரம் செய்யப்பட்ட 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களும் இலக்கினவாரியாக வகைப்படுத்தப்பட்டுச் சுக்கிரன், சந்திரன், கேது, இராகு கோள்களின் காரகத்துவம் அனைத்துப் பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகத்திற்கும் பொருந்துகிறதா என்பதை ஆராயும்போது ஒப்பாய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. விளக்க முறை ஆய்வு

ஒப்பீடு செய்யப்பட்ட 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களின் செய்திகளின் ஆய்வுப் பொருளை விளக்கி எடுத்துரைக்கும்போது விளக்கமுறை ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வு இடர்பாடுகள்

இவ்வாய்வு சோதிடத்துறையில் முதல்நிலை ஆய்வு என்பதால், இவ்வாய்வைச் சோதிட ஆய்வுமுறையில் மேற்கொள்ளும்போது பல இன்னல்களையும், இடர்பாடுகளையும் சந்திக்க நேரிட்டது. அவற்றையும் தாண்டிக் களப்பணிமூலம் 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகத் தகவல்களை திரட்டியதில் சாதகத் தகவல்களைக் கொடுக்கத் தயங்கியது, சரியான பிறந்த நாள், நேரம் தெரியாமை போன்ற இடர்பாடுகள் ஏற்பட்டது.

ஆய்வின் சான்றாதாரங்கள்

களப்பணி வழியாக வினாநிரல் பட்டியல் அடிப்படையில் திரட்டப்பட்ட 200 பனியன் ஏற்றுமதியாளர்களின் சாதகங்களே முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. சோதிட மூலநூல்கள், வழிநூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையதளச் செய்திகள், பழைய சோதிட நூல்களில் கூறப்பட்ட ஏற்றுமதித் தொழில் சம்பந்தமானச் செய்திகள், சில பனியன் எற்றுமதியாளர்களின் நேர்காணல் ஆகியவை துணைமைச் சான்றாதாரங்களாகின்றன.

ஆய்வின் பயன்பாடு

1. ஒரு சாதகத்தைப் பார்த்து இந்தச் சாதகர் பனியன் ஏற்றுமதித்துறையில் சிறந்து விளங்குவார் என்றும்,

2. இத்துறைக்கான நிபுணத்துவமும், நிர்வாகத்திறமையும் இவர் பெறுவார் என்றும் அறிவுறுத்தலாம்.

3. பாவங்கள் தொடர்பும், கோள்களின் தொடர்பும், பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான தொடர்புகளைக் கண்டறிந்து பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான கல்வித் தகுதியை இந்த ஆய்வின் மூலம் கண்டறியலாம்.

4. வருங்கால உலகிற்குச் சோதிட ரீதியாக பனியன் ஏற்றுமதித் தொழில் பற்றிய செய்திகளைக் கண்டறிந்து தெரிவித்து, அதன்

மூலம் பனியன் ஏற்றுமதித் தொழில் செய்யும் முடிவை எடுக்க இந்த ஆய்வு பயன்படலாம்.

அடிக்குறிப்புகள்

ஆய்வு செய்யப்படும்போது ஆங்காங்கே நிறுவப்பட்ட கருத்துகளுக்கு விளக்கங்கள் கூறித் தேவையான இடங்களில் அந்தந்தப் பக்கத்தின் கீழேயே அடிக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகக் கீழ்க்கண்ட நான்கு இயல்களைக் கொண்டதாகத் தொகுக்கப்படுகிறது. அவையாவன :

1. சோதிடமும் பனியன் ஏற்றுமதித் தொழிலின் வரலாறும், கோள்களின் காரகத்துவமும்
2. கோள்களின் பாவகச் செயல்களும், தொழில்களும்
3. பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான ஆய்வு விதிகளும், பகுப்பாய்வும்
4. திறனாய்வு

முடிவுரை, துணை நூற்பட்டியல், பின்னிணைப்பு என ஆய்வுத் தலைப்புகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் பகுப்பாய்வு மற்றும் திறனாய்வுமூலம் கண்டறியப்பட்ட தொகுப்புகள் முடிவுகளாகத் தரப்பட்டுள்ளன.

முதல் இயல்

‘சோதிடமும் பனியன் ஏற்றுமதித் தொழிலின் வரலாறும், கோள்களின் காரகத்துவமும்’ என்ற தலைப்பிலான முதல் இயலில் பின்னலாடை தோன்றிய வரலாறு, பனியன் ஏற்றுமதித் தொழிலின் சார்புத் தொழில்கள் விவரம், அவற்றின் எண்ணிக்கை விவரம், பன்னிரு கோள்களின் பொதுத்தன்மைகள், பின்னலாடைத் தொழிலுக்கான காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன், கேது,

இராகு ஆகியவற்றின் காரகக் குணங்கள் ஆகியவை பற்றி விளக்கப் பெற்றுள்ளது.

இரண்டாம் இயல்

'கோள்களின் பாவகச் செயல்களும், தொழில்களும்' என்ற தலைப்பிலான இரண்டாம் இயலில் பன்னிரு கோள்களின் பாவகச் செயல்கள், பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன் கேது மற்றும் இராகு ஆகியவற்றின் தொழில்கள், பன்னிரு பாவகம் குறிப்பிடும் தன்மைகள், இலக்கின, பத்து மற்றும் பதினோராம் பாவகங்களில் சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு கோள்கள் நிற்பதால் ஏற்படும் பயன்கள், பன்னிரு பாவங்களில் சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு இருப்பதால் ஏற்படும் பயன்கள், பன்னிரு இலக்கினப்படியான பனியன் ஏற்றுமதியாளர்கள் குணங்கள் போன்றவை பற்றி ஆய்வு விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டு உள்ளன.

மூன்றாம் இயல்

'பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான ஆய்வு விதிகளும், பகுப்பாய்வும்' என்ற தலைப்பில் உள்ள மூன்றாம் இயலில் இயலில் சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகிய கோள்களின் அமைப்புகள், கோள்களின் வலிமைகள், கோள் நின்ற நட்சத்திர அதிபதியின் நிலை, இராசியில் இணைவு பெற்ற கோள்கள், நவாம்சத்தில் இணைவு பெற்ற கோள்கள் மற்றும் பன்னிரு பாவகத் தொடர்புகள் ஆகியவை பற்றி ஆராயப்பட்டு உள்ளது.

பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான முதன்மை ஆய்வு விதிகள் :

விதி எண். 1

இலக்கினத்தில் சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகியவை இருத்தல்.

விதி எண். 2

பத்தாம் பாவத்தில் சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகியவை இருத்தல்.

விதி எண். 3

பதினோராம் பாவத்தில் சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகியவை இருத்தல்.

விதி எண். 4

சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகியவை 2, 5, 9, 12ஆம் பாவங்களில் இருத்தல் / பார்த்தல்.

விதி எண். 5

பத்தாம் பாவாதிபதி நின்ற நவாம்சாதிபதி சுக்கிரன், சந்திரனுடன் தொடர்புபடுதல்.

நான்காம் இயல்

'திறனாய்வு' என்ற தலைப்பிலான நான்காம் இயலில் 1 – 10 – 11ஆம் பாவங்களுடன் சுக்கிரன், சந்திரன், இராகு தொடர்பு பெறும் நிலைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 200 சாதகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் கிடைத்த முடிவுகள் தொகுத்து தரப்பட்டுள்ளது. பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான யூகம் செய்யப்பட்ட ஆய்வு விதிகளில் எந்த விதியின்படி பனியன் ஏற்றுமதித் தொழில் அமைந்துள்ளது என்பதற்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது.

ஆய்வு நிலை

சுக்கிரன், சந்திரன், இராகு, கேது மற்றும் இலக்கினம், பத்து, பதினோராம் பாவகங்கள் இராசி, பாவக நிலையைக் கொண்டே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 200 சாதகங்களில் எடுத்துக்காட்டாகப் பன்னிரு இலக்கினங்களுக்கும் தலா 4 சாதகம் வீதம் நாற்பத்து எட்டு சாதகங்களுக்கான இராசி, நவாம்சம், தசா, புத்தி இருப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வின் எல்லை கருதி 1. கோள்களின் அஸ்தங்கம், அட்டவர்க்கம், சட்பலம், சாரபலம், காலபலம், இட்டபலம், போன்றவை ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

2. உபநட்சத்திராதிபதி, உபஉபநட்சத்திராதிபதி வளர்நிலை சாதகமுறை, ஆயுர்தாயமுறை போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

3. பல்வேறு விதமான தசாமுறைகளில் விம்சோத்திரி தசாமுறை மட்டுமே ஆய்வில் கையாளப்பட்டுள்ளது. ஆய்வுக்குத் துணைபுரிந்த சாதகங்கள் மற்றும் ஆய்வு விளக்க வரைபடங்களும் தரப்பட்டுள்ளது.

முடிவுரை

முடிவுரையில் ஒவ்வொரு இயலின் தொகுப்புரைகளின்மூலம் பெறப்பட்டுள்ளவை தொகுக்கப்பட்டு அதன்மூலம் இறுதியான முடிவும் தரப்பட்டுள்ளது.

இயல் - 1



பனியன் ஏற்றுமதித் தொழிலின் வரலாறும், கோள்களின் காரகத்துவமும்

இயல் - 1

பனியன் ஏற்றுமதித் தொழிலின் வரலாறும், கோள்களின் காரகத்துவமும்

1.0. அறிமுகவுரை

இவ்வியலில் பின்னலாடை தோன்றிய வரலாறு, பனியன் ஏற்றுமதித் தொழிலின் சார்புத் தொழில்கள் விவரம், அவற்றின் எண்ணிக்கை, பன்னிரு கோள்களின் பொதுத்தன்மைகள், பின்னலாடைத் தொழிலுக்கான காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன், கேது, இராகு ஆகியவற்றின் காரகக் குணங்கள் ஆகியவை பற்றி விளக்கப் பெற்றுள்ளது.

1.1. திருப்பூரில் பனியன் தொழில் தோன்றிய வரலாறு

1589ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வில்லியம் லீ என்பவர் முதல் பின்னலாடை இயந்திரத்தை கண்டு பிடித்துத் தொழில் ரீதியாக இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்தார். 1893ஆம் ஆண்டு கொல்கத்தாவில் கித்தார் போர் துறைமுகப்பகுதியில் இந்தியாவிலேயே முதன் முதலாகப் பின்னலாடைத் தொழில் தொடங்கப்பட்டது. அன்றுமுதல் பனியன் தொழில் கல்கத்தாவைச் சுற்றிலும் பிரிவினையாகாத கிழக்கு வங்காளத்தின் நாராயண்கஞ்ச் மற்றும் பா.ஃபனா ஆகிய இடங்களிலும் 1945-50ஆம் ஆண்டுக்குமேல் தென்னிந்தியாவின் திருப்பூரிலும் வளரத் துவங்கியது. இந்தியாவின் பல இடங்களில் பின்னர் இத்தொழில் சிறிது சிறிதாகப் பரவத் துவங்கியது.

பனியன் மற்றும் இதைச் சார்ந்த நிறுவனங்களில் மொத்தம் சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருப்பூர் நிறுவனங்களில் அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் வட மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இங்கு வந்து வேலை செய்து வருகிறார்கள். தொழிலாளர்கள் பற்றாக்குறையால் யார் வேலைக்கு வந்தாலும் அவர்களுக்கு வேலையில்லையென்று கூறுவதில்லை. வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரப் பலகை திருப்பூரில் பல வீதிகளிலும் காணமுடியும்.

திருப்பூரின் இன்றைய வளர்ச்சிக்கு முக்கியக் காரணம் அன்று திறமையான தொழிலாளர்களாக இருந்தவர்களின் கடுமையான உழைப்புதான். அவர்களில் பலரும் இன்று முதலாளிகளாக மாறியுள்ளனர். 1950-51ஆம் ஆண்டுகளில் திருப்பூரில் பிரமுகராக இருந்த எஸ்.ஏ. காதரின் உறவினர்கள் கேரள மாநிலம் கண்ணனூரில் வசித்து வந்தனர். அவர்கள் பம்பாய், கல்கத்தா, டில்லி நகரங்களில் துணி வியாபாரம் செய்து வந்தனர். அப்பொழுது வடநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் பனியன் உள்ளாடைகள் தயாரிக்கும் தொழில் திருப்பூரில் எஸ்.ஏ. காதரால் தொடங்கப்பட்டது. காதர் தனது பனியன் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு காதர் நிட்டிங் என்று பெயர் சூட்டினார். இதுவே திருப்பூர் பனியன் தொழிற்சாலையில் முதலாவதாகும்.

கோவை மாவட்டத்தில் அதிகளவு பஞ்சாலைத் தொழில் மில்கள் இயங்கி வந்த காரணத்தாலும். திருப்பூரில் பருத்தி அரைவை ஆலைகள், பஞ்சு வர்த்தகத் தொழில்கள் அதிக அளவு இயங்கி வந்தது. திருப்பூரைச் சுற்றி அதிகளவு கிராமங்கள் இருந்ததால் குறைந்த சம்பளத்தில் அதிக ஆட்கள் பனியன் தொழிலுக்குக் கிடைக்க வாய்ப்பும் இருந்தது. திருப்பூரின் தட்ப, வெப்பநிலை ஆண்டு முழுவதும் 20 முதல் 30 டிகிரி வரை ஆகும். இச்சூழ்நிலை நூல்மூலம் பின்னலாடைகள் தயாரிக்கும் தொழிலுக்கு ஏற்றதாக இருந்ததால் திருப்பூரில் படிப்படியாகப் பனியன் தொழில் தொடங்கப்பட்டு நல்லமுன்னேற்றம் எற்பட்டது.

1955ஆம் ஆண்டிலிருந்து அதிகஅளவில் வணிகர்கள் பனியன் தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டி வந்தார்கள். கோவை ஈரோடு மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கருக்கு மேலாகப் பருத்திப் பயிர் சாகுபடி செய்யப்பப்படுகிறது. இருப்பினும் மூலப்பொருளான பருத்தி விற்பனையில் திருப்பூர் முதலிடம் வகிக்கிறது. பருத்தி அரைவை ஆலைகளில், பருத்தி அரைக்கப்பட்டு பஞ்சு விதைகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட பஞ்சு கோவை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பஞ்சாலைகளால் கொள்முதல் செய்யப்பட்டன. அப்பஞ்சுகளில் பெரும்பகுதி பனியன் ஆலைகளுக்கு தேவைப்படும் நூல் கோன்களாக மாற்றம் செய்யப்பட்டுத் திருப்பூரைச் சுற்றியுள்ள பனியன் கம்பெனிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. இச்சூழல் திருப்பூர் பனியன்

தொழிலுக்கு மிகவும் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. பனியன் தொழிலைச் சார்ந்து பல்வேறு தொழில்கள் தொடங்கப் பெற்றன.

1.2. பனியன் தொழிலின் சார்புத் தொழில்களின் விபரம்

1. பனியன் அரைவு ஆலைகள் (நூல்களிலிருந்து பனியன் துணியாக மாற்றும் தொழில்)
2. சாயம் நீக்கும் ஆலைகள் (பிளீச்சிங் பாக்டரி) (உற்பத்தி செய்யப்பட்ட பழுப்பு நிற பனியன் துணிகளை வெள்ளை நிறமாக மாற்றும் தொழில்)
3. சாயம் ஏற்றும் ஆலைகள் (டையிங் கம்பெனி) (தேவைப்படும் வண்ணத்தை ஏற்றுதல்)
4. கேலண்டரிங் ஆலைகள் - வெள்ளைத் துணி அல்லது சாயம் ஏற்றிய பனியன் துணிகளை நீராவி மூலமாகக் காயவைத்து இஸ்திரி போடுதல்)
5. பனியன் பவர் டேபிள் தொழில்கள் (ஆர்டருக்கு ஏற்ப பனியன் அளவு வாரியாக வெட்டுதல், வெட்டப்பட்ட பனியன்களை பிளாட்லாக், ஓவர்லாக் இயந்திரங்களைக் கொண்டு தைத்தும் பிசிறு பார்த்தல், எண்ணெய்க்கறை எடுத்தல், ஓரம் தைத்தல், லேபிள் வைத்தல்)
6. இஸ்திரி செய்து பாக்கிங் செய்தல் (அளவு வாரியாகத் தரம் சரிபார்த்த பனியன்களை நீராவி கொண்டு தேய்த்து பாலித்தீன், அட்டை பெட்டிகளில் போடுதல்)
7. உள்ளாடைகளுக்குத் தேவையான லேபிள்கள் தயார் செய்தல்.
8. தயார் செய்யப்பட்ட உள்ளாடை, டிரங்க்ஸ் போன்றவைகளுக்கு எலாஸ்டிக் டேப் பொருத்துதல்.
9. பனியன்களுக்குத் தேவையான முகப்பு, பாக்கெட், பிரிண்டிங் போடுதல்.
10. பனியன் ஆடைகளுக்குத் தேவைப்படும் எம்பிராய்டரி, பிரிண்டிங் போடுதல்.
11. பனியன் உள்ளாடைகளுக்குத் தேவையான காஜா, பட்டன் சார்பு தொழில்.
12. விற்பனைக்கு பேக் செய்த பனியன்களை வைக்க லேபிள், அட்டைப் பெட்டி தயார் செய்தல்.

பின்னலாடைத் தொழில் சார்புத் தொழில்களின் எண்ணிக்கை விவரம்

1.	பேப்ரிகேஷன் (துணி நிட்டிங்)	-	2750 எண்ணிக்கை
2.	சாயக் கலவை	-	720 எண்ணிக்கை
3.	ஸ்டீம் லேண்டரீஸ்	-	250 எண்ணிக்கை
4.	காம்பேக்டிங்	-	300 எண்ணிக்கை
5.	ஸ்கிரீன் பிரிண்டிங்	-	300 எண்ணிக்கை
6.	எம்பிராய்டரி	-	250 எண்ணிக்கை
7.	அட்டைப் பெட்டி தயாரித்தல்	-	60 எண்ணிக்கை
8.	லேபிள் தயாரித்தல்	-	110 எண்ணிக்கை
9.	பாலிதீன் பை தயாரித்தல்	-	60 எண்ணிக்கை
10.	செக்கிங் பிரிவுகள்	-	2000 எண்ணிக்கை
11.	காஜா பட்டன்	-	250 எண்ணிக்கை
12.	தையல் மற்றும் இதர அமைப்புகள்	-	1400 எண்ணிக்கை

மேற்கண்ட சார்புத் தொழில்கள் அனைத்தும் திருப்பூரைச் சுற்றி இயங்கி வந்ததால் அவரவர் நிதிநிலை சக்திக்கு ஏற்பப் பல சார்புத் தொழில்களைத் தேர்வு செய்து திருப்பூர் என்ற ஓர் இடத்தில் பல உப தொழில்கள் தோன்றின. ஆகவே நேரடி விற்பனை செய்யக் கூடிய கம்பெனி அதிபர்கள் அந்தந்தச் சார்புத் தொழில் நிறுவனங்களிடம் தங்கள் ஆர்டரை வழங்கித் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றார்கள். மும்பை, டில்லி, கொல்கத்தா போன்ற பல வடஇந்திய நகரங்களின் மொத்த விற்பனையாளர்கள் திருப்பூரை அணுகி அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப, தேவைக்கு ஏற்ப ஆர்டர் செய்து, பனியன்களை வாங்கி விற்பனை செய்துவரும் பழக்கம் தொடர்கதையாகத் தொடங்கி இன்னும் நடந்து கொண்டு இருக்கிறது. இவர்கள் மூலமாக விற்பனை செய்யப்படும் இந்திய துணைக்கண்ட பனியன் உள்ளாடைகளின் ஆர்டர் மதிப்பீடு கீழ்க்கண்டவாறு அதிகமாகி உள்ளது.

1950	-	1955	-	250 கோடி
1055	-	1960	-	500 கோடி
1960	-	1970	-	750 கோடி
1970	-	1980	-	1250 கோடி
1980	-	1990	-	1750 கோடி
1990	-	2000	-	2000 கோடி

2000 - 2010 - 2500 கோடி

மேற்கண்ட விற்பனை வடமாநில நிறுவனங்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு (உதாரணமாக லக்ஸ், இந்துஸ்தான் லீவர் மற்றும் பெரிய துறைசார் கடை போன்ற நிறுவனங்களுக்கு) நேரிடையாக விற்பனை செய்யப்பட்டது.

இது தவிர ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளாடை, உள்வர்த்தக நிறுவனங்கள் உருவாகி, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, ராஜஸ்தான், குஜராத், கொல்கத்தா, மும்பை, டில்லி, கர்நாடகா போன்ற அனைத்து மாநிலங்களிலும் முகவர் மூலமாகவும், சில்லறைத் துணிக்கடைகள் மூலமாகவும், காட்சி அறை மூலமாகவும், பெரிய கம்பெனிகளின் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் கடந்த 25 ஆண்டுகளாகப் பனியன்கள், உள்ளாடைகள், டி சட்டைகள் போன்றவை தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்து வருகின்றனர். இந்த நேரடி விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வரும் பனியன்களின் மொத்தமதிப்பு 1955 – 1960 ஆண்டுகளில் 250 கோடியாகத் தொடங்கி தற்போது 10000 கோடியை எட்டி உள்ளது.

இந்தியத் துணைக்கண்டத்தில் விற்பனை செய்யப்படும் பனியன் போன்ற உள்ளாடைகளின் மதிப்பு தற்சமயம் ரூ.6000 கோடி முதல் ரூ.10000 கோடியாக உயர்ந்து உள்ளது குறிப்பிடத்தக்கது. சீதோஷ்ணநிலை மூலப்பொருட்கள் மிக அருகில் கிடைக்கும் சூழ்நிலை, ஆலைகளில் பணிபுரிய அபரிமிதமான எண்ணிக்கையில் பணி ஆட்கள் கிடைக்கும் வாய்ப்பு திருப்பூரில் இருந்து வருகிறது. எனவே பல்வேறு பனியன் சார்புத் தொழில்கள் செய்யக்கூடிய பனியன் நிர்வாகிகள், அதிபர்கள், பங்குதாரர்கள் ஆகியோர்களின் சாதகங்களில் அந்தக் கோள்களின் தாக்கம் காரணமாக இந்தப் பனியன் உள்ளாடை உபசார்புத் தொழில்களைத் துவங்கி நடத்திட வழிவகுத்துள்ளது என்பதை ஆய்வு செய்து அதன் காரணங்களை அறிவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

1.3. பனியன் ஏற்றுமதி வணிகம் - ஓர் அறிமுகம்

1950இல் கோவை மாவட்டத்தில் திருப்பூர் மாநகரில் பனியன் பின்னலாடைத் தொழில் எஸ்.ஏ. காதர் மூலமாகத் தொடங்கப்பட்டது. அதேபோல் கோயமுத்தூர் மாவட்டத்தில் 1.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில்

மாசிப்பட்டம், புரட்டாசிப்பட்டம் ஆகிய இரண்டு பட்டங்களிலும் பருத்திப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. கூடுதலாகப் பஞ்சாலைகள், கோவை மாவட்டத்திலும் அதை ஒட்டியுள்ள திண்டுக்கல், பழனி பகுதிகளிலும் இயங்கி வந்தன. தமிழகம் முழுவதும் விளையும் பருத்தி விற்பனையை ஊக்குவிக்கத் திருப்பூரில் அரசு ஒருங்கிணைந்த விற்பனைக்கூடம் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய தமிழகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படும் பருத்தியில் 70 விழுக்காடு திருப்பூரில்தான் விற்பனை செய்யப்பட்டன. அதனால் திருப்பூரில் 2000க்கும் கூடுதலான பருத்தி அரவை ஆலைகள் இயங்கி வந்தன.

ஓர் ஆண்டில் ஓர் இலட்சம் பேல்கள் பஞ்சு (ஒரு பேல் - 180 கிலோ) திருப்பூரில் பருத்தி அரவை ஆலைகளில் அரவை செய்யப்படுகின்றது. அதனால் பஞ்சாலைகளுக்கு, நூல்கள் தயாரிக்கத் தேவைப்படும் பஞ்சு கிடைக்கின்றது. அரவை ஆலைகள் விளைந்து வரும் பருத்தியைப் பஞ்சு, பருத்தி விதை என தனித் தனியே பிரிக்கின்றன. திருப்பூரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனியன் உற்பத்தி ஆலைகள் இயங்குகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கள் தேவைக்கு ஏற்ப, பனியன், உள்ளாடைகள் பல வண்ணங்களில், பல வடிவங்களில் தயாரிக்கப்பட்டு இருபால் மக்களின் தேவைக்காக அனுப்பப்படுகின்றது. சுமார் 10,000 கோடி அளவில் பனியன் ஆடைகள் உள்நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இதன் காரணமாகக் கோவை மாவட்டத்திற்கும், திருப்பூருக்கும் தென்னிந்தியாவின் மான்செஸ்டர், இரண்டாவது பம்பாய் என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

திருப்பூர் நகரில் பஞ்சு, நூல்கள், இதர மூலப்பொருட்கள், அதிக உற்பத்திக்குத் தேவையான அதிக வேலையாட்கள், பனியன் தொழிலுக்குத் தேவையான மிதமான தட்பவெப்ப சூழ்நிலை (20 முதல் 30 டிகிரி) காற்றின் ஈரப்பதம் (60 முதல் 70 டிகிரி) இருக்கும் காரணத்தால் பனியன் தொழில் திருப்பூரில் தொடங்குவதற்குக் காரணம் ஆகும். 1984இல் நேரடியாகப் பனியன் பின்னலாடைகள் சுமார் 200 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நல்ல அந்நியநாட்டுச் செலாவணியை இந்திய அரசுக்கு வழங்கியது. 1985 – 90ஆம் ஆண்டுகளில் சுமார் 5000 கோடி ரூபாய் மதிப்பிற்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. உள்நாட்டு வணிகச்

சந்தையில் பனியன் உற்பத்தி விற்பனையில் முன்னிலையில் திருப்பூர் இருந்து வருகிறது. ஏற்றுமதித் தேவையும் அதிகரித்து வந்ததால் ஏற்றுமதியாளர்களுக்கு அரசின் மூலம் அங்கீகாரச் சலுகைகள் உலக அளவில் நிதி மாற்றப் பிரச்சினையையும், அந்நிய செலாவணிப் பிரச்சினைகளையும் மாற்றி, ஒழுங்குபடுத்திப் பிரச்சினைகளைத் தீர்க்கத் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் 1989ஆம் ஆண்டு 102 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்டது.

தற்போது 702 உறுப்பினர்கள் உள்ளனர். சுமார் 5000 கோடி மதிப்பில் நவீனமான தானியங்கி இயந்திரங்கள் மூலம் பின்னலாடைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. 2005ஆம் ஆண்டுவரை ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு சபை (AEPC - Apparel Export Promotion Council) என்ற அரசு பொதுநிறுவனத்தின் வரைமுறைகளால் ஒதுக்கீடு முறை (Quota System) உருவாக்கப்பட்டு ஏற்றுமதி 2004ஆம் ஆண்டு டிசம்பர் வரை செய்து வந்தார்கள். 2005ஆம் ஆண்டிலிருந்து 2010 வரை சுமார் 8000 கோடியிலிருந்து மதிப்பு உயர்ந்து 12500 கோடிவரை, நேரடியாகத் திருப்பூரிலிருந்து பனியன் பின்னலாடை ஏற்றுமதிகள் உயர்ந்தது. மேற்கத்திய நாடுகளில் அதிக குளிர், குறைந்த வெப்பம் மற்றும் உள் ஆடைகளுக்கு அதிக முக்கியத்துவம் காரணமாகக் குளிர் காலங்களில் குளிரைத் தாங்கக் கூடிய அளவிற்குச் சிறப்பு உள்ளாடைகளும், அதில் பல்வேறு பல்வேறு வடிவமைப்பு, நுரை அச்சு, காற்சட்டை, ஜாக்கெட், (Design, Foam Print, Track Suit, Jacket) போன்ற உள்ளாடைகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதேபோல வசந்தம், கோடை, இளவேனிற்காலங்களில் மேற்கத்திய மக்கள் தினமும் பயன்படுத்தக் கூடிய வகைகளில் மெல்லிய உள்ளாடைகள், வண்ணமயமான நவீன டிசைன்களில் இருபால் மக்களின் தேவைக்கு ஏற்ப ஏற்றுமதி செய்யப்பட்டது. பனியனைச் சார்ந்த பல சார்புத் தொழில்கள் திருப்பூரில் இருந்த காரணத்தால் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் தனியாக ஒரு நடுவர் சபை (ARBITRATION COUNCIL) உருவாக்கி உள்ளூரில் சார்புத் தொழில்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டனர். 2017 – 2018ஆம் ஆண்டில் பனியன் ஏற்றுமதி வர்த்தகம் 28000 கோடி மதிப்பைத் தாண்டியது.

எனவே குட்டி ஜப்பான், டாலர்சிட்டி, தொழில் நகரம் என்றெல்லாம் அழைக்கப்படும் திருப்பூரில் தற்போது ஏற்றுமதி அளவில் ஒரு தொய்வு இருந்தாலும், அதிகமான அளவில் பின் விளைவுகள் இருப்பதாலும், இந்த ஏற்றுமதியாளர்கள் அடிக்கடி மாறிக் கொண்டே உள்ளார்கள். எனவே வெற்றிகரமாகப் பல ஆண்டுகளாக ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் ஒரு இருநூறு பேர்களைத் தேர்வு செய்து எந்தக் கோளின் தாக்கத்தின் காரணமாக பனியன் ஏற்றுமதி வர்த்தகத்தில் முன்னேறி இருக்கின்றார்கள் என்பதை முடிவு காண இந்த ஆய்வு தொடங்கப்பட்டது.

1.4. கோள்களின் பொதுத்தன்மைகள்

சூரியன்

சூரியக்குடும்பத்தில் இது மையத்தில் அமைந்துள்ளது. வட்டப்பாதையில் இதை பூமி ஓர் சுற்று வர ஓர் ஆண்டுக் காலம் ஆகின்றது. தனது குடும்பத்தில் உள்ள எல்லாக் கோள்களையும் தன்னிடம் உள்ள காந்த சக்தியால் இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. வறண்ட அதிக வெட்பமான, ஆண்தன்மை கொண்ட நேர்மறைக் கோளாகும். இது சாதகரின் தந்தையைக் குறிக்கிறது. இதயம், ஆண்களின் வலதுகண், பெண்களின் இடதுகண், வாய், குரல், மூளை ஆகியவற்றின்மீது ஆட்சி செய்கிறது.

இரத்த அழுத்தம், மார்பு நோய்கள், இரத்தப்போக்கு, பித்தம், தலைவலி, கடுமையான காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல், காக்கை வலிப்பு, தலை தொடர்பான நோய்கள் முதலியவற்றைக் கொடுக்கிறது. மனோதிடம், நேர்மை, உண்மை, வீரியம், சக்தி, பிறரைக் கவரும் தன்மை ஆகிய குணங்களோடு கோதுமை, மருந்து, இரசாயனப் பொருட்கள், அரிசி, வேர்க்கடலை, தேங்காய், பெருங்காயம், ஏலம், பாதாம்பருப்பு, ஓமம், மிளகு, சாதிக்காய், மசாலா பட்டைகள், முட்புதர், மரங்கள், புல், மருந்துச் செடிகள், வைரம், மாணிக்கம், காடு, மலைகள், சிவன் கோயில்கள், கோட்டைகள், அரசு கட்டிடங்கள் ஆகியவையும் சூரியனுக்கு உரியதாகும்.

சிங்கம், குதிரை, கரடி, விஷ உயிர்கள், காட்டில் உள்ள நாற்கால் பிராணிகள், பாடும் பறவைகள் இவற்றோடும் சூரியன் தொடர்பு கொண்டிருக்கிறது.

சந்திரன்

பூமிக்கு மிக அருகாமையில் உள்ளதும், பூமியின் உபகோளாகச் செயல்படுவதும் சந்திரன் ஆகும். 27 நாட்கள் 8 மணி நேரத்தில் பூமியை ஒரு முறை வலம் வருகிறது. உலா்ந்த குளிா்ந்த, பெண் கோளாகும். இது சாதகரின் தாயைக் குறிக்கிறது. ஆணின் இடதுகண்ணையும், பெண்ணின் வலது கண்ணையும் குறிப்பதாகும். இது மனித உடலில் உள்ள நீா்ப் பகுதியில் ஆட்சி செலுத்துகின்றது. கோள்கள், நட்சத்திரங்கள் இவற்றிலிருந்து வெளிவரும் சக்தியை உடனடியாக வாங்கிப் பூமிக்கு அனுப்பும் கடத்தியாகச் செயல்படுகிறது. எனவே ஒரு சாதகத்தில் தொடக்கமாகும் தசாவை நிா்ணயிக்க இது முக்கியமாகப் பயன்படுகிறது. மனம், எண்ண அலைகள் இவற்றோடு நெருங்கிய தொடா்பு உள்ளது.

சளி, சுரம், மாதவிடாய், மாா்பு, வயிற்றுக் கோளாறுகள், கா்பாசய நோய்கள், மூத்திரப்பை, தைராய்டு சுரப்பிகள் இவை தொடா்பான நோய்களைக் கொடுக்கக்கூடியது. கோழைத்தனம், மனமாறாட்டம் போன்றவை சந்திரனின் காரகமாகும். செடி, கொடிகளின் வளா்ச்சி, பால், தேயிலை, பெட்ரோல் திரவங்கள், நீா்பாங்கான பழங்கள், காப்பி, முட்டைக்கோஸ், கிழங்கு வகைகள், காளான், கரும்பு, பூசணி இவையும் சந்திரனுடன் தொடா்பு கொண்டவை.

கால்வாய், நீரோடை, கடல், மறைவிடங்கள், வண்ணான்துறை, மீன் பிடிக்கும் இடங்கள், பால் பண்ணைகள், புழுக்கள், ஊா்வன, வேகமாகச் செயல்படக்கூடிய விலங்குகள், மருத்துவமனை, குடிநீா், வடிகால் நிலையங்கள், நீா்பாங்கான இடங்கள், கழிப்பறைகள் ஆகியவையும் சந்திரனிற்குக் காரகமாகும்.

புதன்

சூரிய குடும்பத்தில் இது முதல் கோளாகும். சூரியனுக்கு மிக அருகாமையில் அமைந்திருக்கிறது. இது சூரியனை ஒரு முறை சுற்றிவர 88 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. இது ஒரு வறண்ட பெண் கோளாகும். இது சாதகனின் தாய்மாமனைக் குறிக்கிறது.

நரம்பு மண்டலங்கள், உணா்வுப் புலன்கள், மூளை, தோல் போன்றவையும், மூளைக் கோளாறு, மூளை சுரம், நரம்பு மண்டலங்களின் திடீா் தளா்ச்சி, தோல் தொடா்பான நோய்கள். கழுத்து, இடுப்பு தொடா்பான நோய்கள், காக்கை வலிப்பு, வயிற்றுவலி முதலிய நோய்களுக்கு

காரகமாகும். இசைக்கருவிகள், துல்லியமான இயந்திரக் கருவிகள், பணநோட்டுகள், ஆடைகள், பச்சைக் கண்ணாடி, சுவர்களின் பூச்சு, மறைவான அறைகள், தகரப் பெட்டிகள், சூட்கேஸ், குன்றுகள், விளையாடும் இடம், சாப்பாட்டு அறை, பள்ளி, சிறுவர் பராமரிப்பு இடம், தோட்டம், விடுதிகள், மருந்துப் பெட்டி, புத்தக அலமாரி, நூல் நிலையம், நாட் குறிப்பு, பழங்கள், சாமான்கள் அறை ஆகியவையும், பச்சோந்தி, நரி, தந்திரமான பறவைகளும், மிருகங்களும் புதனின் காரகங்களாகும்.

சுக்கிரன்

சூரியக்குடும்பத்தில் இது இரண்டாவது கோளாகும். சூரியனை ஒரு சுற்று சுற்றிவர இதற்கு 225 நாட்கள் ஆகின்றன. ஒரு சாதகத்தில் அவரது மனைவி அல்லது கணவரைக் குறிக்கிறது. இது பெண் கோளாகும். மர்மஉறுப்புகள், மூத்திரக்காய், தொண்டை, தாடை, கன்னங்கள் போன்றவையும், சோகை, பால் உணர்வு நோய்கள், கண், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், மூட்டுகளில் வீக்கம், சளி, சீதளம், அதிகக் குடி, அதிக உணவு இவற்றால் ஏற்படும் கோளாறுகள், நரம்புக் கோளாறுகள் முதலிய நோய்களும், பட்டுத் துணிமணிகள், வெள்ளி, செப்பு, மைக்கா, நறுமணத் திரவியங்கள், நவீன பொருட்கள், போட்டோ பிலிம், தையல் கருவிகள், ரொட்டிக்கடை, சந்தன எண்ணை, பழங்கள், பூக்கள், சர்க்கரை, இரசாயனப் பொருட்கள், இரப்பர், வாகனங்கள், இசைக்கருவிகள், வர்ணம், பெட்ரோல், பருத்தி, மல்லிகை, புனுகு, மசாலாப் பொருட்கள், ஆப்பிள், ருசியான பழங்கள் முதலிய பொருட்கள் சுக்கிரனுக்கு உரியவை ஆகும்.

படுக்கை அறை, நடனசாலை, சினிமா தியேட்டர், தோட்டம், நந்தவனம், வாகன உற்பத்தித் தொழிற்சாலை, தொழிற்கூடங்கள், செயற்கை இழை பட்டுத் தொழிற்கூடங்கள், மைக்கா, கண்ணாடித் தொழிற்சாலைகள் போன்ற இடங்களும், சிறுத்தை, பசு, எருமை, ஆடுகள், புறா, கிளிகள், மயில் முதலிய உயிர்வாழ் இனங்களுக்கும் காரகனாவார்.

செவ்வாய்

சூரியக்குடும்பத்தில் செவ்வாய் நான்காவது கோளாகும். சூரியனை ஒரு சுற்று, சுற்றிவரச் செவ்வாய்க்கு 684 நாட்கள் பிடிக்கின்றன. இது வறண்ட ஆண்கோளாகும். இது சாதகரின் உடன் பிறப்புக்களைக் குறிப்பதாகும். உடலமைப்பில் ஒரு மனிதனின் தசை நார்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இரத்தமண்டலம், வயிறு, முகம், தோள், மூத்திரப்பை,

இடுப்பு, மூத்திரக்காய், ஆசனவாய், பீஜம், எலும்பிலுள்ள மஜ்ஜை, சிற்றின்ப நடவடிக்கை இவற்றுக்குச் செவ்வாயே காரகமாகும்.

வீரம், துணிவு, சண்டை போடும் தன்மை ஆகியவற்றில் சூரியனைவிட மிஞ்சி நிற்பது. மனிதனின் சக்தி, வீரியம், முள் செடிகள், பூண்டு, கடுகு, கொத்தமல்லி, புகையிலை, புலி, ஓணான், வேட்டை நாய், வல்லூறு போன்றவையும் செவ்வாய்க்குரிய காரகமாகும்.

குரு

சூரியக்குடும்பத்தில் இது ஐந்தாவது கோளாகும். இது சூரியனை ஒரு முறை சுற்றிவர அதற்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பிடிக்கின்றன. ஒருவரது சாதகத்தில் இது புத்திரர்களைக் குறிக்கிறது. இதற்குப் புத்திரகாரகன் என்ற பெயரும் உண்டு. முழுப் பயன் தரக்கூடிய ஆண் கோளாகும்.

ஈரல், கொழுப்பு, சுத்த இரத்தக் குழாய்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஈரல் நோய், மஞ்சக் காமாலை, சோகை, உப்பிசம், வயிற்றுவலி, குடற்புண், குடல் இறக்கம், தோல் நோய்கள், கொப்புளம், மண்டைக்குத்து போன்ற உடல் உபாதைகளும், தங்கம், ஈயம், கோயில், நீதிமன்றம், பள்ளி, கல்லூரி, அரண்மனை, சட்டமன்றம், சமயம் தொடர்பான நிறுவனங்கள், கொழுப்பு நிறைந்த உணவுப் பொருள், பிரமாண்டமான மரங்கள், இரப்பர், யானை, குதிரை, எருது, பசு, மயில் முதலியனவும்

சனி

சூரியக்குடும்பத்தில் இது ஆறாவது கோளாகும். சூரியனை ஒரு முறை சுற்றிவர இதற்கு 29½ வருடங்கள் பிடிக்கின்றன. இது வறண்ட, பலமான, மிகக் குளிர்ந்த கோளாகும். இது அலிக்கோள் எனப்படும். ஒருவரது சாதகத்தில் அவரது ஆயுளுடன் தொடர்பானது.

உடற்கூறில் எலும்புகள், பற்கள், உரோமம், காது, மார்பு, நரம்புகள் முதலியனவும் நோய்களில் எலும்புக் குடைச்சல், மலம், மூத்திரம் தொடர்பான நோய்கள், தசைநார்களின் இறக்கம், பல்வலி, அம்மை, ஆஸ்த்துமா, சயரோகம், நாக்கு உளறல், பக்கவாதம், வாந்தி, மலட்டுத்தன்மை, புற்றுநோய், தொண்டை அடைப்பு, மார்பு நோய், குட்டம், வழுக்கை முதலான நோய்களும் செவ்வாய் தொடர்பானது.

ஈயம், மண்ணெண்ணெய், பெட்ரோல், நிலக்கரி, சிமெண்ட், தோல், மரம், கம்பளி, கருங்கல், சணல், நல்லெண்ணெய், வாழை,

உருளைக்கிழங்கு, பார்லி, கருப்பு நிற தானியங்கள், ஊதா, நீலம், நீலக்கல் போன்ற பொருட்கள் சனியின் காரகத்துவப் பொருட்களாகும்.

மலைகள், பள்ளத்தாக்குகள், அடர்ந்தகாடுகள், குகைகள், பழைய கட்டிடங்கள், கோயில், கிணறு, மறைவான இடங்கள், குடிசைகள், துர்நாற்றம் வீசும் இடங்கள், முடிவெட்டும் இடம், தோல் பதனிடும் இடங்கள், மீன் தொழிற்சாலை போன்ற இடங்களும், எருமை, யானை, கோவேறு கழுதை, குதிரை, நாய், ஆடு, பசு, பறவைகள் போன்ற உயிர்வாழ் இனங்களுக்கும் சனியே காரகனாவார்.

இராகுவும், கேதுவும்

சூரிய வட்டத்தில் எப்பொழுதும் எதிர்மறையாகச் சுழன்று வரும் புள்ளிகளே இராகு, கேது எனப்படும். இவை கண்களுக்குத் தெரிவதில்லை. சூரியனும், சந்திரனும் வெட்டிச் செல்லும் பாதைகளே இராகு, கேதுவாகும். இவை சஞ்சரிக்கும் இராசியதிபதிகளின் குணங்களையே பெரும்பாலும் பிரதிபலிக்கின்றன. இராகு தந்தை வழிபாட்டனையும், கேது தாய் வழிப்பாட்டனையும் குறிப்பதாகும். இவை ஒன்றுக்கொன்று 180 பாகை அளவில் அமைந்துள்ளன.

செரிமான சுரப்பிகளுக்கும். வாயுக்கோளாறினால் ஏற்படும் மிகக்கடுமையான வயிற்றுவலி போன்ற நோய்களுக்கும், இருண்ட இடங்கள் மற்றும் குகைகள் முதலிய இடங்களுக்கும், பாம்புகள், விஷ ஜந்துக்கள், கொசு, மூட்டைப்பூச்சி, கழுதை, ஓநாய், ஒட்டகம், ஆந்தை போன்ற உயிர்வாழ் இனங்களுக்குக் இராகு – கேதுவே காரகமாகும்.

1.5. கோள்களின் காரகத்துவம் பற்றிய விளக்கம்

பனியன் ஏற்றுமதியாளர்களின் பணியைச் சாதகங்களில் சுக்கிரன், சந்திரன், மற்றும் இராகுவின் நிலையுமே தீர்மானிக்கின்றன. இவ்வியலில் காரகக் கோள்களின் காரகத்துவம் பற்றி விரிவாக அறியப்பட்டுள்ளது. பனியன் உற்பத்திப் பணியைச் சாதகங்களில் சுக்கிரன் மற்றும் சந்திரனின் நிலையும், பனியன் ஏற்றுமதிப் பணியை இராகுவின் நிலையுமே தீர்மானிக்கின்றன. இக் கோள்களின் காரகத்துவக் குணங்களில் பனியன் ஏற்றுமதித் தொழில் பற்றிய குணமும் காணப்படுகின்றது. எனவே இக் கோள்களின் காரகத்துவ குணங்கள் தரப்பட்டுள்ளன.

1.6. சுக்கிரனின் காரகத்துவம்

சுக்கிரன் பல்வேறு காரகக் குணங்களைக் கொண்டிருந்தாலும் ஆடைகளுக்கான முக்கியமான காரகக் கோளாக இருப்பதால் பல்வேறு சோதிட நூல்களில் கொடுக்கப்பட்டுள்ள சுக்கிரனின் காரகக் குணங்கள் இவ்வியலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

வெள்ளி, உருவம், பரிமாணம், திண்மை இவற்றில் எல்லாம் பூமியை ஒத்துள்ளது. இதைப் பூமியுடன் பிறந்த இரட்டைக் குழந்தை என்று கூறுவதுண்டு. குறுக்களவு 7,600 மைல்களாகும். சூரியனுக்குச் சுமார் 6,70,00,000 மைல்கள் தூரத்தில் சுழல்கிறது. இது சூரியனை 225 நாட்களில் சுற்றி வருகிறது. இக்கோள் 23¼ மணி நேரத்தில் தன்னைத்தானே ஓர் முறை சுற்றி வருகிறது.[1]

அரசு மந்திரி, உசனன், கவி காப்பியன், சல்வியன், சுக்கிரன், சுங்கன், பார்கவன், பிருகு, மழைக்கோள் ஆகியவையும், [2]

சுபர், மனைவி, திருமணம், மகிழ்ச்சியான இல்வாழ்வு, நல்லவீடு, உயிர்ப்பு, உற்சாகம், அழகு, இல்லற உறவு புலனின்பங்கள், வசதி, கலை, கவிதை, சௌகர்யம் போன்றவை சுக்கிரனின் ஆதிக்கத்தில் உள்ளன. ஆதிக்கம் நிறைந்தவர், கவர்ச்சிகரத் தோற்றம் உடையவர், நளினம் மிக்கவர், மற்றவர்க்கு மகிழ்ச்சி தருபவர், நல்ல எண்ணங்கள் உடையவர், சந்தோஷங்களைத் தருபவர் சுக்கிரன். இவரின் நிறம் வானவில் போன்று அனைத்து நிறமும் கொண்டது. உலோகம் - வெள்ளி, எண்.6, சுக்கிரன் ஓர் ஆசான், வைரம் இவரது நவரத்தினம் ஆகியவையும்,[3]

மலர்கள், நகைகள், அழகான பொருட்கள், இனிப்பு உணவுகள், விந்து, மிதமான கால நிலை, ஒப்பனை, பசுக்கள், அழகான உடைகள், வாசனைத் திரவியங்கள், பல்வேறு புலனின்பங்கள், பூக்கள் மிகுந்த மரங்கள் ஆகியவையும் சுக்கினின் காரகங்கள். [4]

---

[1] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 45

[2] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 45

[3] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 117

[4] மேலது - ப. 117

கண்கள், சிறுநீரகம், கன்னம், தாடை, தொண்டை, பாலுறுப்புகள் ஆகியவை சுக்கிரனின் ஆட்சியில் உள்ளன. பலம் பெற்ற சுக்கிரன் வசதிகளையும், செல்வத்தையும் தருகிறார். சுக்கிரன் மிகபலமாக உள்ளவர்கள் இளமை வயதிலேயே எதிர்பாலரால் கவரப்படுவார். உச்சத்தில் உள்ள சுக்கிரன் நீண்டஆயுள், மனிதாபிமானம், மற்ற நற்குணங்களைத் தருவார். [5]

சுக்கிரன் மனதைக் கவரும் அழகான தோற்றம், கவர்ச்சியான கண்கள், கவிதைத்திறன், சுருண்ட கேசம், இன்பங்களில் ஆர்வம், அதிர்ட்டம், ஒளிமிகுந்த கண்கள், பரந்த மனப்பான்மை, பருத்தஉடல், பெண்களிடம் சரணடையும் குணம், கபட விழிகள், ஏமாற்றும் தன்மை, நீண்டகைகள், அகன்ற மார்பு, அகன்ற முகம், பல வண்ண ஆடைகள் அணியும் தன்மை, புத்திசாலித்தனம், கவரும் தோள்கள், உல்லாச குணம், புதியன தோற்றுவிக்கக்கூடிய எண்ணங்கள் ஆகிய காரகங்களைக் கொண்டவர். [6]

ஒருவரது செல்வநிலை, வாகனவசதிகள், ஆடை, ஆபரணங்கள், புதையல் செல்வம், ஆடல், இசைக்கருவிகளினால் எழுப்பப்படும் இசை, வாயினால் பாடப்படும் இசை, மனைவி, மகிழ்ச்சி, வாசனைத் திரவியங்கள், மலர்கள், உடலுறவு, படுக்கை, வீடு, வசதியான வாழ்வு, கவிதைகளில் நாட்டம், பல பெண்களிடம் உறவு, விளையாட்டு, காம எண்ணங்கள், மந்திரிப்பதவி, வசீகரமான பேச்சு, திருமணம், விழாக்கொண்டாட்டங்கள் முதலியவை சுக்கினின் காரகங்கள். [7]

சுக்கிரனின் ஆடை பல வண்ணங்கள் கொண்டது. சுருண்ட கருத்த குழலுடையவர், உடலும், அங்கங்களும் பெரியனவாக விளங்கும், கபமும், வாயுவும் சேர்ந்த உடற்கூறு உடையவர், அருகம்புல்லை ஒத்த நிறமுடையவர். விசாலமான கண்களும், விரும்பத்தக்க அழகு பொருந்திய உடலும், வீர்யமிக்க ஆண்மையும் உடையவராக சுக்கிரன் விளங்குகிறார். [8]

---

5 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 117

6 மேலது ப. 118

7 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 70

8 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 71

வெண்கொற்றக்குடை, நல்ல ஆடை, திருமணம், வருமானம், பெண், அந்தணர், அனுகூலம், வெண்மை, மனைவி, உடலுறவு இன்பம், குள்ளம், புளிப்புச்சுவை, மலர், கட்டளையிடுதல், புகழ், இளமை, வாகனம், வெள்ளி, உப்பானசுவை, கடைக்கண் பார்வை, உராய்தல், பெருவிருப்பம், வலிமை, முத்து, வைசியன், அழகு, வாங்கல் விற்றல், காதல் வயப்படல், நீர்சூழ்ந்த இடம், பல வண்ணம், கவிதை, ஆடல், பாடல், இரத்தினங்கள், நகைச்சுவையாகப் பேசுவதில் விருப்பம், நீச்சல்காரர், பணியாள், அதிர்ஷ்டம், அழகான இளைஞன், அரசு, நறுமணப் பொருட்கள், மலர் மாலை, வீணை, புல்லாங்குழல் முதலியன சுக்கிரனின் காரகத்துவ குணங்கள்.

கேளிக்கை, ஒயிலான நடை, அட்ட ஐசுவர்யம், அணிகலன், மிதமான உணவு, வசந்தகாலம், பல பெண்களை ஆதரித்தல், உண்மை பேசுதல், கலையறிவு, நற்குணம், தலைமை வகித்தல், நுணுக்கமான பேச்சு, இசைக்கருவி, மேடை அலங்காரம், சிற்றின்ப விளையாட்டு, உடல்கெடுதல், உயர்ந்த மரியாதைக்குரியவராக ஆகுதல், வெண்மை ஆடைகளில் விருப்பம், பரதக்கலையில் மேதை, அரசுமுத்திரை, பிரபு, சிற்றின்ப மகிழ்ச்சி, பெருந்தன்மை, உடல்இளைத்தல், இலக்கியம் மற்றும் காவிய ரசனை, நற்செயல்கள், மர்மஉறுப்பு, உடலுறவு உறுப்புகளின் அறிவு மற்றும் அதன் கமுக்கமான தன்மைகள் ஆகியவை சுக்கிரனின் காரகத்துவங்கள். [9]

சுக்கிரனுக்கு வெண்மை நிறமும், தென்கிழக்குத்திசையும் பிரீதியானது, கல் - வைரம், கண்கள், தொண்டை, கன்னம், தாடை இந்திரிய உள்உறுப்புகள், கருப்பை உறுப்புகள் ஆகியவையும் சுக்கிரனின் காரகத்துவங்கள். [10]

நோய்களைக் கொடுக்கும் பட்சத்தில், சுக்கிரன், கண் நோய்கள், அதிக போகானுபவத்தால் பலகீனம், சுய இன்பம் காணும் பழக்கம், பால்வினை நோய்கள் ஆகியவற்றைக் கொடுக்கும். [11]

---

[9] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 12

[10] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 20

[11] மேலது.

சுக்கிரன் களத்திர காரனாதலால் சுக்கிரனைக் கொண்டு மனைவி அமையக்கூடிய யோகம், மனைவியால் ஏற்படும் மகிழ்ச்சி, துன்பம், அல்லது அவக்கேடு, காதல் விவகாரங்களில் வெற்றி அல்லது தோல்வி, திருமண வாழ்வில் நிம்மதி அல்லது நிம்மதியின்மை, இன்பானுபவ யோகங்கள், போகசக்தி ஆகியவை சுக்கிரனால் தரப்படுபவை. [12]

சுக்கிரன் சாதகருக்கு இனிமையான பேச்சு மற்றும் பழக்க வழக்கங்கள், பெண்களைக் கவரும் வசீகரம், காமலீலைகளில் தேர்ந்தவராயிருத்தல் ஆகியவற்றைக் கொடுக்கும். வியாபாரத்தில் வெற்றியும், செல்வப்பெருக்கமும் ஏற்படும். கவர்ச்சியாகப் பேசி வியாபாரம் செய்பவர். [13]

தன்னை அழகுபடுத்துதல், அலங்காரம் செய்தல், மகிழ்ச்சி, உயர்வான சிந்தனை, கௌரவம், அந்தஸ்து, கூடுதல் காமம், வசீகரம், நல்ல அழகான பேச்சாற்றல், அலங்காரப் பொருள், இரத்தினம், வாசனைப் பொருட்கள், பெருஞ் செல்வ நிலை, உற்சாகம் நிறைந்த மனம், அதிகமான தகவல் தொடர்பு, அடிக்கடி தன்னை மாற்றிக் கொள்ளுதல், கூடுதல் பயணம், வாகனம், விவசாயம், கல்வி, அலங்கரித்தல், கலைப்பொருள் தொடர்பானது, வீடு, திரையரங்கு, விடுதி, உல்லாச விடுதி போன்றவையும் சுக்கிரனின் காரகத்துவம் ஆகும்.

கலை சம்பந்தமானது, இன்ப காதல், உல்லாசம், மது, மாது, கேளிக்கை, விருந்து, காம குணமுள்ள, அழகான குழந்தை, உடலில் நீர் தொடர்பான நோய், சர்க்கரை நோய், இன்பமான கடன் வரவு, வெற்றி, கணவன் மனைவி பிரிவு, புகழ், காம குணம் நிறைந்த, அழகான தன் வயதுக்கு ஒத்த பெண், இன்பம் நிறைந்த மனைவி, பங்குதாரர், பெண்களால் அசிங்கம், அவமானம், சந்தோசக் குறைவு, உல்லாசக் குறைவு, வாகன விபத்து, விவசாய ஆய்வு, அலங்கரித்தல், மோட்டார் தொடர்பான கல்வி, உல்லாசப்பயணம் முதலானவையும்,

இயல், இசை, நாடகம், கலை சம்பந்தமானது, கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், கவர்ச்சிப் பொருள், அழகு சாதன பொருட்கள்

---

12 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 20

13 மேலது.

ஸ்டோர் தொடர்பான துறைகள், இன்பமான நண்பர்கள், விருந்து, கேளிக்கை, பேராசை, வெற்றி, விரைவில் ஆசை பூர்த்தியாதல், பெண்கள் விஷயத்தில் இரகசிய ஈடுபாடு, கலை தொடர்பான ஆய்வு, பலதாரக் கலப்பு, வீடு, வாகனம், பெண்கள்மூலம் செலவு அல்லது மூலதனம் ஆகியவையும் சுக்கிரனால் ஏற்படுபவை. [14]

ஒன்பது வகையான இரத்தினக் கற்கள், வெள்ளி, பசு, எருமை போன்றவற்றினால் பொருள் தேடுபவர். [15]

வெண்கொற்றக்குடை, நல்லஆடை, சாமரம், திருமணம், வருமானம், பெண், பிராமணர், சுபம், வெண்மை நிறம், மனைவி அல்லது கணவன், உடலுறவில் இன்பம், குள்ளமான ஆகிருதி, புளிப்புச்சுவை, பூக்கள், கட்டளை, கீர்த்தி, இளமை, பெருமை, பிரயாணம், வெள்ளி, உப்புச்சுவை, சுற்று முற்றும் பார்வை, சளி, பட்சம், ராஜஸ குணம், திடத்தன்மை, முத்து, வைசியர், அழகு, விற்றலும் வாங்குதலும், பரஸ்பரக் காதலால் பேசப்படும் மகிழ்வான வார்த்தை, நீர் சூழ்ந்த இடம், அற்புதமான கவிதை, நாட்டியம், நடுத்தர வயது. இசை ஆகியவையும்,

சுகானுபவம், இரத்தினகற்கள், கேளிக்கை, நகைச்சுவைப் பிரியம், நீச்சல், பணியாட்கள், அதிர்ஷ்டம், விசித்திர ஒளி, வாணிபம், ராஜ்யம், நறுமணமுள்ள மாலை, வீணை, புல்லாங்குழல், ஒயிலான நடை, அஷ்ட ஐஸ்வர்யம், அழகிய அவயவங்கள், மிதமான ஆகாரம், வசந்த காலம், ஆபரணங்கள், பல பெண்களை அனுபவித்தல், கண்கள் உண்மை பேசுதல், கலைகளில் நிபுணத்துவம் முதலானவையும் சுக்கிரனின் காரகத்துவங்கள்.

விந்து, ஜலக்கிரீடை, ஆழ்ந்தஞானம், உயர்பதவி, இன்னிசைக்கருவி, நாடக அலங்காரம், காமக்களியாட்டம், உடல்பாதிப்பு, காமத்திற்கு முக்கியத்துவம், கௌரவிக்கப்படுதல், வெள்ளை உடைமீது பிரியம், பரத நாட்டிய சாஸ்திரத்தில் மேதமை, மிகஉயர்ந்த அரச பதவி, அரசன், காம சுகம், காவிய இரசனை, பிரபந்தங்களைத் தொகுத்தல்,

---

[14] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 43

[15] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

நீலநிற முடி, சுபம், மர்ம உறுப்பு, மர்ம உறுப்புகள் பற்றிய அறிவு ஆகியவையும், [16]

மனைவி அல்லது கணவர், ஆடு, மாடு போன்ற கால்நடைகள், நல்லஆடை, இன்னிசை, நடிப்பு, நாடகம், பாட்டு, நடனம், கௌரி மற்றும் இலட்சுமி வழிபாடு, கீர்த்தி, அழகு, ஆபரண நாட்டம், அழகானநடை, உணவுவிடுதி, பெண்கள் விரும்பி அணியும் பொருள்கள், கேளிக்கை விடுதி, நடனஅறை, படுக்கையறை, செல்வப்பெருக்கு, வணிகர், நெசவாளர், வீடு, வாகனம், விளையாட்டு எண்ணம், திருமணம், விழாக்கள், ஓவியம் வரைதல், குடும்பத்தில் அன்பு, பட்டு, பருத்தி, நறுமணப்பொருட்கள், விருந்துமண்டபம், திரையரங்கு, அமைதி, சிரித்தமுகம், இனிமை, மகிழ்ச்சி, தையல், பெண்கள் ஆகியவையும், [17]

களத்திரம், கிருகம், பட்டப்பேர், பகற்காலமாத்ரு, வெகு ஸ்திரீ சங்கம், தாசிதாசன் முதலானவர், சங்கீத வாத்தியம், பரதநாட்டியம் முதலானவற்றில் பிரியம், கந்தபுஷ்பம், புனுகு, கஸ்தூரி முதலிய பரிமள வாசனாதிகள், கட்டில், மெத்தை, சப்ரமஞ்சம் முதலானவை. வெண்சாமரை, இராஜஸ்திரீ, ரூபவதி, போகபாக்கியம், அழகு, இளமை, கருவிழி, சம்பத்து, வாகனம், மாலை, கொடி, பால் முதலானவை. இரத்தினம், வெள்ளி, கப்பல் வியாபாரம், எப்போதும் விகடவிநோத பரிகாசப் பிரசங்கப் பிரியம், ஆசை, ஸ்ரீதேவதை உபாசனை, ஜனரஷணம், மித்திரம், பசு, பால், தயிர், அன்னம், மொச்சை, புளி, ஈயம், தேவப்பெண்கள், இலட்சுமிகடாட்ஷம், ஆகாய சமுத்திர யாத்திரை இவைகளுக்கெல்லாம் ஆகியவற்றிற்கும் சுக்கிரனே காரகன். [18]

தன்னை அழகுபடுத்துதல், அலங்காரம் செய்தல், மகிழ்ச்சி, உயர்வான சிந்தனை, கௌரவம், அந்தஸ்து, கூடுதல் காமம், வசீகரம், நல்ல அழகான பேச்சாற்றல், அலங்காரப் பொருள், இரத்தினம், வாசனைப் பொருட்கள், பெருஞ்செல்வநிலை, உற்சாகம் நிறைந்த மனம், அதிகமான தகவல் தொடர்பு, கூடுதல் பயணம், வாகனம், விவசாயம், கல்வி, வீடு,

---

[16] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 164

[17] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 222

[18] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 47

திரையரங்கு, விடுதி, உல்லாச விடுதி, உல்லாசம், மது, மாது, கேளிக்கை, விருந்து, அழகான குழந்தை, உடலில் நீர் தொடர்பான சர்க்கரை நோய், கடன் வரவு, வெற்றி, கணவன் மனைவி பிரிவு, புகழ், காமகுணம் நிறைந்த அழகான, தன் வயதுக்கு ஒத்த பெண், இன்பம் நிறைந்த மனைவி முதலானவை.

பங்குதாரர், வாகன விபத்து, விவசாய ஆய்வு, சிற்றுந்து தொடர்பான கல்வி, உல்லாசப் பயணம். இயல், இசை, நாடகம், கலை தொடர்பானவை, கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், கவர்ச்சிப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் கடை, இன்பமான நண்பர்கள், விருந்து, கேளிக்கை, பேராசை, வெற்றி, கலை தொடர்பான ஆய்வு, பலதாரக் கலப்பு, வீடு, வாகனம், பெண்கள் மூலம் செலவு அல்லது மூலதனம் ஆகியவை சுக்கிரனின் காரகத்துவ குணங்களாக குறிக்கப்பட்டுள்ளன. [19]

1.7. சந்திரனின் காரகத்துவம்

சந்திரன் பல்வேறு காரகக் குணங்களைக் கொண்டிருந்தாலும் ஆடை தயாரிப்புக்கான முக்கியமான காரகக் கோளாக இருப்பதால் பல்வேறு சோதிட நூல்களில் கொடுக்கப்பட்டுள்ள சந்திரனின் காரகக் குணங்கள் இவ்வியலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

இக்கோள் சூரிய குடும்பத்தின் ஒரு துணைக்கோளாக உள்ளது. இக்கோள் பூமியின் துணைக்கோளாகப் பூமியைச் சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது. பூமியிலிருந்து சுமார் 2,38,000 மைல்கள் தொலைவில் உள்ளது. இதன் குறுக்களவு 1,160 மைல்கள் ஆகும். பூமியைச் சந்திரன் 29 நாட்கள், 12 மணி, 44 நிமிடம், 2.8 விநாடிகளில் ஓர்முறை சுற்றி வருகின்றது. இது சூரியனுடைய நிலையைக் கொண்டு கணிக்கப்பட்ட ஒரு கால அளவானதால் இது சௌரமானம் (Synodic Period) என்று அழைக்கப்படுகிறது. ஒரு விண்மீனைப் (நடசத்திரத்தை) பின்னணியிடப்பட்டுச் சந்திரனுடைய பெயர்ச்சியைக் கணக்கிட்டால் அது பூமியை 27 ¼ நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருவதைக் காணலாம். இதற்கு நட்சத்திரமானம் என்று பெயர். பூமியும், சந்திரனும் சேர்ந்து

---

[19] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 47

சூரியனைச் சுற்றிவருவதால் சௌரமானத்திற்கும், நட்சத்திரமானத்திற்கும் 2 நாட்கள் வித்தியாசம் ஏற்படுகின்றது. [20]

தற்போது கூடசந்திரனின் கவர்ச்சியால் கடல்களில் கொந்தளிப்பும், நிலப்பகுதிகளில் அதிர்ச்சியும் தோன்றுகின்றன. இதனால் பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வருவதாகவும், சந்திரன் ஒரு நூற்றாண்டில் ஏழுஅடி வீதம் அப்பால் ஒதுக்கப்படுவதாகவும் வானசாத்திரத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. இதனாலேயே அக்காலத்தில் அமாவாசை, பௌர்ணமி திதிகளில் பூமியில் ஏற்படும் மாற்றங்களில் சந்திரனுக்கு அதிக முக்கியத்துவம் சோதிட சாத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. [21]

தற்காலத்தில் கூறப்படும் பொதுவான இராசிபலன்கள் சந்திரனின் நிலையைக் கொண்டே (ஒருவர் பிறந்த இராசியின் அடிப்படையில்) கணக்கிடப்படுகிறது. மேலும் அன்றைய தினத்தில் பார்க்கப்படும் நட்சத்திரம் என்பது சந்திரன் வானமண்டலத்தில் கடந்து கொண்டிருக்கிற நட்சத்திரத்தையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. விம்சோத்திரி தசா என்பதும் சந்திரனை மையப்படுத்தியே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே சோதிட சாத்திரத்தில் சந்திரனுக்குகொடுத்த முக்கியத்துவம்போல் மற்ற கோள்களுக்கு இவ்வளவு சிறப்பான அமைப்பு கொடுக்கவில்லை. பஞ்சாங்கம் (திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்) கணக்கீடு செய்வதற்கு முக்கியமாகத் சந்திரனும், சூரியனும் தேவையாக உள்ளது.[22]

பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் சந்திரன் ஆகும். எனவே இது சாதகத்தில் மிக முக்கியத்துவம் பெறும் கோள். இது தாயாரைக் குறிக்கும். இவர் பெண்தன்மை, வெண்மை நிறம், புகழ், மக்களின் நன்மதிப்பு, உணர்ச்சிகள், மகிழ்ச்சி, சிந்தனை, கடல் அலைகள், வளர்பிறையில் சுபர். செல்வம், மதிப்பு, மரியாதை, மனஅமைதி, ஆரோக்கியம் ஆகியவற்றைக் குறிப்பவர். [23]

---

[20] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 35

[21] மேலது ப. 36

[22] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 36

[23] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 112

மனம், கற்பனை, மனநிலை, பூக்கள், நறுமணம், கரும்பு, அந்தண ஜாதி, காக்கை வலிப்பு நோய், உப்புச்சுவை, வெண்மைநிறம், கபம், டைபாய்டு ஜுரம், நுரையீரல், மண்ணீரல் தொடர்பான நோய்கள், பெண்மை, தாய்மைக்குணம், தூக்கம், (அமைதி) மகிழ்ச்சி, திரவப் பொருட்கள், வெண்கலம், அயல்நாடு செல்லுதல், கிணறு, குளம், குட்டை, அம்மா, முத்துக்கள், இடுப்பில் அணியும் பெல்ட் மற்றம் ஒட்டியாணம் ஆகியவை சந்திரனின் காரகத்துவங்கள்.

குள்ளமான உருவம், மழைக்காலம், பார்வதி தேவியை வணங்குதல், கோதுமை, நல்ல பழவகைகள், முகம், தேஜஸ், அழகு, பட்டு ஆடைகள். மென்மையான ஆடைகள், ஊட்டமளித்தல், தயிாமீது விருப்பம், இரவில் வலிமை, மத்தியலோகம், மேற்குத்திசை, மத்திமவயது, இரத்தத்தின் தூய்மை மற்றும் வலிமை, மீன்போன்ற நீர்வாழ் உயிரினங்கள், பாம்பு, தோள்பட்டை நோய்கள், குடை போன்ற அந்தஸ்த்தைக் காட்டும் ஆடம்பரச் சின்னங்கள், வேகமான சிந்தனை, நகைச்சுவைப் பேச்சு, சந்நியாசி, பரதேசி, திறமை, அறிவுடமை, வேலை கிடைத்தல் ஆகியவையும், [24]

கற்றவர், உருண்டையான உடல்வாகு, இனிமையான தோற்றம் மற்றும் பேச்சு, மாறும் மனம், காமம் உள்ளவர், கவரும் கண்கள், உயரமானவர், மென்மையானவர், வெண்ணிற ஆடை ஆபரணங்களை அணிபவர், இளமையானவர், நல்லநிறம், சுருண்டகேசம், நண்பருக்கு இனிமையானவர், நல்லஇரத்தம் உடையவர், பணிவானவர், வயோதிகப் பெண்களை ஆதரிப்பவர், அதிர்ஷ்டமானவர், தூயஆடை அணியம் குணம் ஆகியவையும், [25]

தாயின் நலம், மனஅமைதி, (மனத்தெளிவு) கடல் நீராடுதல், வெண் கொற்றக்கொடை, சாமரம், விசிறி, பூக்கள், மிருதுவான பழங்கள், தானியங்கள், விவசாயம், புகழ், முத்து, வெண்கலம், வெள்ளி, இனிப்பான உணவுகள், பால், பசுக்கள், பெண்கள், ஆடைகள், நல்லஉணவு,

---

[24] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 112

[25] மேலது.

அழகானதும். ஆரோக்கியம் உள்ளதுமான உடல் ஆகியன சந்திரனால் அறியப்படும் காரகத்துவங்கள். [26]

பருமனான உடல், இளமை மற்றும் முதுமை, மெலிந்த தேகம், வெண்மை நிறம், அழகானதும் கவர்ந்திழுப்பதுமான நீலநிறக் கண்கள், கருத்த நீண்ட கேசம், இரத்தத்தை ஆள்பவர் சந்திரன். மென்மையான பேச்சு உடையவர், வெண்ணிற ஆடை தரித்துள்ள சந்திரன் அழகான நிறமும் கொண்டவர். கபம் மற்றும் வாயு உடையவர். மிருதுவான குணமுடையவர். [27]

அறிவுத்திறன், மலர், நறுமணப் பொருட்கள், கோட்டைக்குள் செல்லுதல், நோய், அந்தணர், சோம்பல், கால்கை வலிப்பு, மண்ணீரல் வீக்கம், மெய்மறந்த நிலை, இதயம், பெண், நல்லது அல்லது தீயது, புளிப்பு, மகிழ்ச்சி, நீர்ப்பொருள், வெள்ளி, கட்டிக்கரும்பு, குடற்காய்ச்சல், பயணம், தாய், நடுநிலமை, முத்துக்கள், சயரோகம், வெண்கலம், உப்பு, குள்ளம், திறமை, வைரம், சரத்ருது, இரண்டு நாழிகைப்பொழுது, வெண்மையானநிறம், அனுகூலம், நகைச்சுவை, ஊட்டச்சத்து, இன்பம், சிறப்பு, தபஸ்வி, புகழ், அழகு, இரவில் வலிமை, கற்றவர், உப்புநீர், வேலை பெறுதல், வெளிநாடு செல்லுதல், தோள்பட்டை நோய், அரசவிருதுகள், தூய்மையான பளிங்கு, வெண்மையான ஆடை ஆகியவையும், [28]

சந்திரன் பெண் கோளாதலால் 5ஆம் வீட்டோடு சம்பந்தப்படின், சாதகருக்கு நிறைய பெண் குழந்தைகள் ஏற்படும்தன்மை ஆகியவையும், [29]

சந்திரன் கண், வயிறு, பெண்களின் மார்பகங்கள், உமிழ்நீர், நிணநீர், சிறுநீர். இந்திரியம் போன்ற சுரப்பிகள் ஆகியவையும் சந்திரனால் அறியப்படுபவை. [30]

---

[26] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 67

[27] மேலது ப. 67

[28] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 8

[29] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 16

[30] மேலது ப. 17

சந்திரன் கண்நோய், பால் குறைவாகச் சுரத்தல், உடல் வளர்ச்சிக் குறைவு, ஜலதோசம், சளி, இருமல், வாந்திபேதி போன்ற நோய்களைக் குறிக்கும். [31]

சந்திரன் நீரைக் குறிப்பதால், சந்திரனைக் கொண்டு விவசாயம், வீடு அல்லது வயல்களில் நீர் வசதிகள், பம்புசெட்டுப் பாசனம், கிணற்றுப்பாசனம், ஏரிப்பாசனம், ஆற்றுப்பாசனம். சந்திரன் நீரைக் குறிப்பதால் சந்திரனைக் கொண்டு சிந்தனை, கற்பனை, புகழ் பெறுதல், பெருமையடைதல், அறிவாளியெனப் பெயரெடுத்தல், நல்ல சிந்தனை, நிலையற்ற புத்தி, அமைதியற்ற மனோநிலை, அடிக்கடி தொழில் இருப்பிடங்களை மாற்றுதல், சுற்றித்திரிதல், அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளுதல், கடற்பயணம் மேற்கொள்ளுதல், சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளுதல் ஆகியவையும், [32]

வேகமான சிந்தனைத்திறன், செயல். புத்திக்கூர்மை. நீர்ப்பாங்கான உடல்வாகு. ஞாபகசக்தி, விரைவான தனவரவு, வெள்ளி, அலுமினியம் தொடர்பானது. நல்ல தெளிவான பேச்சாற்றல், குழப்ப மனோநிலை, விரைவான தகவல் தொடர்பு, ஒப்பந்தம், நல்லகல்வி, விவசாய நிலம். எண்ணெய்க்கிணறு, நீர்பாங்கான இடத்தில் வசித்தல், விரைவான காதல் உறவுகள், கலைத்துறையில் மிகுந்த ஆற்றல், வேகமாக மற்றவர்களுக்கு இணங்குதல், நீர், இரத்தம் சம்பந்தமான நோய், விரைவான பணவரவு, வேகமான வெற்றி, இளவயதுடைய பெண், வேகமான புணர்ச்சி, அடிக்கடி மனமாற்றம் உடையவர், விரைவில் மற்றவர்களுக்கு இணங்கிவிடும் கணம் ஆகியவையும்,

நீரினால் கண்டம், தாய்மூலம் பிரச்சினை, ஞாபசக்தி குறைதல், உடலில் உள்ள நீர் குறைதல், இரத்தம் குறைதல், நல்ல ஆராய்ச்சித்திறன், வேகமான பயணம், தாய்மூலம் கௌரவம் அடைதல், நல்ல உயர்கல்வி, கேள்வி ஞானம் உடையவர். நீர் தொடர்பான திரவம், எண்ணெய், வெள்ளி, அலுமினியம், பால், அரிசி போன்ற துறைகளில் பணி செய்பவர். சுறுசுறுப்பான நண்பர்கள், புத்திகூர்மையானவர்கள். வேகமாகத் தனது விருப்பங்களை நிறைவேற்றுதல், தாய்மூலம் மறைமுகத் தொல்லை,

---

31 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 16

32 மேலது. - ப. 17

விளைநிலங்களுக்கு மூலதனம் செய்தல், சோம்பல் நிறைந்த தோற்றம் ஆகியவையும் சந்திரனின் காரகத்துவங்கள். [33]

விவசாயம், நீரினால் ஏற்படும் பொருட்கள். பெண்கள் மூலமாக ஏற்படும் தொழில்கள் (ஆடை தயாரித்தல், தையல் வேலை மற்றும் பல) ஆகியவற்றிற்கும், [34]

புத்தி, புஷ்பம், சுகந்தம், கோட்டைக்குள் செல்லுதல், வியாதி, சோம்பல், கபம், கால்கை வலிப்பு, குடல்புண், அறிவின் நிலை, இதயம், பெண், சுப அசுபத்தன்மை, நெஞ்செரிச்சல், தூக்கம். மகிழ்ச்சி, திரவம், வெள்ளி, குளிர்சுரம், தீர்த்தயாத்திரை, தாயார், நடுநிலைமை, முத்துக்கள், சயரோகம், வெண்மை, வெண்கலம், அரைக்காசு, புத்தி, திறமை, வைரம், முகூர்த்தகாலம், முகவசீகரம், நகைச்சுவை, போசாக்கு, தேன், அனுகூலம், இன்பம். சுறுசுறுப்பு, புகழ், இலாவண்யம், காதலி, பதவி பெறுதல், நவரத்தினங்கள், சீவன், போசனம், தூரதேசங்களுக்குச் செல்லுதல், அரசால் வழங்கப்படும் பட்டம், நல்ல இரத்தமும் தாது விருத்தியும், ஆடைகள், பிரகாசம், சுத்தமான ஸ்படிகம், சுத்தம் செய்யப்ட்ட துணிகள் ஆகியவற்றிற்கும், [35]

தாயார், பூக்கள், காய்கறிகள், நீர் தொடர்புடைய பொருட்கள், சளி நோய்கள், கட்டிக்கரும்பு, விவசாய விளைபொருட்கள், ஆறு, குளம், கிணறு, உப்பு, ஆடைகள், நீர்வாழ் உயிரினம், பெண், நெய், எண்ணெய், தூக்கம், வெள்ளி, தேன், பழங்கள், எச்சில், நிகழ்காலச் சிந்தனை, மதுபானம், பால், அலுமினியம், இன்பம், கப்பல்தொழில், கட்டுமரம், மனம், குள்ளம், அறிவுக்கூர்மை, அன்பு செலுத்துபவர், வலிப்பு நோய்கள் ஆகியவற்றிற்கும், [36]

மாதா, பராசக்தி, கணபதி, சுகபோசனம், ஆடை, குதிரை, நித்திரை, சிறிது நாள் பருத்தும், சிறிது நாள் இளைத்தும் இருக்கும் சரீரம், சித்த சுவாதீனமின்மை, சீதளநோய்கள், இடக்கண், புருவம், குடை,

---

[33] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 36

[34] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

[35] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 160

[36] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 221

உத்தியோகம், கீர்த்தி, முத்து, ஸ்திரமின்மை, முத்தாபரணம், வெண்கலம், வெண்ணை, அரிசி, பாசிப்பயறு, உப்பு, மச்சம், உழவன், உப்பளவர், வண்ணார், சத்திரம், கந்தபுட்பம், சாமரம், பலம் ஆகியவற்றிற்கும் சந்திரனே காரகன் ஆவார். [37]

1.8. இராகுவின் காரகத்துவம்

இராகு பல்வேறு காரகக் குணங்களைக் கொண்டிருந்தாலும் வெளிநாட்டுப் பயணம், வெளிநாட்டு வாசம், வெளிநாட்டு ஏற்றுமதி போன்றவற்றிற்கு முக்கியமான காரகக் கோளாக இருப்பதால் பல்வேறு சோதிட நூல்களில் கொடுக்கப்பட்டுள்ள இராகுவின் காரகக் குணங்கள் இவ்வியலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

வானசாத்திரத்தில் இராகு என்ற கோள் முறைப்படி இல்லை. அதனால் இதை சாயாக்கோள் என்பர். ஆனால் வானசாத்திரம் இந்த இராகுவை கிரகணத்தை ஏற்படுத்தும் புள்ளிகள் என்று கூறுகிறது.[38]

அபிதான சிந்தாமணியில் இராகுவை பற்றிக் கூறியுள்ளதாவது : இராகுவின் தந்தை விப்பசித்தி, தாய் சிம்கிகை ஆவார். கஸ்யப முனிவரின் பேரனாவார். கேது இவரது தம்பியாகும். தவம் செய்து கரும்பாம்பு உருவமுடையவர். சூரியனுக்குச் சுமார் 13,000 விஸ்தார யோசனையுள்ள மண்டலத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டு குதிரைகள் பூட்டிய இரதத்தை உடையவர். இவர் சூரியனை எதிர்முகமாகச் சுற்றிவர பதினெட்டு ஆண்டுகளாகிறது. [39]

இராகுவிற்கு வழங்கியுள்ள பிற பெயர்கள்

பாம்பு, கரும்பாம்பு, நஞ்சு, மதிப்பகை ஆகியவையும்,

இயற்கையில் இராகு ஓர் அசுபர். இராகு தான் அமர்ந்திருக்கும் வீட்டுப் பலனை அதிகப்படுத்துவார். வேதங்களில் இராகு ஓர் அசுரக் கோள் என்றும், அது சூரியன், சந்திரர்களை தாக்கும் என்றும், அதுவே கிரகணம் எனவும் சொல்லப்பட்டுள்ளது. இராகுவின் செயல்கள் சனியைப் போலவே இருக்குமெனச் சொல்வதுண்டு. இராகுவின் இரத்தினம் கோமேதகம். எண்.4.

---

[37] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 46

[38] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 49

[39] மேலது.

தந்தை வழித் தாத்தா. செழிப்பு, மது மற்றும் போதைப் பொருள்கள், கடுமையான வலி, திருட்டு, ஊழல், வெறுப்பு, ஆவிகளால் தொல்லை, அசுத்தம், மனோதத்துவப் பிரச்சினைகள் கடுமையான பேச்சு, துறவு, நோய்கள் பரவுதல், சூதாட்டம், பயணங்கள், தந்திரம், கபடத்தனம், விதவை, பஞ்சம், அமானுஷ்ய சக்திகள் (மனித சக்திக்கு மேற்பட்ட சக்திகள்), தற்கொலை எண்ணங்கள், பயம், பாம்புகள், பாம்புக்கடி. தீய செயல்களால் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவையும் இராகுவின் காரகத்துவ குணங்கள். [40]

இராகு உச்சமானால் புகழையும், செல்வத்தையும் தரும். அதிகார மிக்கவராகவும், மக்களை ஆட்டுவிப்பவராகவும் ஆக்கும். இராகு பலவீனம் அடைந்தால் மனோவியாதிகள், உடல் நோய்கள், வயிற்றுப்போக்கு, காலரா, தற்கொலை உணர்வு போன்றன தரும். [41]

இராகு கருப்பு நிறமாகவும், உயரமாகவும், இழிந்த குலத்தவராகவும், தோலில் நோய் உடையவராகவும், நாத்திகர் ஆகவும், பொய் கூறுபவராகவும், விக்கல் உடையவராகவும், கபடராகவும், தொழுநோயால் துன்பமடைபவராகவும், பிறர் மீது அவதூறு கூறுபவராகவும், புத்தியற்றவராகவும் இருக்கும் தன்மையும், [42]

கோள்கள் நீச்சம், அஸ்தமனம், பகைவீடுகளில் இருந்தாலும், 6, 8 மற்றும் 12 ஆகிய வீடுகளில் இருந்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதப்படும். இங்கு இவர்கள் தீய பலன்களே தருகின்றனர். இதர இடங்களில் கோள்கள் வலிமை உடையவர்கள். சுபர். எனவே நற்பலன் தரும் தன்மையும், [43]

தவறான வாக்குவாதம், புண்படுத்தும் பேச்சு, தாழ்ந்த குல மனிதன், பாவம் செய்யும் பெண், நாத்திகன், சூது, தீயபெண்ணுடன் சேர்க்கை, அயல்நாட்டுப் பயணம், தூய்மையின்மை, வேற்று இனம் அல்லது கீழ்த்தரமானவர், கரடுமுரடான இடத்தில் அலைதல்,

---

[40] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 120

[41] மேலது.

[42] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 72

[43] மேலது.

வெளியிடத்தில் தங்குதல், கடுமையான செயல், பயணம், ஒரு முகூர்த்தம், முதுமை, ஒரு வாகனம், நாகயோகம், தந்தைவழிப் பாட்டனார், தாங்கமுடியாத வலி, சூறைநோய், தீய நடத்தை, உருதுமொழி எழுத்தாற்றல், கொடுமையான பேச்சுத்தன்மையையும், [44]

இராகுவிற்குத் தென்மேற்குத் திசையும், கருப்பு நிறமும் பிரீதியானது. கல் - கோமேதகம், இராகு மறைந்து வாழ்தல், சிறைச்சாலைக்குப் போகுதல், சிறைகளில் வேலைபார்த்தல், கரும்பாம்பு, பாம்பால் மரணம், மற்றவரை விஷமிட்டுக் கொல்லுதல், ஜலத்தில் கண்டம், வெட்டுக் காயம், பிளவை, அங்கம் குறைவு படுதல், வலிப்புநோயையும் இராகு குறிக்கும்.

தகாத செயல்களில் ஈடுபடுதல், திருடுதல், திருட்டுக் கொடுத்தல், குடிப்பழக்கம், சாதிமாறுதல், சாதி மாறிக் கல்யாணம் செய்து கொள்ளல், விதவைப் பெண்களின் சேர்க்கை, அருவருப்பான பெண்களைச் சேருதல், கருப்புநிறப் பொருள் கடுகு, உளுந்து, எள், பிண்ணாக்கு, எண்ணெய் போன்ற பொருட்களின் வியாபாரங்களில் நன்மை, வாய்வுத் தொந்தரவுகளுக்கு ஆளாகுதல், குட்டநோய் முதலானவைகளை கொடுக்கும். [45]

உடல் உறுப்புகள் பெரிதாக இருத்தல், மூர்க்ககுணம், கூடுதல் போக இச்சை, சுயநலம், பேராசை மிக்கவர். பூர்வீக சொத்து, தனம், தற்புகழ்ச்சியான பேச்சாற்றல், பிறநாட்டினர் பணம், அமைதியான மனநிலை, சுவாசக் கோளாறுகள், மனோதைரியம், பூர்வீக உடமைகளை இழத்தல், நல்லகல்வி, சன்னியாச வாழ்க்கை, கூடுதல் காதல் வேட்கை, முறை தவறிய காதல் உறவு, ஓரினச் சேர்க்கை உறவுகள், சுவாசக் கோளாறு, இடப்புறப் பாதிப்புகள், செயல்திறன் குறைவு ஆகியவையும்,

அன்னியரால் இலாபம், புணர்ச்சியில் ஈடுபாடு, அலித்தன்மை, அன்னிய சமயத்தினரால் தொல்லை, பூர்வீகச் சொத்துக்கள்மூலம் பிரச்சினை, சுவாசத்தில் தடை, பல மொழிக்கல்வி, ஆய்வாளர், உடல் உறுப்புகளை மாற்றிக் கொள்ளல், கௌரவம், அந்தஸ்து உள்ள பணி, ஒழுக்கமில்லாத நண்பர்கள், மது, மாது, கேளிக்கைகளில் அதிக ஈடுபாடு,

---

[44] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 14

[45] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் -. ப. 22

சிறைத்தண்டனை, சிறையிலிருந்து தப்பித்தல் ஆகியவையும் இராகுவின் காரகத்துவமாகும்.[46]

இராஜ்ஜியம், குதர்க்கவாதம், கடினவாக்கு, சூதாட்டம், அஸ்தமனத்தில் பலம், தீய பெண்ணோடு சேர்க்கை, தேசாந்திரப் பயணம், வயிற்றுப்புண், மிலேச்சன், ஆபத்தான கட்டி, பெரிய காடு, விசம், சஞ்சாரம், மலைகளில் துன்பம் அனுபவித்தல், கபம், கவலை, கடுமை, பிரயாணம், முதுமை, வாகனம், தந்தைவழிப் பாட்டன், சூலைநோய், சுவாசகாசம், இளைப்பு, மகாப்பிரதாபம், துஷ்டத்தனம், கடின மொழி ஆகியவை இராகுவின் காரகத்துவம் ஆகும்.[47]

கடினவார்த்தை, சூதாட்டம், கள்ளக்கடத்தல், ஏமாற்றுதல், வஞ்சித்தல், பாம்பு, கவலை, விசபயம், சிறைத் தண்டனை, சட்ட விரோதச் செயல்கள், நோயுள்ள பெண்ணிடம் உடலுறவு, நீரினால் கண்டம், குலத்திற்கு எதிர்மாறான செயல், முதுமை, பிதுர்வழிப்பாட்டனார், மலைவாசிகள், பரதேசி, வேடத்தொழில், கவலைப்படுதல், கடவுள் மறுப்பாளர், தாழ்ந்தஇனம், அசுத்தம் ஆகியவற்றிற்கும்,[48]

ஞானம், பிதாமகன், பிரதாபம், செப்பிடுவித்தை, களவு, நானாவித வேடத் தொழில், சேவகத் தொழில், பரதேச வாசம், சாதிக்கு விரோதமாய் செய்யத்தகாத தொழில்கள் செய்தல், விகடவிநோத வித்தைகள், வியாதிஸ்திரீயுடன் கூடுதல், குட்டம், வீக்கம், நாட்பட்டரோகம், விசபயம், நீர்கண்டம், அங்க இழப்பு, வெகுபேச்சு, வாய்வு வலிப்பு, பித்தம், குன்மம், வெட்டுக்காயம், பிளவை முதலிய ரோகங்கள், விலங்கு, சிறைப்படல் ஆகியவற்றிற்கும் இராகுவே காரகன்.[49]

---

[46] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 47

[47] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 167

[48] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 223

[49] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 48

1.9. கேதுவின் காரகத்துவம்

வான சாத்திரத்தில் கேது என்ற கோள் முறைப்படி இல்லை. அதனால் இதை சாயாக் கோள் என்பர். ஆனால் வானசாத்திரம் இந்தகேதுவை கிரகணத்தை ஏற்படுத்தும் புள்ளிகள் என்று கூறுகிறது. [50]

அபிதான சிந்தாமணியில் கேதுவைப்பற்றி கூறியுள்ளதாவது. கேதுவின் தந்தை விப்பசித்தி, தாய் சிம்கிகை ஆவார். கஸ்யப முனிவரின் பேரன் ஆவார். இராகு இவரது அண்ணணாகும். தவம் செய்து செம்பாம்பு உருவமுடையவர். சூரியனுக்குச் சுமார் 13,000 விஸ்தார யோசனை தூரத்தில் உள்ள மண்டலத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டு குதிரைகள் பூட்டிய இரதத்தை உடையவராவார். இவர் சூரியனை எதிர்மறையாகச் சுற்றிவர ஏழு ஆண்டுகளாகின்றது. [51]

கேதுவிற்கு வழங்கியுள்ள பிற பெயர்கள்

பாம்பு, செம்பாம்பு, கதிர்பகை, சிகி, ஞானி ஆகியவற்றிற்கும்,

கேது ஒரு அசுபர். தடை செய்யும் கோள். தான் அமர்ந்திருக்கும் வீட்டைப் பாதிப்பவர். சுபரோடு இணைந்தாலும், உச்சத்தில் இருந்தாலும் தீயபலன் தராது. கேது செவ்வாய் போலச் செயல்படும். ஏழ்மை தரும். தடை செய்யும். முயற்சிகள் கைகூடாது. கேதுவின் எண்.7. இரத்தினக்கல். வைடூர்யம். தாய்வழி மூதாதையர், வலி, துன்பம், எதிரிகளைத் துன்புறுத்துதல், விசம், சுரம், காயம், சாவு, பகைமை, தற்பெருமை, சுயநலம் இவற்றோடு தொடர்புடையது. அதேசமயம் மத நம்பிக்கை, தத்துவம், மதிநுட்பம், மோட்சம், ஆன்ம நிலை, விடுதலை, மனோபலம் ஆகியவையும் கேதுவுடன் தொடர்புடையன. கேது உச்சத்தில் இருந்தால் தீமைகளை அழித்து சாதகரை செல்வந்தராக்கும் குணம் ஆகியவற்றிற்கும்,[52]

கேது பலவீனமாக இருந்தாலும், சரியாக அமையாவிட்டாலும், வறுமை, சூதாட்ட ஆர்வம், மரணநோய்கள், தடைகள் ஏற்படும், கேதுவால் மோட்சவாழ்வு சிறக்கும், இகவாழ்வு துன்பம் உடையதாகும். கேதுவின்

---

[50] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 51

[51] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 51

[52] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 121

பாதிப்பால் விபத்துக்கள், பாரிசவாயு, தோல் நோய்கள், நீர்க்கட்டி, கொப்பளங்கள், தேமல், வயிற்றுவலி போன்றவை தோன்றுதல் ஆகியவற்றிற்கும், [53]

கேது சிவந்த, கொடூர பார்வை உடையவராகவும், விசமான வார்த்தை உடையவராகவும், உயர்ந்தஉடல் கொண்டவராகவும் இருப்பார். கைகளில் ஆயுதம் ஏந்தியிருப்பவர். விலக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். புகைபோன்ற நிறம் கொண்டவர். எப்போதும் புகையை சுவாசித்துக் கொண்டிருப்பவர். காயமுற்ற உடல் உறுப்புகள் உடையவர். மெலிந்தவர். பொறாமை நிரம்பப் பெற்றவர். கேதுவிற்கு மண்பாத்திரமும், பல வண்ண ஆடையும் உரியன. கேதுவிற்குப் புதன், சுக்கிரன், சனி நட்பாகவும், செவ்வாய் சமமாகவும், சூரியன், சந்திரன், குரு பகையாவும் விளங்குதல் ஆகியவற்றிற்கும் கேதுவே காரகன். [54]

கோள்கள் நீச்சம், அஸ்தமனம், பகை வீடுகளில் இருந்தாலும், 6, 8 மற்றும் 12 ஆகிய வீடுகளில் இருந்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும். இங்கு இவர்கள் தீயபலன்களே தருகின்றனர். இதர இடங்களில் கோள்கள் வலிமை உடையவர். சுபராதலால் நற்பலன் தருவார். [55]

பல இறைவழிபாடு, மருத்துவர், மோட்சம், அனைத்து செல்வங்கள், உருக்கி நோய், வலி, காய்ச்சல், மாந்திரீகக் கலை, உறுதியின்மை, பிரும்ம ஞானம், கண்வலி, மூடத்தன்மை, தத்துவம், அனைத்து இன்பங்களை அனுபவித்தல், அதிர்ஷ்டம், பகைவர் தொல்லை, தந்தைவழிப் பாட்டனார், வயிற்றுப் புண், உடல்கட்டி போன்ற நோய்கள் ஆகியவை கேதுவின் செயல்பாடுகளாகும். [56]

கேதுவிற்கு வடமேற்குத் திசையும், சிகப்பு நிறமும் பிரீதியானது. கேது ஞானியாதல், சாமியாராதல், யோகியாதல், சித்தராதல், உண்மை பக்தனாயிருத்தல் (அ) போலி பக்தனாக நடித்து ஊரை ஏமாற்றுதல், தபம்,

---

[53] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 121

[54] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - பக்.72

[55] மேலது.

[56] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - பக்.15

ஜெபம், சிரமப்பட்டு, இழப்பு ஏற்பட்டு பாடம் பெறுதல். முயற்சிகளில் தோல்வி, சிறைவாசம், சிறைகளில் வேலை பார்த்தல், குடிப்பழக்கம், லாகிரி வஸ்துக்கள் உபயோகம், போதை மாத்திரை (அ) போதை ஊசிகள் உபயோகம், கஞ்சா, அபினி உபயோகம், மறைந்து வாழ்தல், இழிவான தொழில் செய்தல், ஊர் சுற்றித் திரிதல், அதிக அறிவுக்கூர்மை, சாமர்த்தியம், திடசித்தம், வைராக்கியம், செம்பாம்பு, விசத்தினால் கண்டம், குட்டநோய் முதலானவற்றையும், [57]

குற்றவியல் சிந்தனை, குறுக்குப்புத்தி, இரக்கமின்மை, தகாதசெயல், குறுக்கு வழியில் சம்பாதித்தல், பொய், வீண்விவாதம், மற்றவர்களுக்கு சாதகமாகப் பேசுவதுபோல் நடித்தல், பொய்யான குற்றச்சாட்டு, வீண்வழக்கு, பொய்யான பத்திரம் தயாரித்தல், வதந்தியைக் பரப்புதல், கல்வியில் சிறப்பு, கலப்படம், புதிய உற்பத்தி, கூடுதல் சந்தேகம் அதிகம், தெய்வவழிபாடு, யோகாசனம், நாள்பட்ட புண், புற்றுநோய், இலஞ்சம், வஞ்சம், பேராசை மிக்க பங்குதாரர், குற்றவியல் நடவடிக்கைமூலம் பிரச்சினை, தகாத செயல்களால் வஞ்சிக்கப்படுதல், குற்றவியல் தொடர்பான செயல்பாடு, கலப்படம், ஏமாற்றுதல், போலிப் பொருள் தயாரித்தல், ஆசிட், கெமிக்கல்ஸ், மருந்து தொடர்பான துறைகள், தகாத நண்பர்கள், தகுதிக்கு மீறிய பேராசை, இரகசிய திட்டங்களைத் தீட்டல், சதிவேலை, மறைமுகமாகச் செயல்பாடுகள் முதலியவற்றையும், [58]

இதர தெய்வங்களின் வழிபாடு, வைத்தியர், மோட்சம், சயரோகம், வலி, மகாதவம், அதிர்ஷ்டத்தின் அரவணைப்பு, மந்திர சாத்திரம், நிலையற்ற மனம், வயிறு மற்றும் கண் வியாதி, மூடத்தனம், மௌனவிரதம், வேதாந்தம், பாக்கியம், வைராக்கியம், பெரியம்மை, வேனல்கட்டி முதலிய வியாதிகள் ஆகியவற்றையும், [59]

ஆன்மீகம், ஞானம், விபசாரம், தாராள தர்மம், அனைத்துவிதச் செல்வங்கள், தாய்வழிப் பாட்டன், பாவத் தொழில், பகைவர் தொல்லை,

---

[57] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - பக்.22

[58] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 49

[59] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 168

ஏழ்மை, அரச தண்டனை, பெருநோய், விச பாண்டு, தீ விபத்து, நிலையற்ற எண்ணம், விலங்கின அறிவு, பில்லி, சூன்யம் போன்றவற்றையும், [60]

ஞானம், மாதாமகன், கபடத் தொழில், கீழ்குலத் தொழில், பாபத் தொழில், பரதேச ஜீவனம், விரணம், குஷ்டம், வயிற்றுவலி, அக்கினி கண்டம், அகங்காரம், அசுகம், சிறைப்படல் ஆகியவற்றையும் கேதுவே குறிப்பவர். [61]

1.10. தொகுப்புரை

இவ்வியலில் பின்னலாடை தோன்றிய வரலாறு, பின்னலாடைத் தொழிலின் சார்புத் தொழில்கள் விவரம், அவற்றின் எண்ணிக்கை விவரம், ஒன்பது கோள்களின் பொதுத் தன்மைகள், பின்னலாடைத் தொழிலுக்கான காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன், கேது, இராகு ஆகியவற்றின் காரகக் குணங்கள் ஆகியவை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

---

[60] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 223

[61] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 48

இயல் - 2



ஒன்பது கோள்களின் பாவகச் செயல்கள், தொழில்கள்

இயல் - 2

ஒன்பது கோள்களின் பாவகச் செயல்கள், தொழில்கள்

2.0. அறிமுகவுரை

இவ்வியலில் ஒன்பது கோள்களின் பாவகச் செயல்கள், பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு ஆகியவற்றின் தொழில்கள், பன்னிரு பாவகம் குறிப்பிடும் தன்மைகள், இலக்கின, பத்து மற்றும் பதினோராம் பாவகங்களில் சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு கோள்கள் நிற்பதால் ஏற்படும் பயன்கள், பன்னிரு பாவங்களில் சுக்கிரன், சந்திரன், கேது மற்றும் இராகு இருப்பதால் ஏற்படும் பயன்கள், பன்னிரு இலக்கினப்படியான பனியன் ஏற்றுமதியாளர்கள் குணங்கள் போன்றவை பற்றிய விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டு உள்ளன.

2.1. ஒன்பது கோள்களின் பாவ காரகங்கள்

சூரியனின் பாவ காரகங்கள்

பெருமதிப்பு, சுயநலம், பணியின் அப்படையில் அந்தஸ்து, நிர்வாகத் திறன், அரசினால் தன இலாபம், பித்தளைப் பொருட்கள், கட்டளையிடுதல், வரிப்பணம், பட்டாக்கள், சம்பத்துகள், பொருட்கள், தகப்பனாரின் கடைசிக் காலப் பத்திரம், அரசியல், ஒப்பந்தம், கௌரவமான மகன், காம இச்சைகளில் ஈடுபாடின்மை, எலும்புகளில் நோய், சட்டப்படியான பிரிவு, அரசினால் கடன் அல்லது உதவி, வழக்கு, வெப்ப நோய், அரசினால் திருமணம், அதிகாரமிக்க மனைவி, கண்காணிப்பு, காப்பீடு, தண்டனை, தொல்லை, தானம் பெறுதல், உயர் கல்வி, கௌரவப் பதவி, ஒப்பந்தப் பயணம், குத்தகை, பணி அதிகாரம், நம்பிக்கை, உடைமைகளை பாதுகாத்தல், வெகுமதி, அரசு அதிகாரிகள் நண்பர்களாதல், வெற்றி, வரி, கடன் பாக்கி, அரசுத் தடைகள் அல்லது அடக்குதல் போன்றவை சூரியனின் காரகங்களாகும். பொதுவாகச் சூரியன் அரசு தொடர்பான செயல்களைச் செய்பவர் ஆகியவை சூரியனின் பாவ காரகங்கள்.

சந்திரனின் பாவக காரகங்கள்

வேகமான சிந்தனைத் திறன், புத்திக்கூர்மை, நீர்பாங்கான உடல்வாகு, ஞாபக சக்தி, விரைவான தனவரவு, வெள்ளி, அலுமினியம் தொடர்பானது. நல்ல தெளிவான பேச்சாற்றல், குழப்ப மனோநிலை, விரைவான தகவல் தொடர்பு, ஒப்பந்தம், நல்ல கல்வி, விவசாய நிலம், எண்ணெய்க்கிணறு, நீர்பாங்கான இடத்தில் வசித்தல், விரைவான காதல் உறவுகள், கலைத் துறையில் மிகுந்த ஆற்றல், நீர், இரத்தம் சம்பந்தமான நோய், விரைவான பணவரவு, வேகமான வெற்றி, இளம்வயதுப் பெண், வேகமான புணர்ச்சி, அடிக்கடி மனமாற்றம் உடையவர், விரைவில் மற்றவர்களுக்கு இணங்கிவிடுதல், நீரினால் கண்டம், தாய்மூலம் பிரச்சினை ஆகியவையும்,

ஞாபகசக்தி குறைதல், உடலில் உள்ள நீர் குறைதல், இரத்தம் குறைதல், நல்ல ஆராய்ச்சித் திறன், வேகமான பயணம், தாய்மூலம் கௌரவம் அடைதல், நல்ல உயர்கல்வி, கேள்வி ஞானம் உடையவர், நீர் தொடர்பான திரவம், எண்ணெய், வெள்ளி, பால், அரிசி போன்ற துறைகளில் பணி, சுறுசுறுப்பான துறைகளில் பணி, சுறுசுறுப்பான நண்பர்கள், புத்திக்கூர்மையானவர்கள், வேகமாகத் தனது விருப்பங்களை நிறைவேற்றுதல், தாய்மூலம் மறைமுகத் தொல்லை, விளைநிலங்களுக்கு மூலதனம் செய்தல், சோம்பல் நிறைந்த தோற்றம் ஆகியவையும் சந்திரனின் பாவ காரகங்கள்.

செவ்வாயின் பாவக காரகங்கள்

முன்கோபம், முரட்டு நடவடிக்கை, எவரையும் மதியாமை, ஆணவம், காம இச்சை அதிகம் உடையவர், முரட்டுத்தனமான பேச்சாற்றல், பொய், மற்றவர்களை தன்னுடைய பேச்சால் துன்பப்படுத்துதல், ஊதாரித்தனம், செம்பு உலோகங்கள், வீரம், தன்னம்பிக்கை, காதுகளில் கோளாறு, வாந்தி, இடமாற்றம், துணிந்த செயல், வீடு, நிலம், இயந்திரம், வேளாண்மையில் ஈடுபாடு, மது போதைகளில் நாட்டம், தசைப் பகுதியில் கோளாறுகள், வெப்பம் தொடர்பான தொல்லை, காரமான உணவு உண்ணுதல், ஒழுக்கமில்லாத மனைவி, காம இச்சை அதிகம் உடையவர் ஆகியவையும்,

சத்துரு தொல்லை ஏற்படும். வெறித்தனமான புணர்ச்சி, வேளாண்மைக் கல்வி, முறையற்ற உறவுகள், உடல் பெருத்தல், வீக்கம்,

பொறியியல் கல்வி, தனியார் பணி, அதிகாரம் உள்ள பணி, தொழிற்சாலை, வீடு, நிலம், வாகனம், வேளாண்மைத் தொழில், ஊதாரித்தனமான நண்பர்கள், ஒழுக்கமின்மை, சுயநலம், பேராசைகள் உண்டு, தீவிரவாதத்தன்மை, கமுக்கமான ஆய்வு, வீடு, நிலம், வாகனம் முதலியவற்றில் மூலதனம் செய்தல், ஊதாரித்தனம் ஆகியவையும் செவ்வாயின் பாவ காரகங்கள்.

புதனின் பாவக காரகங்கள்

நகைச்சுவைப் பேச்சு, புத்திக் கூர்மை, ஞாபகசக்தி, மெலிந்த உடல், அனைவரிடமும் நன்கு பழகுதல், நல்ல தெளிவான பேச்சு, நல்ல கருத்துக்களைக் கூறுதல், விலை மதிப்புமிக்க கருவிகள், இரட்டைக்குரல், விரைந்த செயல்பாடு, எழுத்து, கணிதம், பேச்சு இவைகளில் நாட்டம், கணிதம், கல்வி, நுண்ணிய கருவிகள், நூல்கள், சுற்றுச் சுவர், வீடு, இரட்டிப்பான பொருட்கள், ஒன்றுக்கு மேற்பட்ட காதல், மெலிந்த பெண்களை விரும்புதல், கலை நுணுக்கம், நளினம் மிக்க பேச்சாற்றல், நரம்புமண்டலம், ஞாபகச்தி, உணர்வுப்பலன், இரத்தக் குழாய் முதலியவைகளில் நோய், கடன் தவணை முறையில் பெறுதல் ஆகியவையும்,

ஒப்பந்தப் பேச்சால் வெற்றி, அடிமைத் தொழில் மூலம் பணவரவு, இளவயதுப் பெண், துடிப்பான பேச்சாற்றல், விரைந்த செயல், புத்திக்கூர்மை, ஞாபகசக்தி உடைய மெலிந்த உடல்வாகு உடைய பெண் அல்லது பங்குதாரர், ஒரு முறைக்கு இரு முறை புணர்ச்சி செய்தல், இரகசியக் குறிப்பு, எழுத்து, ஒப்பந்தம் மூலம் பிரச்சினை, நரம்பு, இரத்தநாளம், பொறியியல் தொடர்பான உயர்கல்வி, கணித சோதிட ஆய்வு, ஒப்பந்தக்காரர், கணிதங்கள், தணிக்கையாளர், கணக்கர், ஏஜெண்ட், புரோக்கர் தொழில், மருத்துவம், ஆய்வு ஆகியவை புதனின் பாவ காரகங்கள். முதலியனவும் புதனின் பாவ காரகங்கள்.

குருவின் பாவக காரகங்கள்

பெரியமனிதத் தோற்றம், பொன் பொருட்கள் ஏற்படும், உண்மை பேசுதல், ஆலோசகர், பஞ்சாயத்துத் தலைவர், நல்ல பேச்சாற்றல், கல்வி, தேவாலயங்கள் கட்டுதல், அரண்மனைகள், மாளிகைவீடு, புத்திக்கூர்மை, தெய்வ வழிபாடு, கூடுதல் கொழுப்பு தொடர்பான நோய், பெரியமனிதரை வெற்றி கொள்ளுதல், பெரிய தொகைக் கடன், அமைதியான,

உண்மையான, பணிவான மனைவி அல்லது பங்குதாரர் தொடர்பு கொள்ளும் சட்ட நடவடிக்கையால் தண்டிக்கப்படுவார். காப்பீட்டுப் பணம் சட்டப்படி கிடைத்தல், தேடாத செல்வம் ஆகியவையும்,

யாத்திரை, கோவில் பணியில் ஈடுபடுவர், கௌரவப் பதவி வகித்தல், புகழைத்தரும் உயர்பதவி வகிப்பவர், சட்டங்களுக்கு உட்படுவார், சந்தோஷம் நிறைந்த வாழ்க்கையை ஏற்படுத்தும், உண்மையான நண்பர்கள், கல்வியில் சிறப்பு, இரகசிய சட்ட ஆலோசனையில் ஈடுபடச் செய்யும், சட்டப்படியான மூலதனம் அல்லது செலவு செய்தல் முதலியனவும் குருவின் பாவ காரகங்கள்.

சுக்கிரனின் பாவக காரகங்கள்

தன்னை அழகுபடுத்துதல், அலங்காரம் செய்தல், மகிழ்ச்சி உயர்வான சிந்தனை, கௌரவம், அந்தஸ்து கூடுதல், காமம், வசீகரம், நல்ல அழகான பேச்சாற்றல், அலங்காரப் பொருள், இரத்தினம், வாசனைப் பொருட்கள், பெருஞ்செல்வ நிலை, உற்சாகம் நிறைந்த மனம், அதிகமான தகவல் தொடர்பு, அடிக்கடி தன்னை மாற்றிக் கொள்ளல், கூடுதல் பயணம், வாகனம், விவசாயம். கல்வி, அலங்கரித்தல். கலைபொருள் தொடர்பானது, வீடு, திரையரங்கு, விடுதி, உல்லாச விடுதி, கலை தொடர்பானது, இன்ப காதல், உல்லாசம், மது, மாது, கேளிக்கை விருந்து ஆகியவையும்,

அழகான குழந்தை, உடலில் நீர் தொடர்பான சர்க்கரை நோய், இன்பமான கடன் வரவு, வெற்றி, கணவன் மனைவி பிரிவு, புகழ், காமகுணம் நிறைந்த அழகான தன் வயதுக்கு ஒத்த பெண், இன்பம் நிறைந்த மனைவி, பங்குதாரர், பெண்களால் அசிங்கம், அவமானம், சந்தோசக் குறைவு, உல்லாசக் குறைவு ஆகியவையும்,

வாகன விபத்து, விவசாய ஆய்வு, மோட்டார் தொடர்பான கல்வி, உல்லாசப் பயணம், இயல், இசை, நாடகம், கலை தொடர்பானவை. கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், கவர்ச்சிப் பொருள், அழகு சாதனப் பொருட்கள், பல்பொருள் அங்காடி தொடர்பான துறைகள், இன்பமான நண்பர்கள், விருந்து, கேளிக்கை, பேராசை, வெற்றி, விரைவில் ஆசை பூர்த்தியாதல், பெண்கள் விசயத்தில் இரகசிய ஈடுபாடு, கலை தொடர்பான ஆய்வு, பலதாரக் கலப்பு, வீடு, வாகனம், பெண்கள் மூலம் செலவு அல்லது மூலதனம் ஆகியவையும் சுக்கிரனின் பாவ காரகங்கள்.

சனியின் பாவக காரகங்கள்

தாழ்வு எண்ணம், கோழைத்தனம், எவரையும் நம்புவது இல்லை, மந்தபுத்தி, சந்தேகக்குணம், கூடுதல் பொய், சப்தமில்லாத பேச்சு, கருமித்தனம், பிறர்பொருள் மீது பேராசை கொள்ளுதல், பயந்த தன்மை, மனநோய், தனது கருத்துக்களை வெளியில் கூற அச்சம் கொள்ளுதல், விரைவில்லாத ஈடுபாடு, தாமதம், மரம், கருப்புநிறப் பொருட்கள், இரும்பு சாமான்கள், மதக் கல்வி, தரிசு நிலங்கள், அழுக்கடைந்த இடங்களில் வசித்தல், ஒழுக்கமில்லாத துக்கமான காதல் உறவு, இன்பமின்மை, மந்தபுத்தி உடைய குழந்தை, கீழ்த்தரத்தாருடன் காதல் உறவு ஆகியவையும்,

தோல் சம்பந்தமான நோய்கள், சிறிய தொகை, சிரமத்தின் பேரில் கடன், கூலி வேலைகள், பணவரவில் தாமதம், நிலையற்ற மனைவி, வயதுக்கு மூத்தபெண், ஒழுக்கமில்லாத குணம், பொய்யான நடிப்பு, விபத்து, தற்கொலை, புத்தியை இழத்தல், ஞாபகசக்திக் குறைவு, நல்ல ஆய்வு தொடர்பான கல்வி, தாமதமான மாற்றங்கள், தகுதிக்குக் குறைந்த அல்லது முதுமைப் பெண்ணிடம் முறையற்ற தொடர்பு, நிலையான தொழில், அதிக உழைப்பு, தாமதமான உயர்வுகள் அல்லது ஆசைகளை வெளியே காட்டிக் கொள்ளாமை, இரகசிய செயல், ஆய்வு, சேமிப்பு, அந்தரங்க வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படுதல் ஆகியவையும் சனியின் பாவ காரகங்கள்.

இராகுவின் பாவக காரகங்கள்

உடல் உறுப்புகள் பெரியதாக இருத்தல், மூர்க்ககுணம், கூடுதல் போக இச்சை, சுயநலம், பேராசை மிக்கவர், பூர்வீக சொத்து, தனம், தற்புகழ்ச்சியான பேச்சாற்றல், பிறநாட்டினர் பணம், அமைதியான மனநிலை, சுவாசக் கோளாறுகள், மனோதைரியம், பூர்வீக உடமைகளை இழத்தல், பூர்வீகச் சொத்து, நல்ல கல்வி, சன்னியாச வாழ்க்கை, கூடுதல் காதல் வேட்டை, முறை தவறிய காதல் உறவு, ஓரினச் சேர்க்கை உறவுகள், சுவாசக் கோளாறு, இடப்புறத்தில் பாதிப்புகள், செயல்திறன் குறைவு ஆகியவையும்,

அன்னியரால் இலாபம், புணர்ச்சியில் ஈடுபாடு, அலித்தன்மை, அன்னிய சமயத்தவர் கூட்டு, அன்னிய சமயத்தினரால் தொல்லை, பூர்வீகச் சொத்துக்கள் மூலம் பிரச்சினை, சுவாசித்தலில் தடை, பலமொழிக் கல்வி,

ஆய்வாளர், உடல் உறுப்புகளை மாற்றிக் கொள்ளுதல், கௌரவம் அந்தஸ்து உள்ள பணி, அலித்தன்மை, ஒழுக்கமில்லாத நண்பர்கள், மது, மாது கேளிக்கைகளில் கூடுதல் ஈடுபாடு, சிறைத் தண்டனை, சிறையிலிருந்து தப்பித்தல், பலதாரக் கூட்டு போக இச்சை ஆகியவையும் இராகுவின் பாவ காரகங்களாகும்.

கேதுவின் பாவக காரகங்கள்

குற்றவியல் சிந்தனை, குறுக்குப் புத்தி, இரக்கமின்மை, தகாத செயல், தன்னை அழகுபடுத்துவதில்லை, குறுக்கு வழியில் சம்பாதித்தல், பொய், வீண்விவாதம், மற்றவர்களுக்குச் சாதகமாகப் பேசுவதுபோல் நடித்தல், பொய்யான குற்றச்சாட்டு, பொய்க் கடிதம், வீண்வழக்கு, பொய்யான பத்திரம் தயாரித்தல், வதந்தியைப் பரப்புதல், கல்வியில் சிறப்பு, சட்டம், கலப்படம், புதிய உற்பத்தி, பயிர்த் தொழில் இவைகளில் நாட்டம், அங்கஹீனமான பெண்களை விரும்புதல், கூடுதல் சந்தேகம், தெய்வவழிபாடு, யோகாசனம், உடலில் உள்ள நீர்ப்பகுதியில் கோளாறு, நாட்பட்டபுண், புற்றுநோய், வியாபாரம்மூலம் இலாபம், குறுக்கு வழியில் வருமானம், இலஞ்சம், வஞ்சம், சூது நிறைந்த பெண், உடல் ஊனமுள்ள மனைவி ஆகியவையும்,

ஓரினப் புணர்ச்சி ஈடுபாடு, பேராசை மிக்க பங்குதாரர், குற்றவியல் நடவடிக்கை மூலம் பிரச்சினை, உடலில் உள்ள நீர்பகுதிகள் குறைவு, ஏமாற்றம் அடைதல், தகாத செயல்களால் வஞ்சிக்கப்படுதல், உயர்தரக் கல்வி, வியாபாரம், பொறியியல், வழக்கறிஞர் மற்றும் குற்றவியல் தொடர்பான செயல்பாடு உடைய உயர்கல்வி, கலப்படம், ஏமாற்றுதல், போலிப்பொருள் தயாரித்தல், ஆசிட், கெமிக்கல்ஸ், மருந்து சம்பந்தமான துறைகள், தகாத நண்பர்கள், தகுதிக்கு மீறிய பேராசை, சுயநலம், கபடத்தன்மை, இரகசிய திட்டங்களைத் தீட்டுதல், கொள்ளை அடித்தல், சதிவேலை, மறைமுகமான செயல்பாடுகள். ஆகியவையும் கேதுவின் பாவ காரகங்களாகும்.

2.2. பன்னிரு பாவம் குறிப்பிடும் தன்மைகள்

இலக்கின - சென்ம இடம் - முதல் பாவம்

உடலமைப்பு, உறுப்புகள், மகிழ்ச்சி, துன்பம், முதுமை, உண்மையறிதல், புகழ், கனவு, வலிமை, கண்ணியம், அரசியல், ஆயுள், அமைதியான குணம், வயது, தோற்றம், தற்பெருமை அல்லது செருக்கு,

பிழைப்பு, மற்றவருக்காகச் சூதாடுதல், பெயருக்குக் களங்கம், கௌரவம், தூக்கம், செயல்திறன், மற்றவர் பணத்தை ஏற்றுக் கொள்ளுதல், மற்றவர்களை அவமதிக்கும் போக்கு, நோயிலிருந்து விடுதலை பெறல், மனநிறைவின்மை, இயற்கைத்தன்மை, கால்நடைகளைக் காப்பாற்றும் தன்மை, நல்லொழுக்கப் பாதிப்பு, தன் இனத்தினரால் தன் பெயருக்குக் களங்கம் ஏற்படுதல் ஆகியவற்றை இலக்கின பாவம் மூலம் அறியலாம். [62]

இயல்பான உயரம், நிறம், அமைப்பு, வடிவம், உடல், ஆரோக்கியம், கற்பனைத் திறன், வீரம், ஒழுக்க குணம், ஆண்மை, கௌரவம், நன்மை, தீமைகள், தலை, முகத்தின் மேல்பாகம், ஆயுள், சூதாட்டம், கல்வி, நெடுந்தூரப்பயணம், ஓடிவிடுதல், எடுத்த செயலில் வெற்றி அல்லது தோல்வி, வாழ்க்கையில் போராட்டம், நாட்டு மக்களைக் கேள்வி கேட்பவர் போன்றவை இலக்கின பாவத்தின் மூலம் அறியலாம். [63]

உடல், உறுப்புகள், சந்தோசம், வருத்தம், முதுமை, உண்மையறிதல். அறிவு, பிறந்த இடம், பிரபலம், புகழ், கண்ணியம், கனவுகள், பலம், பெருந்தன்மை, அரசியல் வாழ்க்கை, ஆயுள், சாந்தம், வயது, தலைமுடி, தோற்றம், சுயமரியாதை, சீவனம், அடுத்தவருக்காகச் சூதாடுதல், நிந்தை, இழுக்கு, கௌரவிக்கப்படுதல், தோல், தூக்கம், பாண்டித்தியம், செல்வம், அவமதிப்பு, பழிவாங்கும் போக்கு, வியாதியிலிருந்து விடுதலை, கைவிடும் தன்மை, செயலாற்றும் திறமை, கால்நடைகளைக் காப்பாற்றும் முயற்சி முதலானவற்றை இலக்கின பாவத்தின் மூலம் அறியலாம். [64]

தன - வாக்கு - குடும்ப இடம் - இரண்டாம் பாவம்

பேசும் திறன், செல்வச் செழிப்பு, புனித நூல்களில் நம்பிக்கை, பிறருக்கு உதவுதல், இன்பமாயிருத்தல், மெய்மையும், பொய்மையும், உறுதி செய்தல், குடும்ப உறவு, மென்மையான பேச்சு, பரந்த மனப்பாங்கு, முயற்சியுடன் செல்வத்தைச் சேமித்தல், நட்பு, நண்பர், சிறப்பான உயர்வு,

---

[62] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 1

[63] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 52

[64] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 151

தடங்கலற்ற சொற்பொழிவுத்திறன். கற்புடமை, தன்னடக்கம், நிலையான எண்ணம், வாழும் திறன் முதலியன இரண்டாம் பாவத்தின் மூலம் அறியலாம். [65]

அதிர்ட்டம், ஒருவருடைய சக்தி, துணை, சொந்தக் கருத்துக்களை விளக்கும் தன்மை, பார்வை, வலதுகண், ஞாபகசக்தி அதிகரித்தல், கற்பனை, நாக்கு, மூக்கு, பற்கள், தாடையும், கன்னமும், வாக்குத் திறமை, மெய் (அ) பொய், பேச்சில் மிருதுத்தன்மை, பல அலுவல்கள், ஊதியம், இலாபம் அல்லது நட்டம், நகைகள், விலைமதிப்புள்ள இரத்தினக்கற்கள், உலோகங்கள், பத்திரங்கள், விற்பனை செய்யத்தக்க அல்லது மாற்றக்கூடிய செல்லுமதிகள், ஊதாரித்தன்மை, ஊதியங்கள், தனம்வரும் வழி போன்றவை இரண்டாம் பாவம் மூலம் அறியலாம். [66]

வாக்கு, செல்வம், தெய்வீக மத நூல்களில் நம்பிக்கை, மற்றவர்களைப் பேணுதல், சௌகரியங்களை அனுபவித்தல், கண்கள், துணிகள், நகைகள், வைரம் மற்றும் விலையுயர்ந்த கற்கள், செம்பு, தாமிரம், முத்து, தீர்மானம் செய்தல் அல்லது கட்டுப்படுத்துதல், செயற்கைப் பொருட்கள், குடும்பம், மிருதுவான பேச்சு, பெருந்தன்மை, தர்மசிந்தை, செல்வம் சேர்க்கும் முயற்சி, பரோபகாரம், சிறந்த சொல்வன்மை, பணிவு, திடசிந்தை, செல்வாக்கான வாழ்க்கை முதலியனவும் இரண்டாம் பாவம் மூலம் அறியலாம்..[67]

சகோதர – தைரிய - வீரிய ஸ்தானம் - மூன்றாம் பாவம்

வீரம், உடன் பிறந்தவர்கள், போர், செவிகள், கால்கள், குழப்பமான மனம், தகுதி, சொர்க்கம். துன்பம் ஏற்படுதல், கனவு, படைவீரர், சிறந்த வீரம், நெருங்கிய உறவினர்கள், நண்பர், சொத்துப் பிரிவினை, அணிகலன்கள், கல்வி கற்றல், பொழுது போக்கு, உடல்வலிமை, இலாபம், உடல் மூலமாக வளர்ச்சி, உயர் பாரம்பரியம்,

---

[65] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 1

[66] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 52

[67] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 152

பணியாட்கள், சமயப்பணிகள், பெருவணிகம் முதலியன மூன்றாம் பாவத்தின் மூலம் அறியலாம். [68]

ஞாபகசக்தி, மனபலம், கல்விப் பயிற்சிக்கு ஏற்ற மனச்சார்பு, வீரம், உறுதிப்பாடு, வாந்தி, கோள் சொல்லுதல், குறுகிய பயணம், கையொப்பம், சக்தியைக் குறைத்தல், எதிர்பாராத தொடர்பு, மிதிவண்டி, பேருந்து, டிராம் அல்லது புகைவண்டி, கடிதம், போக்குவரத்து, தாள், எழுத்து, கணக்கு வைத்தல், கணிதம், செய்திப் போக்குவரத்து, தபால் நிலையங்கள், தபால்பெட்டி, தந்தி, அச்சுத்தந்தி, தொலைக்காட்சி, செய்திப் போக்குவரத்து, வானொலி, வானொலிச் செய்திகள், அடையாளங்கள், விமானக்கடிதம், நடுவர், தூதுவர், பறை சாற்றுபவர், இதழ் ஆசிரியர், அறிவிப்பாளர், வீடுமாற்றம், நூலகம், நூல் சேகரிப்பு, வியாபாரம், குத்தகை ஒப்பந்தம், வீடு விற்பனை, தொலைபேசி போன்றவற்றை மூன்றாம் பாவம் மூலம் அறியலாம். [69]

தைரியம், சகோதரர்கள், யுத்தம், காதுகள், நிலம், தகுதி, படைவீரன், பராக்கிரமம், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், சக்தி, ஆபரணங்கள், நற்பண்புகள், கல்வி, பலம், இலாபம், பாரம்பரியம், நன்னடத்தை, பெரும்ஒப்பந்தம், தனிப்பட்டக் கடமைகளைசரிவரச் செய்தல் ஆகியவற்றை மூன்றாம் பாவம் மூலம் அறியலாம். [70]

மாத்ரு – வித்யா - சுக ஸ்தானம் - நான்காம் பாவம்

கல்வி கற்றல், அரசு, வீடு, பயணம், மனிதரால் இயக்கப்படும் வாகனங்கள், எண்ணெய்க் குளியல், ஆடைகள், சிறிய கிணறு, நண்பர்கள், நீர். பால், நறுமணப் பொருட்கள், மகிழ்வான வாழ்வு, நற்பெயர், மருத்துவத்துறையில் அற்புதத் திறமை, நம்பிக்கை, தவறான குற்றச்சாட்டு, வெற்றி, நிலம், தோட்டம், தாய் வழி உறவு, தூய்மையான அறிவு, தந்தையின் ஆயுள், மனைவியின் தொழில், சேமிப்பு, மாளிகை, கலை, வீட்டின் நுழைவிடம், நிலையின்மை, தந்தைவழி சொத்து, களவு போன பொருட்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து உரைக்கும் திறமை,

[68] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 2

[69] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 52

[70] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 152

நன்செய் நிலத்தில் விளைந்த தானியங்கள் முதலியன நான்காம் பாவத்தின் மூலம் அறியலாம். [71]

கல்லறை, தனிப்பட்டோரின் செயல்கள், அந்தரங்க வாழ்க்கை, ஞாபகச் சின்னங்கள், கல்விப் பயிற்சி, அதிகசக்தி உற்பத்தி, ஒருவருடைய வீடு, வீட்டுக்குரிய சார்பு, அபூர்வப் பொருட்கள், வாகனங்கள், நிலம், தானியவயல், பண்ணைகள், பழத்தோட்டங்கள், சுரங்கங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள், புராதனப் பொருட்கள், பரம்பரை சொத்துக்களும், புதையல்களும், பள்ளி, கல்லூரி, படகுகள், எண்ணெய் குளிப்பு, சிறுகிணறு, பால், கலை உற்பத்தி செய்தல், விண்ணுலகிற்கான மூலிகைள் முதலியவற்றை நான்காம் பாவம் மூலம் அறியலாம். [72]

கல்வி, தேசிய அல்லது அரசாங்கப் பணி, பிரயாணம், வீடு, மற்ற வாகனங்கள், ஆடைகள், பானம், பால், வாசனைத் திரவியங்கள், மகிழ்ச்சியான வாழ்க்கை, நற்பெயர், நம்பிக்கை, தவறான குற்றச்சாட்டு, மண்டபம், வெற்றி, சோகம் அல்லது தொல்லை தரும் செயல்கள், விவசாயம், நிலம், பல்வேறு புனிதமான ஏற்பாடுகள், தூய்மையான திடமான அறிவு, சம்பாத்தியத்தைப் பாதுகாத்தல், அரண்மனை, சிற்பவேலை, நடத்தை, புதியவீட்டில் குடிபுகுதல் முதலியவற்றை நான்காம் பாவம் மூலம் அறியலாம். [73]

பூர்வ புண்ணிய – புத்திர இடம் - ஐந்தாம் பாவம்

சந்ததிகள், தந்தையால் செய்யப்படும் புண்ணியச் செயல்கள், நலலொழுக்கம், இயந்திரக்கலை, மனம், கற்றறிதல், மதிநுட்பம், நீதிக்கதைகள், நற்செய்திகள், தனக்கு விருப்பமான பல வழிகளிலும் செயலாற்றுதல், மூதாதையர் சொத்து, வரும் முன்அறியும் சக்தி, மனைவிவழி சொத்து, கணிகையர் உறவு, ஆழ்ந்த அறிவு, உறுதியான எண்ணம், கண்ணியம், செய்திகளை எழுதுதல், நோயின்றி நன்றாக இருத்தல், நட்பு, இலக்கியங்களைப் படைத்தல், வணிகத்தில் ஈடுபாடு, குபேரச்செல்வம், அன்னதானம், பாவ புண்ணியம் பார்த்தல்,

---

[71] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 2

[72] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 53

[73] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 153

வேதமந்திரங்களைப் பயன்படுத்துதல், அறிவாற்றல், ஆழ்ந்த சிந்தனை, பணம் ஈட்டும் வழிகள், உள்ளப்பூர்வமாகத் திருப்தியடைதல், ஆழ்ந்தபுலமை, பாரம்பரிய அமைச்சர் பதவி முதலானவற்றை ஐந்தாம் பாவம் மூலம் அறியலாம்.. [74]

காதல் விசயங்கள், நல்லொழுக்கம், சுவையும், அலங்காரம், இயந்திரக்கலைகள், விவேகம், புண்ணியம், பாவம், பகுத்தறிதல், தேவப்பிரச்சன்னம், சமயத்தைப் பற்றிய சிந்தனை, ஆழ்ந்த படிப்பும், அறிவும், உல்லாச சம்பவம், மந்திர உச்சாடனம், வைதீக பழக்கங்கள், உடலில் உள்ள அணுக்கள், நோயிலிருந்து விடுபடல், ஒருவருடைய சந்ததி, குழந்தை, சித்திர மேதாவித்தனம், பொழுதுபோக்கு, கொண்டாட்டம், வினோத விளையாட்டு, விசித்திரக்கலை, ஆட்டம். சினிமா, நாடகம், சங்கீதம், நடனம், விருந்து, விழாக்கள், சூதாட்டம், சபை, அளவு கடந்த செல்வம், குதிரைப் பந்தயம், பங்குகள், உழைப்பில்லாத வருமானம், லாட்டரி, பண்டமாற்று போன்றவை ஐந்தாம் பாவகம் மூலம் அறியலாம். [75]

குழந்தைகள், தந்தையின் புண்ணிய காரியங்கள், நன்னடத்தை, சிற்ப வேலை, புத்தி, கல்வி, கர்ப்பம், நற்பத்திரங்கள், மந்திரப் பிரயோகம், பிதுரார்ஜித சொத்து, ஞானதிருஷ்டி, மனைவிவழி சொத்து, ஆழ்ந்தஞானம், உறுதியான சிந்தை, இரகசியம், நன்னடத்தை, நற்செய்தி, ஆரோக்கியம், நட்புறவு, காவியங்களையும் பிரபந்தங்களையும் தொகுத்தல், நற்பணிகளில் பிரயத்தனம், மந்திரம், உபாசனை, தயை தாட்சண்யம், பாவ புண்ணியம் பார்த்தல், ஜபங்களையும் மந்திரங்களையும் பிரயோகித்தல், பாண்டித்யம், ஆழ்ந்த சிந்தனை, பணம் சம்பாதிக்கும் வழிகள், இலக்கியத்தில் புலமை முதலியன போன்றவை ஐந்தாம் பாவம் மூலம் அறியலாம். [76]

சத்ரு – ரோக - ருண இடம் - ஆறாம் பாவம்

நோய், இடையூறுகள், தாய்வழி மாமன், கபம், உடலில் ஏற்படும் வீக்கம், கொடுஞ்செயல், மனநோய், கட்டி, பகை, நோயுடன் இருத்தல்,

---

[74] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 3

[75] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 53

[76] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 154

பால்வினை நோய் ஏற்படுத்தும் புண், கடன், பழிச்சொல், பகைவரின் மகிழ்ச்சி, எலும்புருக்கி நோய், வெப்பம், காயம், மனக்கவலை, கடுமையான வேதனை, பலருடன் பகை ஏற்படுதல், தொடர்ச்சியான கண்நோய்த் தொந்தரவு, பங்காளிகள் வழியில் தொந்தரவும், அச்சமும், இலாபம், சோர்வு நிலை, நஞ்சு, கடும் வயிற்றுவலி அல்லது வயிற்றுப்புண், சுயமரியாதையைக் காப்பாற்றுதல், சிறுநீரகக் கோளாறு, வயிற்றுப் போக்கு, சேவை செய்தல், களவு, ஆபத்து, சிறைச்சாலை, உடன்பிறப்பு, மற்றவர்களுடன் கருத்து வேறுபடுதல் போன்றவை ஆறாம் பாவம் மூலம் அறியலாம். [77]

வியாதியின் வீடு, நோய், பராமரிப்பு, உணவு, பகைமை, உடைகள், ஆரோக்கிய சாத்திரம், நேரம் தப்பிய சாப்பாடு, சேவை, முடிவு, தொழிலாளர்கள், வேலையாட்கள், சிறு பிராணிகளைக் கடனாக வாங்குதல், வாடகை வீடு, சுகாதார மூலிகைகள், போட்டி பந்தயத்தில் சாதகமான நிலைகள், எதைத் தொட்டாலும் தடை, சித்த பேதம், கருமித்தனம், களவு, ஆபத்து, சிறைச்சாலை, கைத்தொழில் போன்றவை ஆறாம் பாவகத்தின் மூலம் அறியலாம். [78]

வியாதி, தடை, யுத்தம், தாய்மாமன், கபம், கட்டி, கொடூரச் செயல், பைத்தியம், பெரியம்மை, பகை, எதிரி, கஞ்சத்தனம், கடும் சுவாசம், மர்ம உறுப்பில் கட்டி, கடன்கள், அவதூறு, எதிரியின் மகிழ்ச்சி, சயரோகம், குணப்படுத்தக்கூடிய தேகக்கட்டி, காயம், மனக்கவலை, வேதனை, பலராலும் வெறுக்கப்படுதல், கண்நோய், எதிரிகளால் நஷ்டம், அழிவு அல்லது கீழே விழுதல், சோர்வடைந்த நிலை, விசம், வயிற்றுப்புண், விலங்கிடுதல், சுயமரியாதையைக் காப்பாற்றுதல், சிறுநீரகக் கோளாறு, சீதபேதி, சிறை தண்டனை முதலானவற்றை ஆறாம் பாவம் மூலம் அறியலாம். [79]

---

[77] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 3

[78] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 54

[79] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 154

களத்திர இடம் - ஏழாம் பாவம்

திருமணம், கட்டுப்பாடற்ற உறவு, காதலித்து வெற்றியடைதல், முறையான வழியிலிருந்து விலகுதல், நறுமணப் பொருள், இசை, மலர்கள், சுவையான கார உணவுகள், பானங்கள், பயணத் தடங்கல், ஞாபகமறதி நினைவிழத்தல், கணவனின் கற்புநிலை, இருமனைவிகள், ஆண் (அ) பெண்ணின் மர்மஉறுப்புகள், வணிகம், அன்பளிப்பு, செயல்திறன் அறிதல், பகைவரை அழித்தல், வேறொரு இடத்தில் பாதுகாக்கப்பட்ட பணம், வாக்குவாதம், வெளிநாடு, களவு முதலானவற்றை ஏழாம் பாவம் மூலம் அறியலாம். [80]

ஒற்றுமையான வீடு அல்லது மண்ணினால் இணைப்பு, கேள்வி கேட்பவர், சட்டமுறையான கட்டுப்பாடு, வர்த்தகத்தில் நம்மை சந்திக்கும் நபர், இருவர் சண்டை, நீண்ட ஆயுளுக்கு அபாயம், எதிரியிடமிருந்து நன்மை, தீமைகள், சுக பரிமாற்றங்கள், கௌரவமும் மதிப்பும் பெறல், கொடுக்கல் வாங்கல் செய்பவர், வழக்கு, அபராதம், திருமணம், விவாகம், விவாகப் பிரிவினை, குத்தகை, பிற நாடுகளில் செல்வாக்கு, இழந்த பொருள் மீட்பு, திருடனைப் பற்றி விசாரித்தல், யுத்தம், வெளிநாட்டு விவகாரங்கள், **சர்வதேச வர்த்தகம்**, பொதுக்கூட்டங்கள், ஒருவரின் வேலையாளை சுயமாக ஆதினப்படுத்துதல் போன்றவை ஏழாம் பாவகம் மூலம் அறியலாம். [81]

கீழ்த்தரமான பெண்ணோடு விரோதம், தாம்பூலம் தரித்தல், துணிமணிகள் முதலானவை வாங்குதல், வாணிபம் அல்லது வியாபாரம், பால், இனிப்பான அல்லது மகிழ்ச்சியான மாளிகை, நெய் மற்றும் தானியங்களால் தயாரிக்கப்பட்ட உணவு, தானதருமங்கள், பராக்கிரமம், வெற்றி, உடல்உறவு, தத்து புத்திரன், நெய்யால் செய்யப்பட்ட பலகாரங்கள், சொந்தஇடம் அல்லது தூரமான இடம், இரகசியமான பாலுறவு இன்பங்கள் முதலானவற்றை ஏழாம் பாவம் மூலம் அறியலாம். [82]

---

[80] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 4

[81] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 54

[82] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 155

ஆயுள் - மாரக இடம் - எட்டாம் பாவம்

ஆயுள், மகிழ்ச்சி, தோல்வி, ஆயுள் காப்பீட்டுப் பணம், வாடிய முகத்தோற்றம், பில்லி சூனியம், உணவிற்காகச் சண்டையிடுதல், சிறுநீரக நோய், பேராபத்து, உடன்பிறப்பினரின் பகைவர், மனைவியை ஏளனம் செய்தல், பகைவரின் கோட்டை, துன்பம், சோம்பல்தனம், அரசதண்டனை, அச்சம், பணமிழப்பு, கடன் கொடுத்தல், மற்றவரின் அறியாமையினால் பணம் பெறுதல், நீடித்த, நிலை பெற்ற சொத்து, பாவம், கொலை செய்தல், உடல்உறுப்பு சேதமாகுதல், தலையை வெட்டுதல், மனத்துயரம், மன அமைதியைக் குலைக்கும் கதைகள், தொடர்ச்சியான அதிர்ட்டமின்மை, தீய செயல்களைச் செய்யும் முயற்சி, போர் - சண்டை, கடுமையான மனத்துயரம் முதலானவற்றை எட்டாம் பாவம் மூலம் அறியலாம்.. [83]

ஆயுள் நீட்டிப்பு, மரணத்தின் வீடு, உரிமை, கடைசிக்கால இச்சா பத்திரம், ஆயுள்காப்பீடு, மறுபிறப்பின்மை, இயற்கை அல்லது செயற்கை மரணம், நீரில் மூழ்கிவிடல், தற்கொலை, துர் அதிட்டம், துக்கமும் தளர்ச்சியும், ஆபத்து, அறுவை வைத்தியம், கடுமையான விபத்து, நோய் அதிகரிப்பு, பயணத்தின் தொல்லை, எதிரிகளால் துன்பப்படுதல், கற்பழிப்பு, உறுப்புகள் இழப்பு அல்லது பழுதடைதல், மரண சாசனப் பொருள், உதவிப்பணம், மறையும் பொருள், துர்பாக்கியம், வாக்குவாதம், கவலை, நட்டப்படுவது, தாமதம், நம்பி மோசமடைதல், தோல்வியும் நட்டமும் முதலியன எட்டாம் பாவகம் மூலம் அறியலாம்.

தடை, பழி, கெட்டபெயர், விபத்து, பகைவரிடமிருந்து தவறான வழக்குகள், ஆறு தாண்டுதல், திருட்டு, கொள்ளை, கோட்டையை முற்றுகையிடல், போர், சீதனம், தேடாத செல்வம், எதிர்பாராத இலாபம், இலாபப்பங்கு, வைத்திய உத்தியோகஸ்தர்கள், ஆடு மாடு வெட்டும் மண்டபம், கசாப்புக்காரர், தனி இடங்கள், பொதுமரணங்கள், வெள்ளம், நெருப்பு, பஞ்சம், நிலநடுக்கம், உள்நாட்டு ஆபத்து அல்லது துன்பம், பிற நாடுகளுடன் பணமூலமாகப் பிணைப்பு, தேசிய ஏற்றுமதி, இறக்குமதி, பிற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன், பற்றாக்குறை, வட்டி விகிதம்,

[83] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 5

செத்தவரின் பணம், பரிசுப்பத்திரம் போன்றவை எட்டாம் பாவகம் மூலம் அறியலாம். [84]

ஆயுள், சந்தோசம், தூரத்து உறவினரின் மரணம், மரணத்தால் ஏற்படும் துக்கம், கலகத்திலிருந்து விலகுதல், இடைவிடாத தொந்தரவால் வருத்தம், சகோதரன், பகைவன், கணவன் அல்லது மனைவியால் உண்டாகும் துன்பங்கள், துக்கம், அரசாங்கத் தண்டனையைப் பற்றிய பயம், நட்டம், கடன்கள். துட்டனின் வருகை, மிகுந்த தண்டனை முதலானவற்றை எட்டாம் பாவம் மூலம் அறியலாம். [85]

பாக்கிய – பித்ரு இடம் - ஒன்பதாம் பாவம்

தருமம், புண்ணியம், புண்ணிய தீர்த்தமாடுதல், பாவதண்டனை, பெரியோர்களுக்கு மரியாதை செய்தல், மருந்துப் பொருள், ஒழுக்கம், மனத்தூய்மை, இறைவழிபாடு, கற்பதற்காக தொடர்ந்து முயற்சி செய்தல், சிறப்பு, பிரயாணம். பெருஞ்செல்வம், கொள்கை, கண்ணியம், நீதிக்கதை, பயணம், சமயச்சடங்கிற்காக குளித்தல், ஊட்டஉணவு, நன்மக்களுடன் சேருதல், மகிழ்ச்சி, தந்தைவழி சொத்து, அனைத்துவகை சொத்துக்கள், பிரம்மஞானம், வேதச்சடங்குகள், பணப்பழக்கம் முதலியன ஒன்பதாம் பாவம் மூலம் அறியலாம். [86]

நம்பிக்கை, விவேகம், தெய்வவழிபாடு, தத்துவஞானம், சமயச்சார்பு, தியானம், முன்யோசனை, ஆராய்ச்சி. புதியன கண்டுபிடித்தல், கனவும், காட்சியும், ஆவிகளுடன் தொடர்பு, சட்டரீதியான நடுநிலைமை, கடவுளுக்கு வணக்கம், நீண்ட பயணங்கள், கடல் பிரயாணம். வான்வழிப் பயணம், ஆன்மீக மதிப்புள்ள நூல்கள் வெளியிடல், அதிர்ஷ்டம். முதல் ஏற்படுத்துதல், யாத்திரை, சட்டம், தர்மபோதனை, கோவில்கள், கிறித்துவ தேவாலயங்கள், மசூதிகள், தருமம், கப்பல் தொழில், வான்வெளியிலும், தரையிலும் பிரயாணம், சட்டத்துறைகள், சமயம் தொடர்பான செயல்கள், அறிவியல், பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டு, உள்நாட்டுப் போக்குவரத்து, சிற்றலை, வானொலி, தூரச் செய்திப் போக்குவரத்து, கடல் தந்தி,

---

[84] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 54

[85] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 156

[86] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 5

கம்பியில்லாத் தந்தி, குதிரைகள், யானை, எருமைகள், முடிசூட்டும் மண்டபம், பணப்புழக்கம், கிணறுகள், ஏரிகள், குளங்கள், தண்ணீர்ப்பந்தல், பணமூலமாகப் பிரதிக்கினை போன்றவை ஒன்பதாம் பாவகம் மூலம் அறியலாம். [87]

தீர்த்த யாத்திரை, தவம், குருவுக்கு மரியாதை செய்தல், மனத்தெளிவு, தெய்வீக ஆராதனை, அதிர்ட்டம், விவேகம், வீரம், நற்கதைகளைக் கேட்பதும், பரப்புவதும், புனிதஸ்நானம், போசித்தல், புண்ணிய காரியங்களில் தொடர்பு கொள்ளல், அஷ்டஐசுவர்யங்கள். பட்டாபிசேகம், கோவில், தியாகம் முதலியன முதலியன ஒன்பதாம் பாவகம் மூலம் அறியப்படும். [88]

ஜீவன – கர்ம இடம் - பத்தாம் பாவம்

வணிகம், அரச வெகுமானம், குதிரைச் சவாரி, குத்துச் சண்டை, அரசுப்பணி, சேவை, விவசாயம், மருத்துவர், செல்வச் சேமிப்பு, தியாகம், உயர்ந்த நிலையிலிருத்தல், மூத்தோர்கள், மந்திரம், புண்ணியத்தின் அளவு, மருந்து, தொடை, இறைவன், மந்திரசித்தி, முன்னேற்றம், தத்துப்பிள்ளை, செல்வந்தர், முதலாளி, சாலை, கௌரவம், கௌரவமான வாழ்வு, இளவரசர், கற்பித்தல், முத்திரை, மிகஉயர்ந்தநிலை, சுயகட்டுப்பாடு, அதிகாரதோரணை முதலியன பத்தாம் பாவம் மூலம் அறியலாம். [89]

செல்வந்தன், மரியாதை, பெருந்தன்மை, பெருமதிப்பு, பெயரும் புகழும், அதிகாரமும், கௌரவமும், நம்பிக்கையும், ஒழுக்கமும், சித்தியும், மதிப்பும், குலமும், கீர்த்தியும், மரியாதையும், படிப்பும், புகழும் பேராசையும், அதிகாரம், இல்லற நடவடிக்கை பொறுப்புகள், மேல் உயர்தல், ஏவல் கொள்பவர், உலகத்திலிருந்து விடுபடல், முதலாளி, நீதிபதி, அரசாங்கம், புண்ணிய இடங்களுக்கு யாத்திரை, அரசிடமிருந்து கௌரவம், வேளாண்மை மருத்துவர், ஒருவருடைய முதல் தொழில், புதையல் அடைதல், மந்திரக்கவசம், நூல்நெறி. மருந்து, தொழில் அபிவிருத்தி, கல்வி பயிலுதல், மழை, திருடர் கொண்டு போன பொருட்கள்,

---

[87] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 55

[88] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 156

[89] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 6

சம்பத்துகள், தேசத்தலைவர் போன்றவை பத்தாம் பாவம் மூலம் அறியலாம் [90]

வியாபாரம், வைத்தியம், கீர்த்தி, புகழ், மறைத்து வைக்கப்பட்ட புதையல், குரு, ஆசிரியர்கள், தெய்வீக இயந்திரங்கள், புனிதப் பயணம், மந்திர உச்சாடனம், தாயார், எஜமானத்துவம், சரியான பாதை, சுயமரியாதை, கௌரவித்தல், புகழ், போதனை செய்யும் திறமை, அதிகாரப் பதவி, செல்வாக்கு முதலியன பத்தாம் பாவம் மூலம் அறியலாம். [91]

இலாப இடம் - பதினொன்றாம் பாவம்

அனைத்து வகையான இலாபம், தீய விருப்பம், அனைத்து வகையான வருமானம், பிறரை நம்பியிருத்தல், மூத்த உடன்பிறப்பு, தந்தைவழி சிற்றப்பன், இறை ஆராதனை, அமைதியான இறைவழிபாடு, கற்றல், சொத்துக்கள் மற்றும் பொன்னைச் சேகரித்தல், கூர்மையான அறிவு, மூதாதையர் சொத்து, சிறப்பான நிலை, முதலாளியின் சொத்து, வட்டி இழப்பு, பெண்ணின் விருப்பத்தின் பேரில் தங்கநகைகள் செய்து கொடுத்தல், புலமை, அமைச்சர் பதவி, மைத்துனர், புதையல் போன்ற செல்வம் தேடி வருதல், விரும்பிய குறிக்கோளை அடைதல், எளிதான இலாபம், விருப்பம், அழகிய ஓவியம், கலைகளில் திறமை முதலானவற்றை பதினோராம் பாவம் மூலம் அறியலாம். [92]

தோழர்களின் வீடு, சபை, சமுதாயம், பிரியப்பட்டவை, பார்வையாளர்கள், ஆலோசகர்கள், ஆதரவாளர்கள், உண்மை விரும்பிகள், நம்பிக்கை, ஆசைகளும், மன ஊக்கமும், எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றி, மகிழ்ச்சி, அபிவிருத்தி, இலாபம், எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம், நட்பின் இணைப்பு, நிரந்தரமடைதல், புனர் நிர்மாணிப்பு, நோய் குணமடைதல், சுகம், நம்பிக்கை, உறுதிப்பாடு, இடதுகாது, வலதுபாதம், இடதுகையும், இருகால்களும். முன்னேற்றமும், செல்வமும் ஒருவரின் செல்வாக்கு அதிர்ட்டமும், பிரதிநிதித்தேர்வு வழக்கு, சமுதாயம்,

---

[90] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 56

[91] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 157

[92] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 6

வாணிபம், எழுத்துக்கள், ஆதாயம், சம்பத்துவரவு, முதலும் வட்டியும், எளிதில் இலாபமடைதல், மகிழ்ச்சியான செய்தி, அதிர்ட்டத்தின் விளைவு, பாராளுமன்ற அல்லது சட்ட நிறுவன சபைக்கிளைகள், மக்கள்சபை, தேசசபையின்கீழ் விரிவு, மாநகராட்சி, மாநகரசபை அங்கங்கள், மாவட்ட சபைகள், பஞ்சாயத்துகள், அரசாங்கக் கொள்கைளும், திட்டமிடலும், நாடுகளின் நட்புறவு, நன்மை பரிமாற்றம், கம்பெனிகள், களஞ்சியங்கள், சங்கங்கள். சபைகள், வெற்றி பெறும் எண், மருத்துவமனையிலிருந்து விடுபடல் போன்றவை பதினோராம் பாவகம் மூலம் அறியலாம். [93]

பல வழிகளிலும் கிடைக்கும் இலாபம், கெட்டஆசைகள், அடுத்தவருக்காகப் பணி செய்தல், கல்வி, பொன், பொருள் சேர்க்கும் திறமை, முழங்கால், செல்வம், செல்வஇழப்பு, பாண்டித்தியம், இலாபம், அதிர்ஷ்டம், எளிதான முறையில் வரும் வரவுகள், சமையல், தாயின் ஆயுள், காதுகள் போன்றவற்றை பதினோராம் பாவகம் மூலம் அறியலாம்.[94]

விரய –அயன – சயன - சுக இடம் - பன்னிரெண்டாம் பாவம்

தூக்கத்திலிருந்து விழித்து எழுதல், மனவருத்தம், பாதங்கள், பகைவர் பயம், சிறைத்தண்டனை, வலிகளிருந்து விடுதலை, கடனைத் தீர்த்தல், மூதாதையர் சொத்து, பகைவர், சொர்கத்திற்கு செல்லுதல், இடதுகண், பொதுமக்களின் பகைமை, உடலுறுப்பு அறுபடுதல், வீரம், திருமணத்தால் எற்படும் இழப்பு, பணி நீக்கம், பகைவரை சிறை வைத்த இடம், படுக்கையின்மை, மனப்போராட்டம், பெரும் கவலை, தீங்கு, பெற்றோர் மற்றும் உடன்பிறப்பினரின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு தீங்கு விளைதல், வாக்குவாதம், சினம், உடல்காயம், இறப்பு, இடமாற்றம், பலவகைச் செலவுகள், மனைவியின் இறப்பு போன்றவை போன்றவற்றை பனிரண்டாம் பாவகம் மூலம் அறியலாம். [95]

நட்டம், தடை அடக்குதலும், கட்டுப்படுத்துதலும், கூடுதல் செலவு, கிரயத்துக்கு வாங்குதல், முதலீடு செய்தல், நன்கொடைகள், தருமம், கூட்டு குடும்பத்திலிருந்து பிரிதலும், தூர இடத்திற்கு போய்விடுதலும், பிரித்து

---

[93] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 56

[94] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 158

[95] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 7

வைத்தலும், பீடையும், தீய அதிா்ட்டம், சிறையிலிருந்தல், இரகசிய உழைப்பு, இரகசிய நடவடிக்கை, பயம், மௌனமாக துன்பப்படுதல், ஆழ்ந்த தூக்கம் அல்லது தூங்காமை, (மூன்றாம் பாவகம் ஒருவா் தூக்கத்திலிருந்து விழிப்பதைக் காட்டுகின்றது, ஆறாம் பாவகம் சமாதியைக் குறிக்கின்றது, ஒன்பதாம் பாவகம் கனவைக் குறிக்கின்றது) கால்கள். இடதுகண், பகைவரிடமிருந்து பயம், உடல் உறுப்பை வெட்டுதல், உடம்பில் காயம், சுயஅழிவும், காணமுடியாததும், எதிர்பாராத துன்பங்கள் போன்றவைற்றைப் பன்னிரண்டாம் பாவம் மூலம் அறியலாம்.

கீழ்படியாமை, இரசிய சூழ்ச்சிகளும். திட்டங்களும், பொறாமையும், குரோதமும், இடைநிலை, தற்கொலை அல்லது வஞ்சித்துக் கொல்லுதல், ஊரைவிட்டு துரத்துதல், தூரதேசத்தில் வாழ்க்கை, வீணாக்குதலும், இராஜதுரோகம், பரோபகாரத்துக்குரிய சங்கங்களுடன் கூட்டு, பிற நாட்டுக் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுத்தல், கீழ்த்தரத்தாருடன் கலப்பு, அந்தரங்கம், ஒருவருடைய இரண்டாவது தொழில், மருத்துவ ஆய்வு, துப்பறியும் வேலை, குரூரத் திட்டம், இரகசிய விவகாரங்கள், அறிவியல் முறைகளைக் கண்டுபிடித்தல், விலங்குகளால் ஆபத்து, இழிவு, தீயவா், திரும்பி வருதல், மறைக்கப்பட்ட வீடு, வேலை நியமனம், படுக்கை வசதி, எதிர்பாராத கோரிக்கைகள், பணநெருக்கடி, மிதமிஞ்சிய செலவுகள், சூறையாடல், கொள்ளையடித்தல், கற்பழித்தல், விசமிடல், கள்ளக்கடத்தல், அச்சுறுத்திக் களவாடல், ஏமாற்றுச் செய்கை, தேசக்கலகம், இராஜத் துரோகம் போன்றவைற்றைப் பன்னிரண்டாம் பாவகம்மூலம் அறியலாம். [96]

தூக்கம் கெடுதல், துன்பங்களிலிருந்து விடுதலை, யானைகள், குதிரைகள், கட்டுப்பாடற்ற பாலுறவு வாழ்க்கை, திருமணத்தடை, படுக்கை அளித்தல், அதிகார இழப்பு, துர்ப்பாக்கியமான நிலை, சண்டை சச்சரவு, உடல்வியாதி, மனைவி அல்லது கணவனின் மரணம் போன்றவை பனிரண்டாம் பாவம் மூலம் அறியப்படும். [97]

---

[96] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி -. ப. 57

[97] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 159

2.3. கோள்களின் தொழில்களுக்கான விளக்கம்

பனியன் ஏற்றுமதித் தொழிலுக்குக் காரகக் கோள்களாக சுக்கிரன், சந்திரன், இராகு, கேது ஆகியவை அறியப்பட்டுள்ளது. ஆகவே இக் கோள்களின் தொழில்கள் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அவற்றில் பனியன் ஏற்றுமதித் தொழிலுக்கான தொழில் அமைப்புகளும் காணப்படுகின்றன.

2.3.1. சுக்கிரனின் தொழில்கள்

பாடகர், நடனக்கலைஞர், இசையமைப்பாளர், கலைஞர், நடிகர், விபச்சாரிகள், மற்றவரை மகிழ்விக்கும் கலைஞர், கைவினைஞர், விற்பனை பிரதிநிதிகள், நீர் சூழ்ந்த இடங்கள், அமைதி எற்படுத்தும் இராஜதந்திர நிபுணர் போன்றவை சுக்கிரனின் தொழில்கள். [98]

பாடகர்கள், செல்வந்தர்கள், புலனின்ப நாட்டம் உடையவர்கள், வணிகர், ஆடல் கலைஞர்கள், நெசவு வேலை புரிபவர்கள், விலைமகளிர் போன்றவையும், [99]

கவிஞராதல், புகழ் பெற்ற பாடகராதல் அல்லது நடனத்தில் புகழ் பெறல், சினிமா படம் எடுத்தல், துணிக்கடை, நகைக்கடை, பூக்கடை, வளையல்கடை, வாசைன திரவிய வியாபாரம், இரவிக்கைக் கடை, வெல்ல வியாபாரம், பொது வணிகம், மூக்குக் கண்ணாடிக் கடை, அழகுசாதன நிலையம், பேருந்து, பொருள் போக்குவரத்து வாகனம் நடத்துதல் முதலான தொழில்கள் போன்றவையும் சுக்கிரனுக்குரியவை. [100]

அழகுத்துறைகள், ஆடம்பரத்துறைகள், பொழுது போக்குத்துறைகள், வாகனத்துறைகள், வெளிநாட்டுத் தொடர்புகள், மிகைப்படுத்தப்படக்கூடிய பொருட்கள், பெண்கள் தொடர்பான அனைத்துத் துறைகள், பல்பொருள் அங்காடிகள் ஆகிய இவற்றின் உட்பிரிவுகளாக உள்ள பல்வேறு துறைகளின் தொழில்களுக்கும் சுக்கிரன் காரகமாக அமைவார். [101]

---

[98] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 117

[99] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 71

[100] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 21

[101] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 4

உட்புறம் அழகுபடுத்துதல், அழகு நிலையம், அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை, மதுபானம் மற்றும் குளிர்பானங்கள் தயாரிப்பு, விற்பனை, பேக்கரி கடை, இனிப்பு பண்டங்கள், கணிப்பொறி முதலியனவும், [102]

நாட்டியம், பாட்டு, நடிப்பு. வண்ணம் தீட்டுதல், சித்திர வேலைப்பாடு, ஆடம்பரப் பொருள் தயாரிப்பு, விற்பனை, உயர்ரக துணிவகைகள் தயாரிப்பு, நவரத்தினம், நகை வியாபாரம், சினிமா தயாரிப்பு மற்றும் விநியோகம், பழம், புஷ்பங்கள், வெற்றிலை பாக்குக்கடை, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி போன்ற அனைத்தும். சுக்கிரனின் தொழில்களாகும். [103]

2.3.2. சந்திரனின் தொழில்கள்

நீர், நீர் தொடர்பான தொழில்கள் [104]

விவசாயி, நீர்வாழ் உயிரினங்களால் வாழ்க்கை நடத்துபவர். [105]

டீக்கடை, ஓட்டல்கடை, சர்பத்கடை, மதுக்கடை, சலவைத்தொழில், கறவைமாடுகள், பால், தயிர், மோர், வெண்ணெய் வியாபாரம், முத்து வியாபாரம், மீன் வியாபாரம், உப்பு வியாபாரம், கடற்படையில் சேருதல், கடற்பயணம், மாலுமியாதல், படகோட்டுதல், எழுத்தாளர், கவிஞர், பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகப் பணி செய்தல், வெள்ளி வியாபாரம், ஈயம் பூசுதல், அரிசி வியாபாரம், எழுத்தாளர், கவிஞர் போன்றவை சந்திரனின் தொழில்களாகும். [106]

வேளாண்மை, வெள்ளி, பஞ்சு, நூல், உணவு, துணி. மீன்பிடித்தல், குளிர்பானம், வெற்றிலை பாக்கு, படகு, கப்பல், பால், மதுவகை, பெட்ரோல், நீர் தொடர்பான தொழில்கள், கதை, கவிதைத்

---

[102] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 4

[103] மேலது.

[104] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 112

[105] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 67

[106] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 17

துறைகள் ஆகியவற்றின் தொடர்பான பல்வேறு துறைத் தொழில்களும் சந்திரனிற்குரியது. [107]

கடல் தொடர்பான தொழில், மருந்து, உணவுவிடுதி, நிர்வாகம், தங்கும் விடுதி, உணவுப் பொருட்கள், காய்கறி, பழங்கள், சாப்பிடும் பொருட்கள், நீர்ப்பொருள், மூலிகைவகை, சந்தனம் போன்ற வாசனைப் பொருட்கள், நவரத்தினங்களில் முத்து, பட்டுத்துணி, வெண்ணிறப் பொருட்கள், சங்கு, பால், தயிர், தண்ணீரில் இருக்கும் மீன், ஈரல், போன்றவற்றில் வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி போன்றவை. வீடு கட்டுதல், தானிய வியாபாரம், துணி, உணவு வியாபாரம், வட்டித் தொழில், நெய், தேன் வியாபாரம், சங்கு முத்து வியாபாரம், நர்ஸ், மருத்துவச்சி, மீனவர், படகோட்டி, ஆயில் மருந்து, பெட்ரோல், காட்டுப் பொருள் வியாபாரம், பரிகாரம் மற்றும் சாந்தி செய்தல் போன்றவை சந்திரனின் தொழில்களாகும். [108]

2.3.3. இராகுவின் தொழில்கள்

பிரசங்கம் செய்பவர், புதிதாகக் கண்டுபிடிப்பவர், மனோதத்துவ நிபுணர், சோதிடர், திருடன், விதவை, வழக்குகள், பொற்கொல்லர், விமான ஓட்டிகள், சிற்பிகள் போன்றவை இராகுவின் தொழில்கள். [109]

அந்நியநாட்டுத் தொடர்புள்ள தொழில்கள், அந்நிய நாட்டில் வேலை, மருத்துவம், ஊக வணிகம், சீட்டு, குதிரைப் பந்தயம், பங்கு வர்த்தகம், தரகு, ஒப்பந்த நிறுவனம், தரகு, கடத்தல் மற்றும் மறைமுகமான தொழில் அனைத்தும். சினிமாத் தொழில், பாம்புத் தோல் வியாபாரம் மற்றும் மாந்திரீகம் போன்றவையும், [110]

காடு வனம் சுற்றுதல், மந்திரம் ஜெபித்தல், கண்ணாடி, வானொலி, போட்டோபடம், பஞ்சு, விசக்கடி, நஞ்சுக்கு மருத்துவம், பரதேச வாசம், மறைவிட வாசம், சிறைவாசம், கைவிலங்கு போடுதல், ஈனத்தொழில், தந்தி,

---

[107] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 2

[108] மேலது.

[109] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 121

[110] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 5

தொலைபேசித்துறை, மருத்துவத் தொழில், பின்னல்வேலை போன்றவையும் இராகுவின் தொழில்கள். [111]

2.3.4. கேதுவின் தொழில்கள்

மருத்துவர், வேடர், சோதிடம், சந்நியாச வாழ்க்கைநெறி, கலை ஆர்வம், இலக்கிய மேன்மை, மறைந்து காரியம் செய்தல், மத நிகழ்ச்சிகள், வசியம் செய்தல், இரகசியமான சதி ஆலோசனைகள் செய்தல், விசச்சூழலான நடவடிக்கைகள் முதலியன கேதுவின் தொழில்கள். [112]

ஞானியாதல், சாமியாராதல், யோகியாதல், சித்தராதல், சிறைகளில் வேலை பார்த்தல், இழிவான தொழில், சிகப்பு நிறப் பொருட்கள் வியாபாரம் முதலியவை. ஆன்மீகத் துறைகள். தத்துவத்துறைகள், மருத்துவத் துறைகள், ஆன்மீக அறக்கட்டளைகள், இயற்கையினால் ஏற்படும் பெரும் விபத்துகளில் உதவும் மறுவாழ்வுத்துறைகள், வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில்கள் ஆகியவற்றின் உட்பிரிவுத்துறைகளின் தொழில்களுக்குக் காரகன் கேது. [113]

மருத்துவம், சோதிடம், வேத சாத்திரம், ஆன்மீகம், புரோகிதம், அறக்கட்டளை, நிர்வாகம், அயல்நாட்டுத் தொடர்பு உடைய தொழில் முதலியன. மந்திரம் ஜெபித்தல், தெய்வ உபாசனை, விரக்தி, வைராக்கியம், ஞானம், கபடம், மயக்கம் தரும் பொருட்கள், வெளிதேச வாழ்க்கை, நாடுவிட்டு நாடு ஓடி வாழும் நிலை முதலான தொழில்களுக்கு கேது காரகன். [114]

2.4. பாவகச் செயல்பாடுகள் பற்றிய விளக்கம்

தொழிலுக்கான காரக பாவமான கர்ம பாவமும், அதனை இயக்கக்கூடிய பாவமான இலக்கின பாவமும், ஏற்றுமதித் தொழிலுக்கான காரக பாவமான பதினோராம் பாவமும் காரக பாவங்களாகத்

---

[111] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 5

[112] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 122

[113] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 5

[114] மேலது.

தரப்பட்டுள்ளன. அப் பாவகச் செயல்பாடுகளும், அப் பாவங்களில் காரகக் கோள்களான சுக்கிரன், சந்திரன் இராகு, கேது ஆகியவை நிற்பதால் ஏற்படும் பலன்களும் தரப்பட்டுள்ளன.

2.4.1. இலக்கின பாவகச் செயல்பாடுகள்

உடலமைப்பு. உறுப்புகள். சந்தோசம். வருத்தம். முதுமை. உண்மையறிதல். அறிவு. பிறந்த இடம். பிரபலம். புகழ். கண்ணியம். கனவுகள். பலம். பெருந்தன்மை. அரசியல் வாழ்க்கை. ஆயுள். சாந்தம். வயது. தலைமுடி. தோற்றம். சுயமரியாதை. சீவனம். அடுத்தவருக்காகச் சூதாடுதல். நிந்தை. இழுக்கு. கௌரவிக்கப்படுதல். தோல். தூக்கம். பாண்டித்தியம். செல்வம். அவமதிப்பு. பழிவாங்கும் போக்கு. வியாதியிலிருந்து விடுதலை. கைவிடும் தன்மை. செயலாற்றும் திறமை. கால்நடைகளைக் காப்பாற்றும் முயற்சி ஆகியவையும், [115]

இயல்பான உயரம். நிறம். அமைப்பு. வடிவம். உடல் ஆரோக்கியம். கற்பனைத்திறன். வீரம். ஒழுக்கம். குணம். ஆண்மை. கௌரவம். நன்மை. தீமைகள். ஆயுள். **கல்வி**. நெடுந்தூரப் பயணம். சூதாட்டம். தலையும் முகத்தில் மேல் பாகமும். எடுத்த செயலில் வெற்றி - தோல்வி. வாழ்க்கையில் போராட்டம். நாட்டு மக்களைக் கேள்வி கேட்கும் குணம் ஆகியவையும் இலக்கின பாவகச் செயல்பாடுகள். [116]

2.4.2. பத்தாம் பாவகச் செயல்பாடுகள்

வியாபாரம். வாணிபம். இராஜசன்மானம். அரசாங்க உத்தியோகம். சேவை. குதிரைச்சவாரி. குத்துச்சண்டை. விவசாயம். வைத்தியம். கீர்த்தி புகழ். செல்வம் சேமிப்பு. மறைத்து வைக்கப்பட்ட புதையல். தியாகம். உயர்ந்த அந்தஸ்து. குரு. **ஆசிரியர்கள்.** புண்ணியத்தின் அளவு. மருந்து. மந்திர சித்தி. சுயமரியாதை. கௌரவித்தல். புகழ், போதனை செய்யும் திறமை. அதிகாரப் பதவி. செல்வாக்கு. சுயக்கட்டுப்பாடு. அதிகார தோரணை ஆகியவையும், [117]

---

[115] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 151

[116] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 52

[117] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 157

செல்வந்தன். மரியாதை. பெருந்தன்மை. பொதுமதிப்பு. பெயர். புகழ். அதிகாரம். கௌரவம். நம்பிக்கை. ஒழுக்கம். சித்தி. மதிப்பு. குலம். கீர்த்தி. மரியாதை. மதிப்பு. படிப்பு. பேராசை. அதிகாரம். இல்லற நடவடிக்கை. முதலாளி. நீதிபதி. அரசாங்கம். புண்ணிய இடங்களுக்கு யாத்திரை. உலகத்திலிருந்து விடுபடல். அரசிடமிருந்து கௌரவம். வேளாண்மை. மருத்துவர். முதல்தொழில். மந்திரக் கவசம். மருந்து. கல்வி பயிலுதல். தேசத்தலைவர். மழை. கொடை அபிவிருத்தி. புதையல் அடைதல். நூல்நெறி ஆகியவையும் பத்தாம் பாவகச் செயல்பாடுகளாகும். [118]

2.4.3. பதினோராம் பாவகச் செயல்பாடுகள்

பல வழிகளில் கிடைக்கும் இலாபம், கெட்டஆசைகள், சகலவிதமான வருமானம், அடுத்தவர்களுக்காகப் பணி செய்தல், தெய்வீக ஆராதனை, சாத்வீகத் தெய்வ வழிபாடு, கல்வி, பொன் பொருள் சேர்க்கும் திறமை, மூதாதையர் சொத்து, சிறப்பான நிலை, ஆபரணங்கள் மற்றும் நவரத்தினங்கள் மீதான ஆர்வம், செல்வம், செல்வ இழப்பு, பெண்களுக்காகவும், கலைகளுக்காவும் தங்கநகைகள் செய்து கொடுத்தல், பாண்டித்தியம், மந்திரிப்பதவி, இலாபம், அதிர்ட்டம், விரும்பிய குறிக்கோளை அடைதல், எளிதான முறையில் வரும் வரவுகள், அழகிய ஓவியம், கலைகளில் திறமை ஆகியவையே பதினொன்றாம் பாவத்திற்குரிய செயல்பாடுகளாகும். [119]

தோழர்கள் வீடு, சபை, சமுதாயம், பிரியப்பட்டவை, பார்வையாளர்கள், ஆலோசகர்கள், ஆதரவாளர்கள், நன்மை விரும்பிகள், நம்பிக்கை, ஆசைகளும், மன ஊக்கமும், எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றி மகிழ்ச்சி, அபிவிருத்தி, இலாபம், எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம், நட்பின் இணைப்பு நிரந்தரமடைதலும், புனர் நிர்மாணிப்பு, நோய் குணமடைதல், சுகம், நம்பிக்கை, உறுதிப்பாடு, இடதுகாது,

---

[118] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 56

[119] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 158

வலதுபாதம், இடதுகையும், இருகால்களும், முன்னேற்றமும் பதினோராம் பாவச் செயல்பாடுகளாகும். [120]

செல்வமும், ஒருவரின் செல்வாக்கும், அதிா்ட்டமும், பிரதிநிதித் தோ்வு, வழக்கு, சமுதாயம், வாணிபம், எழுத்துக்கள், ஆதாயம், சம்பத்துவரவு, முதலும் வட்டியும், எளிதில் இலாபமடைதல், மகிழ்ச்சியான செய்தி, அதிா்ட்டத்தின் விளைவு, பாராளுமன்றம் அல்லது சட்டமன்ற சபைக்குக் கிளைகள், மக்கள்சபை, தேச சபையின் கீழ்பிரிவு, மாநகராட்சி, மாநகரசபை அங்கங்கள், மாவட்ட சபைகள், பஞ்சாயத்துகள், அரசாங்க கொள்கைகளும், திட்டமிடலும், நாடுகளின் நட்புறவும், நன்மை, பரிமாற்றம், கம்பெனிகள், களஞ்சியங்கள், சங்கங்கள், சபைகள், வெற்றி பெறும் எண், மருத்துவமனையிலிருந்து விடுபடல் போன்றவை பதினோராம் பாவச் செயல்பாடுகளாகும். [121]

2.5.1. இலக்கின பாவகத்தில் சுக்கிரன் நின்ற பலன்கள்

நீண்டஆயுள், கணிதப் புலமை, நல்லநகைகள், மனைவியால் நேசிக்கப்படுதல், நல்லஆடைகள், அழகு, பெண்களால் விரும்பப்படுதல், கல்வித்திறன், செல்வம் ஆகியன உண்டு. சுபா் சோ்க்கை பெற்றால் தங்கம் போல் ஒளிவீசும் மேனி படைத்தவராக இருப்பாா். ஏராளமான நகைகள் இருக்கும். சுக்கிரன் இலக்கினத்தில் நிற்க, சுபா் நான்கில் அமர, சாதகா் யானைகட்டிச் சீரும் சிறப்புமாக வாழ்வாா். சொந்தவீடாக இலக்கினம் அமைய, மகாராஜ யோகத்தால் பெரும்புகழ், பெயா், செல்வம் ஆகியவையும் இலக்கினத்தில் சுக்கிரன் நிற்க சாதகா் பெறுவாா். [122]

6, 8, 12ஆம் வீடுகளுக்கு அதிபராகிச் சுக்கிரன் இலக்கினத்தில் இருந்தாலும் அல்லது வலுக்குறைந்தாலும் சாதகருக்கு இரு மனைவிகள் அமைவா். அதிா்ட்டம் வந்து வந்து போகும். சுக்கிரன் இலக்கினத்தில் அமா்ந்து ஆட்சி, உச்சம் பெற்றால் மாளவியா யோகம் எனும் பஞ்சமகா

---

[120] டி. விமலன் - நவீன கால சோதிட வளா்ச்சி - ப. 56

[121] டி. விமலன் - நவீன கால சோதிட வளா்ச்சி - ப. 56

[122] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 226

புருச யோகம் அமையும். இதன்மூலம் கவரும் தோற்றம், நல்ல புலன் உணர்வு பெறுவார். மேலும் கற்றவர், கீர்த்தி, புகழ் உள்ளவர் ஆகவும், [123]

அழகு, புத்திசாலித்தனம், வீடு, நிலம், நகைகள். ஆடைகள், மன்னிக்கும் குணம், நன்னடத்தை, சமூகத்தில் தலைமை, ஆதரவாளரிடமிருந்து பரிசுகள், சகோதரர் மூலம் மகிழ்ச்சி, தாயைக் கவனித்துக் கொள்பவராகவும், [124]

அழகான ஆரோக்கியமான உடல், நீண்ட ஆயுள் இன்பம் உடையவராகவும், [125]

கணிதம் அறிந்தவர், தீர்க்காயுள், மனைவியிடம் பற்று, ஆடை அணிவதில் நாட்டம், உடல் அமைப்பு கவனமுடையவர், நற்குணவான், பெண்களிடத்தில் அன்புடமை, செல்வந்தர், கற்றவராகவும், [126]

இலக்கினத்தில் சுக்கிரனிருந்தாலும் ஆயுள்விருத்தி உண்டு. அழகான கண்கள் இருக்கும். மனைவி, மக்களிடத்தில் பிரீதி உண்டாகும். பெரிய பதவி ஆகியவை இலக்கினத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்களாகும் ஆகியவை இலக்கினத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்களாகும். [127]

2.5.2. இலக்கின பாவகத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

பிருகு மகரிசியின் சூத்திரப்படி சாதகர் அழகான தோற்றமும், நிலையற்ற மனமும் கொண்டவர். உடல் நோய்களால் அவதிப்படுபவர். நீர் சூழ்ந்த இடங்களில் மகிழ்வடைபவர். தனது 15ஆம் வயதில் பலதரப்பட்ட பயணங்களை மேற்கொள்பவர். மேடம், இடபம் அல்லது கடகம் இராசிகளில் சந்திரன் இருந்தால் சாத்திர அறிவு, செல்வநிலை, மகிழ்ச்சி, இனிமையான பேச்சு, நல்ல உடலமைப்பு இருக்கும். ஆனால் அதிக புத்திசாலி இல்லை. சுபர் பார்த்தால் சுபபலன்கள் ஏற்படும். இலக்கினாதிபதி

---

[123] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 226

[124] மேலது ப. 142

[125] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 107

[126] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 45

[127] ஶ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 211

பலவீனமானால் ஆரோக்கியக்குறைவு ஏற்படும். நற்கோள் பார்த்தால் சுப பலன் ஆகவும், [128]

சந்திரனின் ஆளுமையில் பல விஷயங்கள் உள்ளன. மனம், தாய், வீடு, வேலை (தொழில்) மாற்றம், கா்ப்பம் அடைதல், பிரசவம், வாலிப வயதுக்கு முந்தைய காலம், அடிக்கடி மாறும் மனோபாவம், வயிறு. அழகு, மார்பகங்கள், பால், முத்து போன்றவை. சந்திரன் அழகைக் குறிப்பதால் இலக்கினத்தில் சந்திரனிருப்பவா் அழகாக இருப்பாா். சந்திரன் தேய்ந்து வளரும் தன்மையுடையது. அதனால்தான் மனம் நிலையில்லாத் தன்மை கொண்டதாக விளங்குவதும்,

சந்திரன் நீர்கோள் என்பதால் நீர்நிலை அருகில் வாழப் பிரியப்படுவாா். சந்திரன் மேடத்திலிருந்தால் நான்காம் அதிபதியாகிறாா். இடபத்திலிருந்தால் மூன்றாமதிபா் இலக்கினத்தில் இருப்பவராகிறாா். கடகம் சொந்த இலக்கினம். எனவே இந்த மூன்று இடங்களும் சாதகரைச் செல்வந்தராக, மகிழ்ச்சி அடைபவராக, அரசனாக, இனிமையான பேச்சு உடையவராக, உறுதியான உடல் உள்ளவராகவும், ஆனால் அதேசமயம் புத்திசாலித்தனம் அற்றவராக உருவாதலும் சந்திரன் இலக்கின பாவத்தில் நிற்பதால் ஏற்படும் பலன்களாகும். [129]

அழகான தோற்றம், மகிழ்ச்சியானவா், நல்ல உடல்கட்டு, சாஸ்திரங்களில் தோ்ச்சி, அறிவாளி, புத்திசாலித்தனமாக உரையாடுபவா், செல்வந்தா். ஆரோக்கியம், வலிமையான உடல், பெரிதான தொப்புள், சிவந்தகைகள், வலிமை, செல்வம், தீர்க்காயுள் உடையவா், அரசால் பெருமை கிடைக்கும், ஊா்சுற்ற விருப்பமுள்ளவராக இருப்பதும், [130]

வளா்பிறைச் சந்திரன் இலக்கினத்தில் இருக்கும் சாதகா் நீண்டஆயுள், நல்ல உடல்நலம், ஸ்ரீலட்சுமி கடாட்சம், அச்சமின்மை, செல்வம், அதிகாரம் ஆற்றல் உடையவராக இருப்பதும், [131]

---

[128] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 196

[129] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 196

[130] மேலது ப. 133

[131] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 100

அழகான உடல் அமைப்பு, முகப்பொலிவு, சபல புத்தியுடைமை, அனைவரும் மயங்கும் தன்மை, கற்பனைத்திறன், சாத்திரம் அறிதல், செல்வந்தர், பகுத்தறிவு, அன்புடைமை, பொதுவாழ்வு, புலமை ஏற்படும், நற்கோளால் பார்க்கப்பட்டால் அறிவாளி, ஆரோக்கியமானவர், பேச்சு ஆற்றல், இலக்கினாதிபதி வலுவற்றிருந்தால் நோயுடையவர், தேய்பிறைச் சந்திரன் ஆனால் செவிட்டுத்தன்மை, உடல் ஊனம் போன்றவை ஏற்படும். தீய கோள்களுடன் இணைந்தால் பாலாரிட்டம், பலமற்ற தன்மை ஏற்படுதலும், [132]

நல்ல சுகம், பக்தி, ஞானம், ஆச்சாரம் முதலிய நற்பலன்கள் வளர்பிறைச் சந்திரனால் உண்டு. தேய்பிறைச் சந்திரனால் அவ்வளவாக நற்பலன்கள் இல்லாத நிலைமை ஆகியவையும் இலக்கினத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்களாகும். [133]

2.5.3. இலக்கின பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

மனைவிக்கு குறைப்பிரசவம் ஏற்படும். மேடம். இடம் அல்லது கடகம் இலக்கினமாகி, அங்கு இராகு இருக்க, சாதகர் இளகிய மனம் உள்ளவர். வசதிகளை விரும்பி அனுபவிப்பவர் - பிருகு மகரிசி வாக்கியப்படியும்,

அற்ப ஆயுள், செல்வம், அதிகாரம் உண்டு, உடலின் மேற்பாகத்தில் நோய் உண்டு – பலதீபிகையின்படியும்,

எதிரிகளை அழிப்பவர். மற்றவர் கட்டுப்பாட்டில் இருப்பார். பல மனைவிகள் உண்டு. பற்றற்று இருப்பார் - சமத்கார சிந்தாமணியின்படியும் இலக்கினத்தில் இராகு நிற்பதால் ஏற்படும் பலன்களாகும். [134]

நீண்டஆயுள், வலிமை, ஸ்ரீலஷ்மியின் அருளால் செல்வம், உடலின் மேற்பகுதி அங்கங்கள் ஆகிய தலை, முகம் போன்ற இடங்களில் நோய் உள்ளவராக இருப்பதும், [135]

---

[132] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 31

[133] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 211

[134] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 239

[135] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 111

மக்கட்பேறில் தீங்கு விளைதல், தீய இராசிகளினால் துன்பமும், நற்கோள் இராசியினால் நன்மையும் ஏற்படும். சிலர் பிடிவாதக்காரராகவும், குருடராகவும், தர்ம சிந்தனையில்லாதவராகவும், ஒழுக்கமில்லாதவராகவும், நோயுடனும் இருப்பர். நற்கோள் இணைவு, பார்வை பெற்றால் அரச இன்பத்தையும், செல்வத்தையும் உடையவராக இருப்பதும், [136]

இலக்கினத்தில் இராகு இருந்தால் சாத்திரங்களில் நம்பிக்கை இராது. அனாசாரகனாகவும், குழந்தைச் செல்வம் அதிகம் இராதவனாகவும் இருப்பான். தேக பலம் உள்ளவராக இருப்பதும் இலக்கின பாவத்தில் இராகு நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [137]

2.5.4. இலக்கின பாவகத்தில் கேது நின்ற பலன்கள்

நன்றி மறப்பவர், மகிழ்ச்சி இல்லாதவர், வஞ்சகர், தீயவர் சேர்க்கை உள்ளவர், உடலில் ஊனம் உள்ளவர், இவருக்குப் பதவி கிடைக்காது. குடும்பத்தாரைத் தொல்லை செய்பவர், சுவாசக் கோளாறு ஏற்படுவதும், [138]

திறமையான பேச்சு, நல்லகல்வி. [139]

நன்றி மறப்பவர், இன்பம் இல்லாதவர், புறம் கூறுபவர், தனது இருக்கும் நிலையிலிருந்து கீழே தள்ளப்படுபவர், உடலில் ஊனமும், வஞ்சகர் நட்பும் உடையதும், [140]

கர்ப்பத்தில் இறந்த குழந்தையைப் பெற்றெடுப்பவர், கேது மேடம், இடபம், கடகமானால் பல பெண்களைக் கூடுவர். கேது தீய கோளின் வீட்டிலிருந்து நற்கோளால் பார்க்கப்பட்டால் முகத்தில் மச்சம் அல்லது தழும்புடன் கூடிய அடையாளம் ஏற்படும். சிலர் அரசரைப்போல் இன்பத்தையும், நோயாளியாகவும், கருமியாகவும் இருப்பதும், [141]

---

[136] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 52

[137] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 211

[138] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 239

[139] மேலது ப. 135

[140] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 114

[141] மேலது.

குழந்தைச் செல்வம் அதிகம் இராது. சாதகன் குணவானாகவும், பராக்ரமியாகவும் இருப்பதும் இலக்கினத்தில் கேது இருப்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [142]

2.6.1. பத்தாம் பாவகத்தில் சுக்கிரன் நின்ற பலன்கள்

சாதகர் கீர்த்தி உடையவர், குரு, சந்திரன் போன்ற சுபர் தொடர்பு பெற்றால் வாகன வசதி, சமயச்சடங்குகள் செய்தல், உலகளாவிய புகழ், செல்வம், பாராட்டுக்கள், கௌரவம், அதிர்ஷ்டம் யாவையும் உண்டு. சாதகர் பேசிக் கொண்டே இருக்கும் குணமும், [143]

பத்தில் கேந்திரம் பெற்று ஆட்சி, உச்சம் பெற்றால் சுக்கிரன் தருவது அற்புதமான மாளவியா யோகம். சுபச் சுக்கிரன் பத்தில் இருப்பது அமலாயோகம். இதன்மூலம் சாதகரின் பெருமையும், புகழும் காலம் கடந்து நிற்கும். குறை சொல்லமுடியாத குணவான், சந்தோசமான வாழ்வு வாழ்பவராகவும், [144]

பெருந்தன்மை, அழகு, செல்வம், மதிநுட்பம், நற்குணங்கள், நண்பரால் மகிழ்ச்சி, மரியாதைக்குரியவர், உயர்ந்த பதவி, அந்தஸ்து பெறுபவர், புகழ் உடையவர், மதச்சடங்குகளில் ஈடுபாடு கொண்டவர், வீடு கட்டுதல், அழகு சாதனப் பொருட்கள், வாசனைப் பொருட்கள் விற்பதில் ஈடுபாடு உடையவர், பெண்களால் இலாபம் அடைபவராகவும், [145]

நல்லபுகழ், நல்ல நண்பர்கள் பெற்று மேன்மையாக வாழ்பவர். [146]

பிரபலம், நினைத்த செயல் கைகூடுதல், நற்செயல், நல்லதொழில், பல வாகனங்கள் எற்படும். சுக்கிரன் கெட்டால் தொழிலில் திறமை இல்லை. சுக்கிரனுடன் சந்திரன், புதன், குரு இணைந்தால் பல வாகனங்கள் எற்படும். பல செயல்கள் வெற்றியடையும். புகழும், கீர்த்தியும் ஏற்படும். பல அரசயோக அமைப்பு ஏற்படும். பேசுவதில் திறமை,

---

[142] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 211

[143] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 230

[144] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 231

[145] மேலது ப. 156

[146] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 108

பாக்கியங்கள் நிறைந்தவர். சிலர் வேளாண்மைத் தொழிலில் வெற்றியடைபவராகவும், [147]

நல்லகீர்த்தி, சுபகரமான செய்கைகள், உத்தியோகம், பகுபுத்திரயோகம் உள்ளவராகவும் பத்தாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [148]

2.6.2. பத்தாம் பாவகத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

பிருகு மகரிஷி சூத்திரப்படி கல்வியில் மிகப்பெரும் சாதனை செய்வார். கடவுள் பக்தி, இரக்கமனம் உள்ளவர். நற்குணங்கள் வாய்ந்தவர். அசுபர் தொடர்பு பெற்றால் கள்ளத் தொடர்பு ஏற்பட்டு பலராலும் வெறுக்கப்படுபவர். பாபி, தடைகள் நிறைந்த வாழ்க்கை உடையவராகவும், [149]

பத்தாம்வீடு கர்மம், தொழில், மரியாதையைக் குறிக்கும் ஸ்தானம் ஆகும். சுபச்சந்திரன் ஏற்றம் தருவார். பத்தாம் வீட்டுச் சந்திரன் 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் கல்வியில் மேன்மை உண்டாகிறது. துலாஇலக்கினத்துக்குப் பத்தாம் அதிபதி, பத்தில் இருந்தால் இராசயோகம் பெறுபவராகவும், [150]

பிரமாதமான கல்வித் தேர்ச்சி, ஞானம், பக்திமான், புகழ், இளகிய மனம், நற்குணங்கள், வலிமை, காரியவெற்றி, தர்மசிந்தனை, செல்வம், அரசால் வருமானம், செல்வம் உடையவராகவும், [151]

நற்செயல்கள் செய்பவர். நல்லவர்க்கு துணையானவராகவும், [152]

வித்தையறிந்தவன், கற்றறிந்த பண்டிதன், நற்செயல்களின் நாட்டம், பிறருக்கு நன்மை செய்தல், பத்தாம் அதிபதி வலுப்பெற்றால் அனைத்துச் செயல்களிலும் வெற்றியுண்டு. தீயோருடன் சந்திரன்

---

[147] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 48

[148] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

[149] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 201

[150] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 201

[151] மேலது ப. 155

[152] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 101

இணைந்தால் தீய செயல்களைச் செய்பவர். பயண வணிகம், விடுதித் தொழில், அரசியல் புகழ், உணவுத் தொழில், பத்திரிக்கைத் தொழில் போன்றவை ஏற்படும். சிலர் பெருஞ்செல்வமுடையவர், பெண்களிடத்தில் விளையாடக் கூடியவராகவும், [153]

நல்லெண்ணமுள்ள ஆசான் ஆகவும் பத்தாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [154]

2.6.3. பத்தாம் பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

சேரிகளில் உள்ள விதவைகளிடம் தொடர்பு கொள்வார். பயம் இல்லாதவர். புகழ் உடையவராகவும், [155]

புகழ் உடையவர், அச்சம் இல்லாதவர், குழந்தைகள் அதிகமாக இராகு. தீய செயல்களில் ஈடுபடுபவர். நற்செயல் ஏதும் செய்யாதவராகவும், [156]

தீய இடங்களில் வசித்தல், விதவையைக் கூடுபவர், நற்கோளுடன் இணைந்தால் தோசமில்லை. கவிதைகளிலும், காவியத்திலும் விருப்பமுள்ளவர். பல்வேறு அமைப்புகளில் நாட்டம். சிலர் திருடராகவும், தீய நடவடிக்கை உடையவராகவும், [157]

அற்ப புத்திரன், புண்ணிய தீர்த்த ஸ்நானம், பெரியோர்களிடம் பணிவு உடையவராகவும் பத்தாம் பாவத்தில் இராகு நிற்பதால் எற்படும் பலன்கள் ஆகும். [158]

2.6.4. பத்தாம் பாவகத்தில் கேது நின்ற பலன்கள்

பாபி, ஆனால் தைரியம் உடையவர், புகழ் பெறுபவர். துரதிர்ஷ்டம், துன்பம் உண்டு. தந்தையால் பயன் இல்லை. மேடம், கன்னி, விருச்சிகத்தில் இருந்தால் நன்மை ஏற்படுபவராகவும், [159]

---

153 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 33

154 ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 215

155 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 242

156 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 112

157 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 54

158 ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

நற்செயல்களில் தடை உள்ளவர். தூய்மை இல்லாதவர். தீயசெயல் புரிபவர். தைரியம், புகழ், ஆற்றல் உடையவராகவும், [160]

குறைந்த மக்கட்செல்வம், கண்களில் நோய் ஏற்படும், தீயவர், சிலர் உடல் குறைவும், செல்வமும் உடையவர். ஒழுக்கமில்லாதவர். [161] விவேகி, இராசாங்க சேவை, தானதர்மம் செய்பவராகவும் பத்தாம் பாவத்தில் கேது நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [162]

2.7.1. பதினோராம் பாவகத்தில் சுக்கிரன் நின்ற பலன்கள்

இளகிய மனம், கல்வி அறிவு, செல்வம், நிலபுலன்கள், வாகன வசதிகள் உண்டு. சுபர் தொடர்பில் நல்ல வழிகளிலும், அசுபர் தொடர்பில் சந்தேகமான வழிகளிலும் செல்வம் சேருபவராகவும், [163]

பதினோராமிட சுக்கிரன் கன்னி இலக்கினத்திற்கு 2, 9க்குரியவர், மகரத்திற்கு 5, 10க்குரியவர், கும்பத்திற்கு 4, 9க்குரியவர், கடகத்திற்கு 4, 11க்குரியவர், இவை அற்புதப் பலன் தரும் யோகங்கள் ஆகும். இடபத்திற்கு 11இல் உச்சமடைவதால் மிக நல்ல யோகம் உடையவராகவும், [164]

செல்வந்தர், அனைத்து வசதிகளும் உடைய வாழ்க்கையும், பிற பெண்கள் உறவும் உடையவராகவும், [165]

பிரபலம், நினைத்த செயல் கைகூடும். நற்செயல், நல்லதொழில், பல வாகனங்கள் ஏற்படும். சுக்கிரனுடன், சந்திரன், புதன், குரு இணைந்தால் பல வாகனங்கள் ஏற்படும். பல செயல்கள் வெற்றியடையும். புகழும், கீர்த்தியும் ஏற்படும். பல அரசயோக அமைப்பு ஏற்படும். பேசுவதில்

---

[159] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 242

[160] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 115

[161] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 54

[162] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

[163] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 231

[164] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 231

[165] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 108

திறமை, பாக்கியங்கள் நிறைந்தவர், சிலர் வேளாண்மைத் தொழிலில் வெற்றியடைபவராகவும், [166]

தனவான், சுகம் ஆகியவை பெறுபவராகவும் பதினோராம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [167]

2.7.2. பதினோராம் பாவகத்தில் சந்திரன் நின்ற பலன்கள்

கற்றறிந்த அறிஞர், குழந்தைகள் உண்டு, மற்றவருக்கு உதவுபவர், புகழத்தக்க நல்லகுணங்கள் கொண்டவர். சுக்கிரன், சந்திரன் சேர்க்கை வாகன வசதி தரும். நல்லகல்வி, சொந்த நிலங்கள், அதிர்ஷ்டம் தரும், மற்றவரைப் போற்றி பாதுகாப்பர். எளிதில் பொருள் ஈட்டுபராகவும், [168]

பதினோராம் வீட்டு சுபச் சந்திரன் நன்மைகளைச் செய்கிறார். வாகன வசதி கொடுப்பவர். பதினோராமிடத்தில் உச்சமாகி அமர்வது கடக இலக்கினக்காரர்களுக்குச் சிறந்த அமைப்பு (தனயோகம்) பெறுபவராகவும், [169]

அழகானவர், கற்றவர். ஏராளமான செல்வம், நிலபுலன்கள் உண்டு. நல்ல மனம், வாகன சுகம் உண்டு. உண்மையை விரும்புபவர், நற்குணம் உடையவர், நல்வழிகளில் பொருள் ஈட்டுபவர், வளம், அபிவிருத்தி உடையவர், பெண்கள் நட்பை விரும்புபவர், வாழ்வின் அனைத்து வசதிகளையும் அடைபவர், புகழ் வாய்ந்தவர், நன்னடத்தை நிரம்பியவராகவும், [170]

செல்வந்தர், அனைத்து வசதிகளும் உடைய வாழ்க்கையும், பிற பெண்கள் உறவும் உடையவராகவும், [171]

---

[166] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 48

[167] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

[168] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 201

[169] மேலது.

[170] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 158

[171] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 108

கல்வி கற்றறிந்தவன், மக்கட்பேறுடைமை, கலைகள், வணிகம், வெளியூரில் புகழ், நீரினால் நன்மை, பதினோராம் பாவகாதிபதி பலமற்று இருந்தால் செல்வயிழப்பு ஏற்படும். சந்திரனும், பதினோருக்குடையவரும் வலுப் பெற்றால் பெருஞ்செல்வம். பலமக்களைக் காக்கும் தன்மை, பல்வேறு வித்தைகள் அறிந்தவர். இலாபங்கள் பல வழிகளில் ஏற்படுபவராகவும், [172]

நல்லமனது. தனம், புத்திரப் பிராப்தி உள்ளவராகவும் பதினோராம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [173]

2.7.3. பதினோராம் பாவகத்தில் இராகு நின்ற பலன்கள்

செல்வம், நீண்டஆயுள் உண்டு.குழந்தைகள் குறைவு, காது நோய்களால் தொல்லை உள்ளவராகவும், [174]

அதிக குழந்தைகள் இராது. நல்ல வளமான வாழ்க்கை உடையவர், நீண்ட ஆயுளும், காதில் நோயும் உள்ளவராகவும், [175]

மக்கட் செல்வம் மேன்மை பெறும். செல்வாக்கும் உண்டு. சிலர் செல்வந்தராகவும், பண்டிதராகவும் இருப்பர்.[176] பிதாவுக்கு அரிஷ்டம், தன புத்திர ப்ராப்தி உள்ளவராகவும் பதினோராம் பாவத்தில் இராகு நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [177]

2.7.4. பதினோராம் பாவகத்தில் கேது நின்ற பலன்கள்

பிருகு மகரிசியின் கூற்று – செல்வந்தர், குழந்தைச் செல்வம் உண்டு. பலதீபிகை – செல்வம், நீண்டஆயுள் உண்டு. குழந்தைகள் குறைவு. காது

---

[172] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 33

[173] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

[174] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 243

[175] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 112

[176] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 54

[177] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

நோய்களால் தொல்லை உண்டு. சமத்கார சிந்தாமணி – குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. ஹிந்து அல்லாதவரால் செல்வம் சேருபவராகவும், [178]

அதிக குழந்தைகள் இராது. நல்ல வளமான வாழ்க்கை உடையவர். நீண்ட ஆயுளும், காதில் நோயும் உள்ளவராகவும், [179]

மக்கட் செல்வம் மேன்மை பெறும். செல்வாக்கும் உண்டு. சிலர் செல்வந்தராகவும், பண்டிதராகவும் இருப்பர். [180] புண்ணியவான், தார்மீகன் ஆக இருப்பதும் பதினோராம் பாவத்தில் கேது நிற்பதால் ஏற்படும் பலன்கள் ஆகும். [181]

பல்வேறு பாவத்தில் கோள்கள் இருப்பதால் ஏற்படும் பலன்கள் பற்றிப் பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளவை :

2.8.1. பன்னிரு பாவங்களில் சுக்கிரன் இருப்பதால் ஏற்படும் பலன்கள்

சுக்கிரன் ஆண் சாதகத்தில் மனைவியையும், பெண் சாதகத்தில் கணவனையும் குறிக்கும். இடபம், துலாம் ஆட்சிவீடுகள். மீனம் உச்சவீடு. சனி, புதன், கேது நண்பர்களாகவும், சூரியன், சந்திரன், இராகு பகைவர்களாகவும் உள்ளனர். 1, 2, 3, 4, 5. 7. 9, 10, 11 ஆகிய வீடுகளில் நன்மையான பலன்களையும், 6, 8, 12 வீடுகளில் தீயபலன்களையும் அளிக்கக்கூடியது.

இலக்கின பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

நீண்ட ஆயுள், கணிதப் புலமை, நல்ல துணிமணிகள், நகைகள், நவீன ஆடைகள், பின்னலாடை, அழகு, பெண்களால் விரும்பப்படுதல், கல்வி, திறன், செல்வம் சேரும். தங்கம் போல் ஒளிவீசும் மேனி படைத்தவர். சுக்கிரன் இலக்கினத்தில் நிற்க சுபர். நான்கில் இருந்தால் யானை கட்டிச் சீரும் சிறப்புமாக வாழ்வார். சொந்தவீடாக இலக்கினம் இருந்தால் மகாராசயோகம் ஏற்பட்டு பெரும் புகழ், செல்வம், பெயர் ஏற்படும். கன்னி, மகரம், கும்பம் இலக்கினக்காரர்களுக்கு யோககாரகர்.

---

178 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 243

179 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 112

180 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 54

181 ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 218

சுக்கிரன் இலக்கினத்தில் அமைந்து ஆட்சி, உச்சம் பெற்றால் மாளவிகாயோகம் என்ற பஞ்சமகாபுருஷயோகம் ஏற்படும். இதன்மூலம் கவரும் தோற்றம், உறுதியான மனம், செல்வம், மனைவியால் மகிழ்ச்சி, நல்ல வாகனங்கள். ஏற்றுமதி வர்த்தகம் மூலம் செல்வம் சேரும். கற்றவர், கீர்த்தி, புகழ் உள்ளவர்.

பிருகத் ஜாதகம் - காதல் மற்றும் வியாபார நுணுக்கங்கள் தெரிந்தவர். மகிழ்ச்சியானவர்.

பலதீபிகை – அழகான உடல், தொழில் திறமை, கவரும் கண்கள், நீண்டஆயுள். மகிழ்ச்சியானவர்.

சாராவளி – அழகானவர், நீண்டஆயுள், மகிழ்ச்சி, விலை உயர்ந்த பொருள்கள் விற்பனை செய்தில் வல்லவர்.

சமத்கார சிந்தாமணி – உயர்ந்த மனிதர்கள் விரும்புவார்கள். வசதிகளை அனுபவிப்பவர். வர்த்தகப் பயணங்கள், அயல் தேசம் செல்லுதல் ஆகியவை இலக்கின பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

இரண்டாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

செல்வந்தர், கவரும் கண்கள், நல்லகுடும்பம், பணிவு, இளகியமனம் கொண்டவர். அழகான மனைவி. மேடம், கன்னி, கும்ப இலக்கினத்திற்கு இரண்டில் நின்றால் தனயோகம் ஏற்படும். செல்வாக்கு, செல்வத்தைச் சேர்க்கும்.

பிருகத் ஜாதகம் : இனிமையான பேச்சுத் திறன் உண்டு.

பலதீபிகை : கவிஞர், பல வழிகளில் செல்வம் சேரும்.

சாராவளி : செல்வந்தர், பணிவான பேச்சு, நல்லஉணவு பெறுபவர். புகழ், கீர்த்தி மிக்கவர். பலவித சுகங்களை உயர்வான முறையில் அனுபவிப்பவர்.

சமத்கார சிந்தாமணி : புத்திமான், இனியபேச்சு, நல்லதோற்றம், நல்ல ஆடைகள், அழகான பெண்கள்மேல் மோகம் ஆகியவை இரண்டாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

மூன்றாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

கஞ்சன், பொறுமைசாலி, அதிக சகோதரர்கள், விடா முயற்சியால் வெற்றி காண்பவர். சகோதரர்களிடம் ஏற்ற, இறக்கம் உண்டு. மூன்றாமதிபதி வலுப்பெற்றால் அதிக சகோதரர். பலவீனமடைந்தால்

சகோதரர் மறைவு. கன்னி, கும்ப இலக்கினக்காரர்களுக்குப் பாக்கியாதிபதி. நல்லது செய்வார்.

பிருகத் ஜாதகம் : கருமி, பிரச்சினை செய்பவர்.

சாராவளி : கஞ்சன், மகிழ்ச்சி, மனைவி ஆதிக்கம், துரதிர்ஷ்டசாலி. கோழை.

சமத்கார சிந்தாமணி : பெண்களைப் பிடிக்காது, சகோதர, சகோதரிகளை இழக்க மாட்டார். தைரியம் குறைவு ஆகியவை மூன்றாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

நான்காம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

புத்திசாலி, அழகானவர், மன்னிக்கும் குணம் உள்ளவர். நான்காம் அதிபதி வலுப் பெற்றால் பல்லக்குகள், தங்கம், குதிரை போன்ற பல வகை செல்வங்கள் உண்டு. நான்காமிடத்தில் ஆட்சி, உச்சம் பெற்றால் மாளவியா யோகம் பெற்று அற்புதயோகம் தருவார். கும்ப இலக்கினத்திற்கு 4, 9ஆமிடம். இடபம், கன்னி இலக்கினத்திற்கு 2, 9க்குரியவராகி மேடத்தில் அமர்ந்தால் தனயோகம் தரும்.

பிருகத் ஜாதகம் : மகிழ்ச்சியானவர், நவீன டிசைன், யுக்திகள் தருபவர்.

பலதீபிகை : நல்லவாகனம், வீடு, நகைகள், ஆடைகள், வாசனை திரவியங்கள் உடையவர்.

சாராவளி : இளகியமனம், அழகானவர், நண்பர் மற்றும் உறவினருடன் மகிழ்ச்சி, வீடு, வாகனங்கள் உண்டு.

சமத்கார சிந்தாமணி : உயர்ந்தவர், பரிசுகள் தேடி வரும், சுபர் ஆகியவை நான்காம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஐந்தாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

மேதை, அமைச்சர் அல்லது படைத்தலைவர், அரசகௌரவம் உண்டு. கன்னி, மகரம், கும்ப இலக்கினத்திற்கு யோககாரகர்.

பிருகத் ஜாதகம் : கல்விமான்.

பலதீபிகை : புத்திமான், செல்வந்தர் அல்லது அரச கௌரவம் கிட்டும்.

சாராவளி : அமைச்சர் அல்லது நீதிமான், செல்வந்தர், வசதிகளை அனுபவிக்கும் பாக்கியம் உண்டு.

சமத்கார சிந்தாமணி : கடின உழைப்பால் வெற்றி, பெயர் புகழ் ஆகியவை ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஆறாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

உறவு பலம், ஆறாமதிபதி வலுத்தால் நண்பர்கள், எதிரிகள் அதிகம்.

பிருகத் ஜாதகம் : எதிரிகள் அழிவர்.

பலதீபிகை : போராடி வெல்பவர், பல பெண்கள் தொடர்பு உண்டு.

சாராவளி : மனைவி விரோதம், அதிக எதிரிகள், கீழான குணம் உண்டு.

சமத்கார சிந்தாமணி : அதிக செலவு, அபாயகரமான எதிரிகள், முயற்சி வெற்றி பெறாது. குரு, தந்தை உதவி இல்லை ஆகியவை ஆறாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஏழாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

வாகனவசதி, சகோதரர், மனைவி, முயற்சிகளில் வெற்றி, சுபர் தொடர்பு, மாமனார்மூலம் சொத்து சேரும், எப்போதும் பெண்கள் சூழ இருப்பார். மாளவிகாயோகம் தருவார்.

பிருகத் ஜாதகம் : ஆர்வம் உள்ளவர்.

பலதீபிகை : செல்வந்தர், செல்வாக்கு உண்டு.

சாராவளி : அனைவருக்கும் நண்பர், பொதுசனத் தொடர்பு நன்று. அதிர்ஷடம் உள்ளவர். இனிமையானவர், பயணம் செல்பவர்.

சமத்கார சிந்தாமணி : கவர்ச்சியானவர், கற்பனா சக்தி அதிகம், பின்னலாடை வர்த்தகத்தில் நாட்டம் ஆகியவை ஏழாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

எட்டாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பலதீபிகை : நிலபுலன் உண்டு. நீண்டஆயுள் உண்டு.

சாராவளி : நீண்டஆயுள், செல்வம், மகிழ்ச்சி, அரசன்போல வசதி நிறைந்த வாழ்க்கை உண்டு. அயல்தேசப் பயணம் அடிக்கடி செல்பவர் ஆகியவை எட்டாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஒன்பதாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

சுபர் தொடர்பு மகாராஜயோகம் தரும். 4, 7 பாவாதிபதிகள் தொடர்பு அனைத்து அதிர்ஷடங்களையும் தரும். சுக்கிரன் கன்னி இலக்கினத்திற்கு 2, 9க்குரியவராகி இடபத்தில் இருத்தல், கும்ப இலக்கினத்திற்கு 4, 9க்கு உரியவராகித் துலாத்தில் இருத்தல் ஆகியன அற்புத தனயோகத்தைத் தரும்.

பிருகத் ஜாதகம் : தத்துவவாதி, அர்ப்பணிப்பு உணர்வு உள்ளவர். வியாபாரத்தில் ஈடுபாட்டுடன் கலை ஆர்வத்துடன் செய்வார்.

பலதீபிகை : அரசால் உயர்நிலை அடைவார். மனைவி, குழந்தை, நண்பரால் மகிழ்ச்சி, தொழில் நுணுக்கம் உள்ளவர்.

சாராவளி : உறுதியான உடல், நல்ல முடிவு, பெரும் செல்வம், தாராள மனம், வசதி வாய்ப்பு, நீண்ட பயணம் செய்பவர், குரு, விருந்தினர் உபசரிப்பு, தெய்வ காரியங்களில் நிறைவு.

சமத்கார சிந்தாமணி : பணம் கொடுக்கல், வாங்கலில் ஈடுபாடு, மகிழ்ச்சியான வசதியான வாழ்க்கை, மத நம்பிக்கை, வியாபாரத்தில் ஆர்வம். முன்னுரிமை ஆகியவை ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பத்தாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

கீர்த்தி உடையவர், குரு, சந்திரன் தொடர்பு, செல்வம், பாராட்டுகள், அதிர்ஷ்டம். கௌரவம் போன்ற அனைத்தும் ஏற்படும். பத்தில் கேந்திரம் பெற்று உச்சம் பெற்றால் மனைவியால் யோகம் உண்டு. சுப சுக்கிரன் பத்தில் இருப்பது அமலாயோகம். சாதகரின் பெருமையும், புகழும் காலம் கடந்து, கடல் கடந்து நிற்கும். குறை சொல்ல முடியாத குணவான்.

பிருகத் ஜாதகம் : செல்வந்தர், செல்வாக்கு உள்ளவர்.

பலதீபிகை : நற்குணம், நல்யோகம் உள்ளவர். உயர்ந்த அந்தஸ்து, பெயர், புகழ், மரியாதை கிட்டும். நண்பரால் சந்தோசம் கிட்டும்.

சாராவளி : தன் முயற்சியால் அந்தஸ்து, பதவி, புகழ், பெயர், மகிழ்ச்சி, பாராட்டு, விருதுகள், தனஇலாபம் அடைவார்.

சமத்கார சிந்தாமணி : மத நடவடிக்கைமூலம் செல்வந்தர் ஆவார். செல்வாக்கு பெறுபவர் ஆகியவை பத்தாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பதினோராம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

இளகிய மனம், கல்வி அறிவு, செல்வம், நிலபுலங்கள், வாகன வசதி உண்டு. சுபர் தொடர்பில் நல்லவழிகளில் செல்வம் சேரும். 11ஆமிட சுக்கிரன் கன்னி இலக்கினத்திற்கு 2, 9க்கு உரியவர், மகரத்திற்கு 5, 10க்கு உரியவர், கடகத்திற்கு 4, 11க்கு உரியவர், இடப இலக்கினத்திற்கு 11இல் உச்சம் அடைவது மிகநல்ல யோகம். தனஇலாபம் சேரும்.

பிருகத் ஜாதகம் : சாதகர் அதிர்ஷ்டம், வளமை உடையவர்.

பலதீபிகை : செல்வந்தர், செல்வாக்கு உள்ளவர். பல பெண்கள் தொடர்பு உண்டு. வாழ்க்கை வசதிகளை அனுபவிப்பவர்.

சாராவளி : மகிழ்ச்சி, மிகப் பெரும் பொருளாதார நிதி ஆலோசகர்.

சமத்கார சிந்தாமணி : அழகானவர், நல்லநடத்தை, புகழ், உண்மையை விரும்புவார். அதிர்ஷ்டம், நற்குணங்கள், செல்வம், அரசன் போன்ற வாழ்க்கை உண்டு. பதினொன்றில் சுக்கிரன் சுபர் ஆகியவை பதினோராம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பனிரெண்டாம் பாவகத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

சுபர் தொடர்பு இருந்தால் செல்வாக்கு, செல்வந்தர், அயல்தேசப் பயணம். சொர்க்கம் போவார். வியாபாரத்தில் திறமைசாலி.

பலதீபிகை - வசதிகளை அனுபவிப்பவர். பல பெண்கள் தொடர்பு உண்டு.

சாராவளி - பருத்த உடல், கருமி, மகிழ்ச்சி உள்ளவர். பெண்களால் ஆதிக்கம்.

சமத்கார சிந்தாமணி - தன் பெயர், புகழ், தானே அழிப்பார். நண்பரோடு பகை ஆகியவை பன்னிரண்டாம் பாவத்தில் சுக்கிரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

2.8.2. பன்னிரு பாவங்களில் சந்திரன் இருப்பதால் ஏற்படும் பலன்கள்

மனம், கற்பனை சக்தி, மற்றவரோடு தொடர்பு, பின்னலாடை வர்த்தகம், வியாபாரத்தில் ஆளுமை, கடல் பயணம், மனஅமைதி, இதயம், மற்றவருக்குச் செய்யும் சேவை, சக்தி, குழந்தை பிறப்பு ஆகியன சந்திரனின் முக்கியமான காரகங்கள் ஆகும். சூரியன், செவ்வாய், குரு ஆகியோர் சந்திரனின் நண்பர்கள்.

இலக்கின பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிஷி கூறுவது - அழகான தோற்றம், நிலையற்ற மனம், பயணம், மகிழ்ச்சி, சந்திரன் மேடம். இடபம். கடக இராசிகளில் இருந்தால் சாத்திர அறிவு, செல்வம், செல்வாக்கு, இனிமையான பேச்சு, நல்லஉடல் அமைப்பு இருக்கும். சுபர் பார்வை சுப பலங்கள் கூடும். சந்திரன் இலக்கினத்தில் இருந்தால் அழகாக இருப்பார். நீர்நிலை அருகாமையில் வசிக்க விரும்புவார் அல்லது சுற்றுலாப் பயணம் நிமித்தம் செல்வார். வளர்பிறைச் சந்திரன் விருச்சிகம், துலாம், மீனம் இலக்கினத்தில் அமைவது நன்மையைத் தரும். பெயர். புகழ், செல்வம் தரும் அற்புத யோகம்.

வராகிமிகரர் - சந்திரன் மேடம், இடபம், கடக இலக்கினங்களில் இருப்பது அல்லது வளர்பிறைச் சந்திரனாக இருந்தால் சாதகர் அழகானவர், கற்பனைத் திறன் உள்ளவர். அயல்தேச வியாபாரத்தில் நாட்டம் உள்ளவர்.

சாராவளி - மேடம், இடபம், கடகம் இலக்கின சாதகர் செல்வந்தர், யோகம் உள்ளவர். வாழ்க்கை வசதிகள் உள்ளவர். ஆடை விற்பனை, டிசைன் வடிவமைப்பதில் தேர்ந்தவர் ஆகியவை இலக்கின பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

இரண்டாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி - அழகானவர், செல்வந்தர், எளிதில் திருப்தி அடைபவர். புகழ், மகிமை உடையவர். சாதனை புரிபவர் சேர்க்கை அல்லது வளர்பிறைச் சந்திரன் உயர் கல்வி, செல்வாக்கு, செல்வம் சேர்க்கும். மேடம், இடபம், கடகம் இராசியினர் சாதனை படைப்பர்.

வராகிமிகரர் - பெரியகுடும்பம், சுகவாசி, செல்வந்தர், நுட்பஅறிவு, திறமை கொண்டவர். வியாபாரத் திறமை, அயல்தேச வர்த்தகம் செய்வார்.

சாராவளி – வசதி, வாய்ப்பு, செல்வம் உண்டு. செல்வாக்கு உள்ளவர். அதிகம் பேசமாட்டார். தொழில் மேன்மை அடைவார். மேடம், இடபம், கடகம், இலக்கின சாதகர் செல்வந்தர், செல்வாக்கு உள்ளவர், தேஜஸ் உண்டு. வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்பவர்.

சமத்கார சிந்தாமணி – செல்வந்தர், வசதி, வாய்ப்பு உண்டு. நல்லஉடல் நலம். பாசம் உள்ளவர். கடகம் 6, 8, 1ஆம் வீடுகளில் சந்திரன் அமரக்கூடாது ஆகியவை இரண்டாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

மூன்றாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

குறைவான சகோதரிகள், மூட்டுவலி உண்டு. மீன இலக்கினம், 3ஆம் வீட்டில் சந்திரன் உச்சம் பெற்றால் நல்லவளமை உண்டு.

சாராவளி : சகோதரர்களைக் காப்பாற்றுவார். வீரம், ஆரோக்கியம், பலம், கீர்த்தி, செல்வம் உள்ளவர். ஆடை ஏற்றுமதி செய்வார்.

சமத்கார சிந்தாமணி : தூரதேச வியாபாரம், பணம் சம்பாதிப்பார். கடல்கடந்து திரவியம் தேடுவார். செல்வாக்கு உள்ளவர், சகோதரர்களால் மகிழ்ச்சி அடைவார். சமய நடவடிக்கையில் புகழ் ஆகியவை மூன்றாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

நான்காம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பத்தாம் வீட்டைப் பார்ப்பதால் அரசவாழ்க்கை. துலாம், விருச்சிகம், மீனம் இலக்கினம் சிறந்த பலன் உண்டு. அரச வாழ்க்கை, அரச பதவி, உயர்ந்த அந்தஸ்து, வாகன வசதி, செல்வாக்கு உண்டு. தாய் மேல் பாசம், பால் பண்ணை உடையவர். விவசாயம், வியாபாரத்தில் பொருள் ஈட்டுவார்.

வராகிமிகரர் - மகிழ்ச்சியானவர்.

சாராவளி – உறவு பலம், வீடு, வாகனம், வசதிகள், மகிழ்ச்சி உண்டு. கடல் கடந்து தொழில் செய்வார்.

சமத்கார சிந்தாமணி - அந்தஸ்து, உயர்ந்த பதவி, இல்வாழ்க்கையில் மிக சந்தோஷம். மழலைச் செல்வம் உண்டு. மதிப்பு, புகழ் சேருதல் ஆகியவை நான்காம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஐந்தாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

தெய்வ பக்தி, ஆராதனை செய்பவர். அழகான மனைவி, முன்கோபி. மார்பகத்து இடையே மச்சம், கால்நடைச் செல்வம் உண்டு. சாத்வீககுணம் உண்டு. கடும்உழைப்பாளி, பால் வளம் உண்டு. அதிர்ஷ்டம், வசதி, வாய்ப்பு, நற்காரியங்களில் ஈடுபாடு. தெய்வபலம், இராஜயோகி, கடல்கடந்து பயணம், வியாபாரத்தில் ஈடுபாடு.

வராகிமிகரர் - மக்கள் செல்வம் உண்டு. பிரியம் அதிகம்.

சாராவளி : பணிவானவர், கற்றவர், தானியம், ஆடைகள், வியாபாரம். நல்லநட்பு, செல்வாக்கு உள்ளவர்.

சமத்கார சிந்தாமணி : குழந்தைகளால் மகிழ்ச்சி, விவசாயம், வங்கித் தொழிலில் பணம் ஈட்டுவது ஆகியவை ஐந்தாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஆறாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி : ஏழ்மை, நோயாளி, தீயகோள் சேர்க்கை பாபச் செயல்கள் செய்வார். அபாயகரமான எதிரிகள், சண்டைப் பிரியர். வயிற்றில் நோய் உண்டு. நீர் சார்ந்த இடங்களில் கண்டம் உண்டு. சுபர் பார்வை ஓரளவு நன்மை தரும். அசுபர் பார்வை தீயபலன் கூட்டும்.

வராகிமிகரர் - அதிகமான எதிரிகள், சீரண சக்திக் குறைவு, முன்கோபம், சோம்பேறித்தனமான செயல்கள், உடல் உறவில் ஆர்வம் இன்மை.

சாராவளி : வயிற்றுப் பிரச்சினை, அற்பாயுள்.

சமத்கார சிந்தாமணி : அரசனை எதிர்ப்பவர், தன் சுய முயற்சியால் பொருள் ஈட்டுவார். எதிரிகளை வெல்பவர். தாய்ப்பாசம் அற்றவர் ஆகியவை ஆறாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஏழாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி : இனிமையான பேச்சு, விரைவில் திருமணம், கண்நோய், பெண்கள் மேல் அதிகப் பிரியம், அறுவை சிகிச்சை வரலாம். அரசு உதவி உண்டு. சகல வசதிகளையும் அனுபவிப்பார்.

வராகிமிகரர் - பொறாமை உடையவர், மனைவியை அதிகம் நேசிப்பார்.

சமத்கார சிந்தாமணி : உள், வெளிநாட்டு வாணிபத்தில் இலாபம் உடையவர். இனிப்பு உணவு விருப்பம் அதிகம். பேராசை ஆகியவை ஏழாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

எட்டாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

தண்ணீரால் விபத்து, தீய இடம், வாகன வசதிகள் உண்டு, சந்திரன் வலுப்பெற்றால் நீண்டஆயுள். இல்லையெனில் மத்திமஆயுள்.

வராகிமிகரர் - தீயபுத்தி, நோய் உள்ளவர்.

சாராவளி : புத்திமான், பெருமை, புகழ் உண்டு. மெலிந்த உடல் வாகு.

சமத்கார சிந்தாமணி : பயந்தவர், நோயாளி, துன்பம் உண்டு. சுபர் குரு பார்வை பெற்றால் நல்ல பலன்கள் ஆகியவை எட்டாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

ஒன்பதாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி : தர்மவான், நிரம்பப் படித்தவர், குணம், கிணறு, பசுமாடுகளுக்கு இருப்பிடம் அமைப்பவர். நல்ல குழந்தைகள், வசதி உடையவர், அதிர்ஷ்டம், நீண்ட ஆயுள், அயல் தேச வாணிபத்தில் ஈடுபாடு உள்ளவர். கடகச் சந்திரன் இராஜயோகத்தைத் தரும். கன்னி இலக்கினத்திற்கு நல்லயோகம் தரும்.

வராகிமிகரர் - நல்ல குழந்தைகள், செல்வம், நண்பர்கள், உறவினர் உண்டு. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபாடு உண்டு.

சாராவளி : கடவுள் பக்தி, பெற்றோரிடம் பணிவு, மகிழ்ச்சி, புத்திக்கூர்மை, நல்ல குழந்தைகள் உண்டு. எதிர்பாலரைக் கவர்ந்து ஈர்ப்பார். வணிகத்தில் நாட்டம், மேன்மை உண்டு.

சமத்கார சிந்தாமணி : பிராமணரையும் கவருவார். அதிர்ஷ்டம் உள்ளவர். பாக்கியவான், தைரியசாலி ஆகியவை ஒன்பதாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பத்தாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி : கல்வியில் சாதனை, புகழ். கடவுள் பக்தி, இரக்கமனம் உண்டு. நற்குணங்கள் உண்டு. யோகசாதகர். சுபச்சந்திரன் ஏற்றம் தரும். இராஜயொகம், கல்வி மேன்மை, துலாம் இலக்கினம் மிகுந்த இராசயோகம்.

வராகிமிகரர் - எடுத்த காரியங்களைச் சிறப்பாக முடிப்பவர். நற்குணம், செல்வம், வலிமை, மதிநுட்பம் ஆகியவை பத்தாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பதினோராம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி - அறிஞர், குழந்தைகள் உண்டு. மற்றவர்க்கு உதவுபவர். நல்ல குணங்கள் கொண்டவர். சுக்கிரன், சந்திரன் சேர்க்கை வாகனவசதி தரும். நல்ல கல்வி, சொந்தநிலங்கள் அதிர்ஷ்டம் தரும். மற்றவரைப் போற்றிப் பாதுகாப்பர். எளிதில் பொருள் ஈட்டும் வாணிபத்தில் இருப்பார். கடக இலக்கினக்காரருக்குச் சிறந்த இராஜயோகம் உண்டு.

வராகிமிகரர் - புகழ், செல்வம், வாகன வசதி, அயல்தேசப் பயணம் உண்டு.

சாராவளி – செல்வம், குழந்தைகள், புகழ், கீர்த்தி, நீண்டஆயுள், நண்பர்கள், வேலை ஆட்கள், வலிமை உடையவர், சிறந்த சிந்தனாவாதி.

சமத்கார சிந்தாமணி : அரசமரியாதை, பட்டங்கள், அதிகாரம், ஆடைகள் கிடைக்கும். செல்வந்தன், அழகிய பெண்களை அனுபவிப்பவன். அயல்தேசப் பயணம், வணிகம் ஈடுபாடு ஆகியவை பதினோராம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

பனிரெண்டாம் பாவகத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிசி : பணம் விரயம், கோபம் உள்ளவர், தீய வழிகளில் பணம் ஈட்டுபவர்.

வராகிமிகரர் - உடல் ஊனமள்ளவர், தந்திரகுணம் உள்ளவர்.

சாராவளி – சோம்பல் உடையவர்கள், கண் நோய் உள்ளவர், தீயோர் சேர்க்கை.

சமத்கார சிந்தாமணி – எதிரிகள் தொல்லை, சுபர் பார்வை நல்லவழிகளில் செலவு ஆகியவை பன்னிரண்டாம் பாவத்தில் சந்திரன் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

2.8.3. பன்னிரு பாவங்களில் இராகு, கேது நிற்பதால் ஏற்படும் பலன்கள் இராகு / கேது தாக்கத்தை ஏற்படுத்தும் நிழல் கோள்கள். எந்த இராசியில் நிற்கின்றதோ அந்த இராசி அதிபதியின் குணம் / தாக்கத்தை ஏற்படுத்தும். இராகு தந்தைவழி தாத்தாவையும். கேது தாய்வழி தாத்தாவையும் குறிக்கும்.

இலக்கின பாவகத்தில் இராகு, கேது நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பிருகு மகரிஷி - மனைவிக்கு குறைபிரசவம், மேடம், இடபம் அல்லது கடகம் இலக்கினம் ஆகி அங்கு இராகு / கேது இருக்கச் சாதகர், இளகியமனம் உள்ளவர், வசதிகளை விரும்பி அனுபவிப்பவர்.

பிருகத் சாதகம் - சாராவளி – விளக்கம் எதுவும் இல்லை.

பலதீபிகை - இராகு - அற்பஆயுள், அதிகாரம் உண்டு. உடலின் மேற்பாகத்தில் நோய்கள் உண்டு.

கேது – நன்றி மறப்பவர், மகிழ்ச்சி இல்லாதவர், வஞ்சகர், தீயவர் சேர்க்கை உண்டு. உடலில் ஊனம் உண்டு. பதவி கிடைக்காது.

சமத்கார சிந்தாமணி - இராகு – எதிரிகளை அழிப்பார், மற்றவர் கட்டுப்பாட்டில் இருப்பார். பற்றற்று இருப்பார்.

கேது – தொல்லை செய்பவர், சுவாசக் கோளாறு ஆகியவை இலக்கின பாவத்தில் இராகு – கேதுக்கள் நிற்பதால் ஏற்படும் பலன்கள்.

இரண்டாம் பாவகத்தில் இராகு, கேது நிற்பதால் ஏற்படும் பலன்கள்

ஏழை, நோயாளி, குழந்தைகள் இல்லாதவர், கருமைநிறம் உள்ளவர்.

பலதீபிகை - இராகு – வில்லங்கம் ஆனவர். கோபக்காரர், வாயில் நோய் உண்டு. அரசு ஆதரவு பெற்று செல்வந்தர் ஆவார்.

கேது – கல்வி, செல்வம் இல்லை. மோசமான பேச்சு, கண்பார்வை பாதிப்பு உண்டு. மற்றவரைச் சார்ந்திருப்பார்.

சமத்கார சிந்தாமணி - இராகு – அஞ்சாதவர், குடும்பம் அழியும். பொய்யர், சொத்தைக் காக்க எதிரிகளை அழிப்பார்.

கேது – வாயில் நோய் உண்டு. அரசவிரோதம் உண்டு. சொத்தை இழப்பார். குடும்பத்தாரால் தொல்லைகள்.

